

"கல்வி, ஒருவனுடைய இயற்கையான அறிவை மேலும் வளர்க்கும். கூர்மையாக்கும்; நற்செயல் புரிவதற்குரிய ஆற்றலைத் தூண்டிவிடும்."

"குழந்தைகள் எப்போதும் கண்களினுல் கற்றுக் கொள்வதைவிடக் காதுகளினுல்தான் அதிகம் கற்றுக் கொள்கின்றனர்."

"தாய்மொழிகளுக்குரிய உன்னத இடத்தைக் கொடுக்காத எந்தக் கல்வித் திட்டமும் கல்விப் பிரச்சினையின் விளிம்பைக்கூடத் தொடத் தகுதியற்றதாகும்."

—அண்ணல் காந்தி


# தமிழரசு

மலர்-5 இதழ்-24

16-6-1975




# கல்விச் சிறப்பிதழ்






# அனாதைக் குழந்தைகளுக்கு அருள்மிகு கருணை இல்லம்

ஏறத்தாழ 25 ஆண்டுக் காலமாகச் சென்னையில் நான் வாழ்ந்து வருகிறேன் என்றாலும் இன்று முதன் முதலாக கபாலீசுவரர் ஆலயத்தில் நுழைந்திருக்கின்றேன்.

ஆண்டவன், அனாதை ரட்சகன் என்பதோடு 25 ஆண்டுக் காலத்திற்கு முன்பு ஆண்டவனைப் பாராட்டுவதோடு காரியம் முடிந்தது. உண்மையிலேயே ஆண்டவனுடைய ஆலயங்கள் அனாதைகளை ரட்சிக்கின்ற இடங்களாக அமைய வேண்டும் என்கிற சமரச உடன்பாட்டின் காரணமாகத்தான் இன்றைக்கு இந்த விழாவில் அடிகளாரும், வாரியாரும் கலந்து கொள்கிறார்கள்.

அவர்கள் வந்து இந்தக் காரியத்தை வாழ்த்த வேண்டும் என்று நாங்கள் கேட்டுக் கொண்டோம். அவர்கள்வந்து இதற்குத் தேவையான முத்திரையைக் குத்தி விடுவார்களானால் பிறகு மறுப்பு எங்கேயிருந்தாவது எழுந்தாலும், அதற்கு மதிப்பு இருக்காது என்பது எங்களுக்குத் தெரியும். ஆலயங்களில் இருக்கிற வருமானத்தை, தொகையை, பொருளை இப்படி அனாதைகளுக்காக நடத்தப்படுகிற இல்லங்களுக்காகச் செலவழிக்கலாமா, ஆண்டவனின் காரியங்கள் தடைபட்டு விடாதா, இது தேவைதானா என்ற மறுப்பு, அனாதைச் சிறுவர்களின் மீது அவர்களுக்கு எழுகின்ற எரிச்சலின் காரணமாக உருவாகிறதோ, இல்லையோ இந்தக் காரியங்களைச் செய்கிற எங்கள் மீது ஏற்படுகின்ற இயல்பான எரிச்சலின் காரணமாக அனாதைப் பிள்ளைகள் கேடுற நேருமே என்கிற அச்சத்தின் காரணமாகத்தான் வாரியாரை, அடிகளாரைப் போன்றவர்கள் இந்த விழாவிற்கு வருகை தந்து இதற்குத் தங்களுடைய முத்திரையைக் குத்த வேண்டும் என்று நாங்கள் விரும்பினோம். அவர்களுக்கு மேல் ஆண்டவனிடம் அதிக பக்தி உள்ளவர்களோ, ஆண்டவனைக் காப்பாற்றக் கூடியவர்களோ வேறு யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே அவர்களே வந்துநற்சான்றிதழ்களை வழங்கிவிட்ட பிறகு நாங்கள் தொடர்ந்து துணிந்து இந்தக் காரியங்களை ஒவ்வொரு ஆலயத்திலும் செய்து கொண்டேயிருப்போம்.

வாரியார் பேசும்போது, ஆண்டவனே அனாதை, அந்த அனாதையின் ஆலயத்தில் அனாதைக் குழந்தைகளுக்கும் இல்லம் அமைப்பது பொருத்தமுடையது என்று குறிப்பிட்டார். நான் இன்னொன்றையும் சொல்ல வேண்டுமேயானால், என்னுடைய தந்தையே ஓர் அனாதை. என் தந்தை முத்துவேலர் பிறந்த ஏழாவது நாளில் தன் தாயாரையும் அடுத்த ஓரிரு திங்களில் தன் தந்தையையும் இழந்தார். திருக்குவளை என்ற சிறு கிராமத்தில் தனித்து அனாதையாக விடப்பட்ட அந்தக் குழந்தையைத் தில்லையம்மாள், சர்க்கரையம்மாள் என்கிற இரண்டு பெண்மணிகள் எடுத்து வளர்த்த காரணத்தால்தான் அவர் வளர்ந்தார், வாழ்ந்தார்; என்னையும் பெற்றார்; இன்று அனாதைகளுக்கான இல்லங்களை அமைக்கின்ற பணி நடைபெறுகிறது. ஆக அனாதைகளிடம் எனக்கு அன்பு ஏற்பட அதுவும் ஒரு காரணம் ஆகும். என் தந்தையை

யாருமே எடுத்து வளர்க்காமல் இருந்திருந்தால், அந்த அனாதையிடமிருந்தும் ஏதாவது நல்லவைகள் தோன்றஇயலும்; பத்து அனாதைகளில் ஒன்றிலிருந்தாவது பத்து நல்ல காரியங்கள் தொடங்கிட முடியும்.

இன்றைக்கு தமிழகத்தில் ஜூன் 3-ஆம் தேதியன்று மூவாயிரம் அனாதைப் பிள்ளைகளை 52 இல்லங்களில் நாம் சேர்க்கிறோம். அவர்கள் தங்களுடைய படிப்பு முடிகின்ற வரையில் இதிலே சேர்ந்து வளரலாம். படிப்பு முடிந்த பிறகு வேலை வாய்ப்புகளில் அந்த அனாதைச் செல்வங்களுக்கு நாம் முன்னுரிமை வழங்க முடியும் என்ற அறிவிப்போடு திட்டம் தொடங்கப்பட்டிருக்கிறது.

அனாதை இல்லங்களுக்குச் செல்வம் மிகுந்தவர்கள் உதவி செய்ய வேண்டும். யாரோ டெல்லியில் இருப்பவர்கள் வரியாக எடுத்துக் கொண்டு போவதை இங்கே இருப்பவர்களுக்கு வாரி வழங்கக்கூடாதா என்று வாரியார் கேட்டார். பெயரே வாரியார் என்று இருப்பதால் வாரி வாரி வழங்கக்கூடாதா என்று கேட்டார்.

நான் ஒரு வேடிக்கையான கதையைச் சொல்வேன். ஒரு செல்வந்தரிடம் ஒரு அனாதை ஆசிரமம் நடத்துகின்றவர் சென்று, ''நான் அனாதை ஆசிரமம் நடத்துகின்றேன்; அதற்கு நீங்கள் ஏதாவதுஉதவி செய்ய வேண்டும்'' என்று கேட்டார். உடனே, செல்வந்தர், ''அப்படியா, நான் இந்தத் தெருவிலிருந்துஇரண்டு மூன்று அனாதைக் குழந்தைகளை அனுப்பி வைத்து உதவி செய்கிறேன்'' என்று சொன்னதாக ஒரு வேடிக்கைக் கதை உண்டு. அப்படி இல்லாமல் பொருள் நிறைந்தவர்கள் பொருள் உதவி செய்ய வேண்டும். இப்படிப்பட்ட காரியங்கள் பொது மக்களுடைய ஒத்துழைப்போடு நடைபெற்றாக வேண்டும். அரசின் சார்பில் பரந்தஅளவில்நாம்இன்றைக்கு இத்திட்டத்தை மேற்கொண்டிருக்கிறோம் என்றாலும் பொது மக்களையும் ஈர்க்கத் தக்கவகையிலே அவர்களும் இதில் பங்கு பெற வேண்டும் என்ற நிலைமையில் அவர்கள் தொடர்பு கொண்டிருக்கிற ஆலயங்கள் இதிலே ஒரு விகிதாசாரத்தைச் செலவில் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று முறைப்படுத்தி, ஆகிற செலவில் 75 சதவிகிதத்தை அறநிலையத் துறையும், 25 சதவிகிதத்தை அரசும் மேற்கொள்ள வேண்டுமென்றும், தொடக்கத்தில் இதற்காகக் கட்டப்படுகின்ற கட்டடங்களுக்கான செலவு முழுவதையும்—அதாவது இப்போது முதலில் தொடங்கப்படுகின்ற 52 இல்லங்களைக் கட்டுவதற்கான செலவு முப்பது இலட்சம் ரூபாயை அரசாங்கமே செய்வது என்றும் திட்டமிட்டு இன்றைக்கு இதனை நாம் அறிவித்திருக்கின்றோம்.

இதிலே ஆண்டவனுக்கு விரோதமான காரியம் எதுவும் இல்லை; இது ஆண்டவனுக்கு உடன்பாடான காரியம் என்பதையும் அவர்கள் விளக்கமாக இங்கே குறிப்பிட்டார்கள். வாரியார் ஆரம்பத்தில் நெருப்பை எடுத்துக் காட்டி, நெருப்பு சிவம்; அதிலே இருக்கிற சூடு சக்தி; செம்மை கணபதி; ஒளி முருகன் என்று சொன்னார். இந்த நான்கும் சேர்ந்த நெருப்பே கடவுளாக இருந்தால், அந்த ஒரு கடவுளையே வணங்கலாகாதா என்ற என்னுடைய கேள்விக்கு அவர்கள் பதில் அளிக்கும் வகையில் தான் ஒரு கட்டடத்திற்கான பிளானை பலரும் போடுவதைப் போல, பல கடவுள்கள் சொல்லப்படுகிறது என்று குறிப்பிட்டார்கள். நாங்கள் எல்லாம் பிளான் எல்லாம் போடப்பட்டு வீடுகளைக் கட்டிய பிறகு குடி ஏறலாம் என்று கருதுகிறோம். பிளான் போடும் போதே குடியேறிவிட்டால் வீடு கட்டி முடியாது என்பதற்காகத்தான் வாரியார் போன்றவர்கள், அடிகளார் போன்றவர்கள், தெய்வீகப்பேரவையில்உள்ளவர்கள் அத்தனை பேரும் சேர்ந்து இது தான் கடவுள் என்ற ஒரே கடவுளைக் காட்டி விடுவீர்களானால் சங்கடங்கள் இல்லாமல் போய்விடும்.

அவர்கள் சொன்ன நெருப்பு சிவனாக; சூடு சக்தியாக, செம்மை கணபதியாக, ஒளி முருகனாக இங்கே ஒருமித்துச் சொல்லப்பட்ட நேரத்தில் நான் நினைத்துக் கொண்டேன்.

இன்றைய குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு வாரியார் எவ்வளவு அருமையான

## முதல்வர் கலைஞர்

உதாரணத்தைச் சொல்கிறார் என்று நினைத்துக்கொண்டேன். கணவன், மனைவி, இரண்டு குழந்தைகள் என்று சொன்னார்கள். இரண்டுக்கு மேல் இப்போது வேண்டாம் என்றுதான் இன்றைக்கு அரசாங்கம் சொல்லிக் கொண்டிருக்கிறது. அப்படி ஆண்டவனே அந்தக் காலத்தில் நடத்திக் காட்டியிருக்கின்றான்; அதற்குப் பிறகும் இது ஆண்டவனுக்கு விரோதமான காரியம் என்று இன்றைக்கு இருக்கிற மதத்தினர் கருதுகிறார்களே, அந்த அச்சத்தை விட வேண்டும். இந்த நான்கும்சேர்ந்தநெருப்பு கூட வெறும் நெருப்பாக இருந்தால் அது அணைந்துவிடக் கூடும். அணையாத நெருப்புக் கோளமாக— என்றைக்காவது ஒரு நாள் அணைந்தால், அண்ட சராசரங்கள் எல்லாம் அழிந்து விடும் என்று சொல்லத் தக்க சூரியன்தான் பெரும் நெருப்பு; அணையாத நெருப்பு; அந்தச் சூரியனைத்தான் நாங்கள் தேர்ந்தெடுத்திருக்கிறோம். இது ஏதோ தேர்தல் பிரச்சாரம் என்று வாரியார் கருதிவிடக் கூடாது.

தை மாதத்தில் தமிழர்கள் கதிரவனைத்தான் வணங்குகிறார்கள்; ஏன் என்றால்அந்தக் கதிர்தான் உலகத்தை வாழவைக்கிறது; அந்தக் கதிரவனைக் கடவுள் என்பதும், நிலவைக் கடவுள் என்பதும். நிலத்தைக் கடவுள் என்பதும் அவரவர்களுடைய மனப் போக்கு, மனவளம், இயற்கைச் சூழ்நிலை இதற்கேற்ப அமைகிறது. நான் இந்த ஆராய்ச்சியில் அதிகமாக இறங்க விரும்பவில்லை.

ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்கிற அந்தக் கருத்தை நாங்கள் ஏற்றுக் கொண்டவர்கள் என்பதை அடிகளார் இங்கே சொன்னார். நாம் கடவுளை ஏற்றுக் கொள்கிறோமா இல்லையா என்பதல்ல வாதம்; கடவுள் நம்மை ஏற்றுக் கொள்கிறாரா இல்லையா என்பதுதான் வாதம். நெருங்கிப் பழகி ஒருவரோடு ஒருவர் உரையாடாத காரணத்தால் வேறுபாடுகள், முரண்பாடுகள் நம்மிடையே காணப்படுகின்றன. பத்து, பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் மாயவரம் பயணியர் விடுதியில், நாங்கள் இப்படிப்பட்ட பொறுப்புக்களுக்கு வராத காலத்தில்—அடிகளார் அவர்கள் தமிழகத்தில் ஆற்றல் மிகுந்த பேச்சாளர், அறி

வார்ந்த கருத்துக்களை நாட்டுக்குத் தருகிறவர் என்றவகையில் ஒளிவிட்டுக்கொண்டிருந்த காலத்தில் நானும் அவரும் சந்தித்து நீண்ட நேரம் பேசினோம். அப்போது என்ன கருத்துக்களை நாங்கள் பரிமாறிக் கொண்டோம் என்பது எனக்கும் அவருக்கும்தான் தெரியும்.

நெருங்கிப்பழகுகின்ற நேரத்திலே நாம் ஒரு மொத்தச் சமுதாயத்தை அழைத்துச் செல்வதற்கு நாம் எந்த வகையிலே அவர்களைப் பயிற்றுவிக்க வேண்டும் என்ற நல்ல நடைமுறைகளை எல்லாம் வகுக்கமுடியும். அண்மையில் கூட தெய்வீகப் பேரவை மாநாட்டை நாகர்கோவிலில் அடிகளார் போன்றவர்கள் கூட்டினார்கள். அவர்களும் சரி, வாரியார் போன்றவர்களும்சரி, அவர்கள் எல்லாம் கலந்து பேசி, சமயங்களை இணைத்து, ஆலயங்கள்,/ வழிபாட்டு முறைகள், வணங்குகின்ற முறைகள் எப்படி எல்லாம் இருந்திட வேண்டும் என்பதை ஒரு நிலைப்படுத்திட ஒரு நல்ல முடிவை அவர்கள் எல்லாம் சேர்ந்து எடுத்திட வேண்டும் என்ற ஒரு கருத்தும் இருக்கிறது.

நாங்கள் எல்லாம் கூட அந்தக் குழுவில் இருக்கத் தேவையில்லை; இருந்தால் எங்களுடைய கருத்து மிகுந்துவிட்டதாகச் சொல்லப்படும். ஆகவே வாரியார், அடிகளார் போன்றவர்கள் முயற்சி எடுத்து, ஒரு நிலைத்த—ஒரு முனைப்பட்ட கருத்தைத் தெரிவிக்க வேண்டும். இன்றைக்குக் கிறித்துவ சமுதாயம் வளர்ந்திருக்கிறதென்றால் என்ன காரணம் என்பதைச் சிந்தித்து, இஸ்லாமிய சமுதாயத்திற்கு அகில உலகத்திலும் இன்றைக்குப் புகழ் இருக்கிறது. ஒரு நிலையில் இருக்கிறார்கள்; ஒற்றுமையாக இருக்கிறார்கள் என்றால் அதற்கு என்ன காரணம் என்பதைச் சிந்தித்து, நான் இந்து மதம் என்று கூடச் சொல்லமாட்டேன், ஏனென்றால் இந்து என்ற சொல் ஆராய்ச்சிக்கு உரியது. ஆகவே இந்து மதம் என்று ஒன்று உண்டா இல்லையா என்பது வாதத்திற்கு உரியது. சைவ சமயம், வைணவ சமயம் என்றெல்லாம் சொல்லப்படுகிற இந்தச் சமயங்களுக்கிடையே ஓர் ஒற்றுமை உணர்வை ஏற்படுத்த அடிகளார், வாரியார் போன்றவர்கள், தமிழகத்தில் இருக்கிற பல்வேறு மடாலயங்களைச் சேர்ந்தவர்கள் எல்லாம் கூடி யோசித்து ஒரு நல்ல முடிவை அணுக வேண்டும்.

இன்றைக்கு ஆரம்பிக்கப்படுகிற இந்தத் திட்டத்தின்படி முதற் கட்டமாக இப்போது மூவாயிரம் பேர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள் என்றாலும் மொத்தமாக வந்திருக்கிற விண்ணப்பங்கள் சுமார் ஏழாயிரத்தைத் தாண்டுகிறது. 3,000 பேர் அதிலே இன்றைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இப்போது தொடங்குகிற 52 இல்லங்களோடு இல்லாமல் விரைவில் நூற்றுக் கணக்கான இல்லங்களை அமைக்க வேண்டிய அவசியமும் ஏற்படுகிறது.

அப்படி அவசியம் ஏற்படுகிற நேரத்தில் நம்முடைய தமிழகத்தின் பொருளாதாரச் சூழ்நிலைகள் சீர்பட, திட்டங்கள் நிறைவேற, அனாதை இல்லங்கள் தான் நிறைய இருக்கின்றனவே, ஆகவே குழந்தை பெறுவதால் ஆபத்தில்லைஎன்று கருதாமல் எதிலும் அளவோடு பெறுகின்ற காரியத்தை நம்முடைய சமுதாயம் பின்பற்ற வேண்டும். அனாதைகளை ரட்சிக்கக் கருணைஇல்லங்கள் உருவாகின்றன. ஒவ்வொரு ஆலயத்திலும் இனிமேல் அனாதைகள் வளர்க்கப்படுவார்கள் என்கிற தைரியத்தில் குடும்பங்கள் பெருகினால் பிறகு அரசாங்கமே அனாதையாகி அந்த அரசாங்கத்தைக் காப்பாற்ற ஏதாவது கருணை இல்லத்தை யாராவது ஏற்படுத்த மாட்டார்களா என்ற சூழ்நிலை ஏற்பட்டுவிடும். இதை வேடிக்கைக்காகச் சொல்லவில்லை. குடும்பக் கட்டுப்பாட்டுத்திட்டம் என்பது ஒரு நாட்டை வாழ வைக்கத் தக்கமகத்தான திட்டம். அந்தத் திட்டம் சரிவரச் செயல்படுத்தப்பட வேண்டும். அப்படிச் செயல்படுத்தப்படாத காரணத்தால் முழத் துண்டும் இல்லாமல், கிழிந்த சட்டையோடு, தெருவிலே உலவிக் கொண்டிருக்கிற நாய்களை விடக் கேவலமாக, மனிதர்கள் பெற்ற செல்வங்கள் இந்த மண்மீது நடமாடுகின்ற கோரமான காட்சியை நாம் கண்டு கொண்டிருக்கிறோம். அவர்களுடைய வாழ்வில் விளக்கேற்றி வைக்கத் தான் இந்த முயற்சியில் நாம் ஈடுபட்டிருக்கிறோம். அந்த விளக்கை யாரும் ஊதி அணைத்து விடாமல் இருக்க வேண்டும். இந்த விளக்கை ஏற்றி வைப்பது தவறு என்று யாராவது சொல்வார்களானால் இதுதான் உண்மையான விளக்கு, ஆண்டவனுக்குப் பிடித்தமான விளக்கு. இந்த விளக்கைத்தான் கடவுள் விரும்புவார் என்று வாதிட வல்லவர்களான வாரியார் அவர்களும், அடிகளார் அவர்களும் இன்று நல்ல காரியத்தை ஆரம்பிக்கத் துணை புரிந்ததற்காக நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இல்லங்கள் பொது மக்களுடைய ஒத்துழைப்போடு மேலும் மேலும் நல்ல முறையில் நடைபெற எல்லா வகையிலும் நீங்கள் துணை புரிய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**(மயிலாப்பூர் கபாலீஸ்வரர் ஆலயத்தில் 4—6—75 அன்று கருணை இல்லத் திறப்பு விழாவில் முதல்வர் ஆற்றிய உரை)**

## 83 ஆசிரியர்களுக்கு தேசிய விருது

**1974**-ஆம் ஆண்டு, தேசிய விருதுக்காக, 83 ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 53 பேர் துவக்கப் பள்ளி ஆசிரியர்கள்; 30 பேர் நடுத்தரப் பள்ளி ஆசிரியர்கள்; மாநிலங்கள், மத்திய நிருவாகப் பகுதிகள் ஆகியவற்றின் பரிந்துரைகள் மத்திய அரசுக்கு வந்தபின், விருது பெறுவதற்காக மேலும் 17 ஆசிரியர்கள் தெரிந்தெடுக்கப்படுவார்கள்.

1973-ஆம் ஆண்டு முதல், சிறந்த 2 ஆசிரியைகளுக்கும் சிறந்த 3 ஆசிரியர்களுக்கும் உயர் விருது வழங்கப்படுகிறது. 1974-ஆம் ஆண்டு தேசிய விருதுக்காகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ள ஆசிரியர்கள் பட்டியலிலிருந்து உயர் விருதுக்கான 4 பேர் தெரிந்தெடுக்கப்படுவார்கள். உயர் விருதுக்காகத் தெரிந்தெடுக்கப்படும் ஆசிரியர்களுக்கு, சிறப்பு நற்சான்றிதழும், ஆயிரம் ரூபாய் ரொக்கப்பணமும், கூடுதலாக, ஆயிரம் ரூபாய் மதிப்புக்குத் தேசிய சேமிப்புப் பத்திரங்களும் வழங்கப்படும்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த திரு. பிலோ இருதயநாத், திரு. ஆர். எஸ். சீனிவாசன், திரு. ஐ. பொன்னையா, திரு. கே. இராமசாமி, திரு. எம். குப்புசாமி ஆகிய துவக்கப் பள்ளி ஆசிரியர்களும் திரு. பி. ரங்கநாதம்பிள்ளை, திரு. வி. சீனிவாசன், திரு. என். கே. துரைவேலு ஆகிய நடுத்தரப் பள்ளி ஆசிரியர்களும் இந்த ஆண்டு தேசிய விருது பெற்றிருக்கிறார்கள்.

# புதிய பாதையில் தொழில் நுட்பக் கல்வித் துறை

தொழில் நுட்பக்கல்வியின் வளர்ச்சிக்காகவும் மேம்பாட்டுக்காகவும் பல புதிய திட்டங்கள் சோதனைக்காகமேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அண்மைக் காலத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் சிலவற்றின் தன்மை, பயன் முதலானவற்றைச் சுருங்கக் காண்போம்.

தேர்வுத் துறையில்தேவைப்படும் சீர்திருத்தங்களில் 'வினா வங்கி" முறை பற்றிப் பல்வேறு நிபுணர் குழுக்கள் பரிந்துரைத்து வந்துள்ளன. அதன் தேவை நன்கு உணரப்பட்ட போதிலும் அதனைச் செயல்படுத்துவதில்தான் தாமதமேற்பட்டு வந்துள்ளது. சோதனைத் திட்டமாகத் தொடங்கப்பட்டுள்ள ''வினா வங்கித்திட்டம்'' வாரியத்தின் ஆய்வுக்கு முன் வைக்கப்படுகின்றன. நல்ல திட்டங்களைப் பெருமளவில் செயல்படுத்து முன்னர், இத்தகைய சோதனைகளும் அவற்றிலிருந்து பெரும் படிப்பினைகளும் கூர்ந்து நோக்கத் தக்கனவாதலின் இவை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கல்வியின் தரம் குறைந்து வருவதைப் பற்றி அன்றாடம் விவாதங்கள் நிகழ்வதைக் காண்கிறோம். கல்வியின் தரம் குறையாதிருத்தல் மட்டும் இன்றி அதனை மேலும் மேலும் வளப்படுத்தும் கடமையும் நமக்குண்டு. அதற்கான வழிகள் பலவற்றை எண்ணிப் பார்க்கும்போது, குறைந்த விலையில் தரமான பாட நூல்கள் மாணவர்களுக்குக் கிடைப்பது அரிதாயிருப்பதை நோக்குகிறோம். விளைவாக ஆசிரியர்களிடமிருந்து வகுப்பில் பெரும் குறிப்புகளையே மாணவர்கள் மலையாக நம்பியிருத்தலையும் காண்கிறோம். இந்நிலை கல்வித் தரம் உயரத் தக்க சூழ்நிலையாகாது என்பதை உணர்கிறோம். தரமான பாடநூல்களைக் குறைந்த விலையில் வெளியிடும் திட்டமொன்றும் இவ்வாண்டில் செயல்படுத்தப்படுகின்றது. தற்சமயம் முப்பத்து ஆறு பாட நூல்களை வெளியிடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கல்விக்குரிய பயிற்று மொழி தாய் மொழியே என்பது பற்றிய கருத்து வேறுபாடுகள் இன்று மறைந்து வருகின்றன. ஆனால் குறிக்கோளை முழுமையாக அடைய நாம் வெகு தொலைவிலிருக்கிறோம். அனைத்திந்திய மட்டத்தில் தொழில் நுட்பக் கல்விக்கு இன்னும் ஆங்கிலமே பயிற்றுமொழியாக இருந்து வருகின்றது. தாய் மொழியில் பயின்றாலும், இன்னும் நெடுங்காலத்துக்கு ஆங்கிலத்தில் சரளமாகப் பழகும் திறன் இன்றியமையாதது. ஒரு பொறியாளர்க்குத் தொழில் துறையறிவுடன் ஆங்கில மொழியிலும் தாய் மொழியிலும் தேர்ச்சி மிகத் தேவை. இத்துறையிலும் புதிய சோதனையொன்றை மேற்கொண்டுள்ளோம். பொள்ளாச்சி நாச்சிமுத்து பல்தொழில் நுட்பக்கல்லூரியிலும் திருச்சி அரசினர் பல்தொழில் நுட்பக் கல்லூரியிலும் முதல் ஆண்டில் இரண்டு பாடங்கள் எல்லா மாணவர்கட்கும் தமிழில் கற்பிக்கப்படுகின்றன. இங்கு நோக்கத் தக்க ஒருகூறு, மாணவர்களைத் தமிழில் கற்போர், ஆங்கிலத்தில் கற்போர் என இரண்டாய்ப் பிரிக்காமல், பாடங்களைத் தமிழ்வழிப் பாடங்கள், ஆங்கில வழிப் பாடங்கள் எனப் பகுத்துள்ளமையாகும். இத்துறையில் பெற்றுள்ள பலன்கள் மேலும் முனைய ஊக்கந்தருகின்றன.



மாண்புமிகு
கல்வி அமைச்சர்
**நாவலர் நெடுஞ்செழியன்**

கல்வியில் தன்னாட்சி என்பதும் பத்தாண்டுகட்கு மேலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தாகும். ஆனால் இந்தியாவில் எந்தப் பல்கலைக் கழகமும் இதனைச் செயல்படுத்தியதாகத் தெரியவில்லை. இவ்வாறு பலரும் பரிந்துரைக்கும் கருத்தொன்று நடைமுறைக்குவாராதிருப்பது பெரும் வியப்பாகவே இருக்கிறது. பல்தொழில் நுட்பக் கல்லூரியளவில் தன்னாட்சி என்பதும் தாமோதரன் குழுவாலும், அனைத்திந்தியத் தொழில் நுட்பக் கல்விக் குழுவாலும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இத்துறையில் சிறு தொடக்கமாக இரண்டொரு பல்தொழில் நுட்பக் கல்லூரிகளுக்குத், தன்னாட்சியளிக்கும் திட்டமொன்றும் விரைவில் செயலாற்றப்படவிருக்கிறது.

தொழில் நுட்பத் துறையில் பெண் கல்வி இன்னும் பின்னிலையிலேயே இருந்து வருகின்றது. தமிழகத்தின் பல்தொழில் நுட்பக் கல்விக் கூடங்களில் இருக்கும் 4,800 இடங்களில் 405 தான் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. இவை, மூன்று மகளிர் பல்தொழில் நுட்பக் கல்லூரிகளில் தான் இருக்கின்றன. 5-ம் ஐந்தாண்டுத் திட்டத்தில் புதிய மகளிர் பல்தொழில் நுட்பக் கல்லூரிகளுக்கு இடமில்லை. இரண்டொரு கல்வி நிலையங்கள் தொடங்கப்பட்டாலும் பரவலான பலனை எதிர்பார்க்க முடியாது. எனவே 17-5-'74-ல் கூடிய அனைத்திந்தியத்தொழில் நுட்பக் கல்விக் குழு, இப்போதுள்ள ஆண்களின் கல்விக் கூடங்களிலேயே மகளிர்க்கும் வகுப்புகள் தொடங்கப் பரிந்துரைத்துள்ளது. இதனைச் செயல்படுத்துததற்கு முன்னோடியாக, திருச்சி அரசினர் பல்தொழில் நுட்பக் கல்லூரியில் இவ்வாண்டு 17 பெண்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இங்கு பெறும் அனுபவத்தைக் கொண்டு இத்திட்டம் மேலும் விரிவாக்கப்படும்.

இவையன்றிப் புதிய பாடத் திட்டங்கள்பலவற்றைச்செயல்படுத்தல், தொழில் வழி காட்டல், தொழில் நுட்ப ஆராய்ச்சிகளையும் அதற்கான வசதிகளையும் பெருக்குதல், ஆசிரியர் வளர்ச்சி முதலான பல திட்டங்களுடன் தொழில் நுட்பக் கல்வித் துறை புதிய பாதையில் அடியெடுத்து வைக்கிறது. பயணம் வெற்றி பெறும் என்ற நம்பிக்கை இருக்கிறது அதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

**28—11—74ல் மாநிலத் தொழில் நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி வாரியத்தின் 19 வது கூட்டத்தில் மாண்புமிகு கல்வி அமைச்சர் ஆற்றிய தலைமை உரையின் சுருக்கம்.**

# மறவாதீர்கள்;

# உங்கள் மகள் ஒருநாள்

# மணமகளாக அமர வேண்டியவள்!

திருமணம் என்றாலே-அதுவும் உங்களது மகளின் திருமணம் என்றால்—செலவுதான். அதற்கென இன்றே சேமிக்கத் துவங்கினால் எதிர்காலத்தில் எந்த செலவையும் சமாளிக்க இயலும். உங்கள் சேமிப்புத் தொகை உங்களுக்கு தக்க சமயத்தில் கைகொடுத்துதவும்.

பல சிறப்பு அம்சங்களுடன் உங்களுக்கென இரு சேமிப்பு திட்டங்களை நாங்கள் வழங்குகின்றோம். மாதச் சேமிப்புத் திட்டத்தின்படி ரூ. 20,000/- வரை டிபாசிட்டுகள் வரி விதிப்பின்றி ஏற்றுக்கொள்ளப்படும். ரெக்கரிங் டிபாசிட் திட்டத்தின் கீழ் ஒரு சிறப்புச் சலுகை அளிக்கப்படுகிறது—இதன் கீழ் கணக்குத் துவக்கியவர்கள் திடீரென மரணமடைந்தால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்கவேண்டிய தொகை முழுதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்த இரு திட்டங்களுக்கும் உங்களது சேமிப்புத் தொகையை உங்களது சம்பளப் பட்டியல் மூலம் மாதாமாதம் பிடித்துக்கொள்ள செய்யலாம். தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு அதிக வட்டி அளிக்கப்படுகிறது. அஞ்சலக காலவரை வைப்புத் திட்டங்களுக்கு 10% வட்டி அளிக்கப்படுகிறது.

இதோ சில முக்கிய விவரங்கள்

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| ரெக்கரிங் டிபாசிட் | 5/- | 375/- | ... |
| | 10/- | 750/- | ... |
| வளரும் மாதச் சேமிப்பு | 5/- | ... | 825/- |
| | 10/- | ... | 1,650/- |



இயக்குநர், சிறு சேமிப்புத் துறை, தமிழ் நாடு அரசு, சென்னை-600 002



# கல்வி கரையில

சுந்தர் —

'கல்வி சிறந்த தமிழ்நாடு' என்று தமிழ் நாட்டைப் புகழ்ந்து பாடியிருக்கிருர் புதுயுகக் கவிஞர் பாரதியார். கல்வி மாந்தர்க்கு மிகவும் தேவையானது என்பதை நமது தமிழ்ப் பெரும் புலவர்கள், பழங்காலத்திலிருந்தே வலியுறுத்தி வந்திருக்கிருர்கள். கல்வியின் பெருமையை எடுத்துக் கூறும் செய்யுள்களில் ஒரு சில இங்கே தொகுத்துத் தரப்பட்டுள்ளன. கல்வி கரையில என்பதை இந்தச் செய்யுள்கள் காலமெல்லாம் எடுத்துச் சொல்லிக் கொண்டிருப்பது உறுதி.

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.

—திருக்குறள்

குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி யழகே யழகு.

—நாலடியார்

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே
பிறப்போர் அன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும் மனந்திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக என்னு தவருள்
அறிவுடை யோனு அரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே

—புறநானூறு

அறம்பொருள் இன்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசை நாட்டும்—உறங்கவலொன்(று)
உற்றுழியும் கைகொடுக்கும் கல்வியின் ஊங்கில்லை
சிற்றுயிர்க்(கு) உற்ற துணை

—நீதிநெறி விளக்கம்

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே

—நறுந்தொகை

மன்னனும் மாசறக் கற்ருேனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்ருேன் சிறப்புடையோன்—மன்னற்குத்
தன்தேசம் அல்லாமல் சிறப்பில்லை; கற்ருேர்க்குச்
சென்ற விடமெல்லரம் சிறப்பு

—மூதுரை

பொன்பெறும் கற்ருன்; பொருள்பெறும் நற்கவி
என்பெறும் வாதி? இசைபெறும்; — முன்பெறக்
கல்லார், கற் ருரினத்த ரல்லார் பெறுபவே
நல்லா ரினத்து நகை

—சிறுபஞ்சமூலம்

இடைவனப்பும் தோள்வனப்பும் ஈடின் வனப்பும்
நடைவனப்பும் நாணின் வனப்பும்—புடைசால்
கழுத்தின் வனப்பும் வனப்பல்ல; எண்ணெ
டெழுத்தின் வனப்பே வனப்பு

—ஏலாதி

மனைக்கு விளக்கு மடவாள்; மடவாள்
தனக்குச்சால் பாகும் புதல்வர்—மனைக்கினிய
காதற் புதல்வர்க்குங் கல்வியே; கல்விக்கும்
ஓதிற் புகழ்சா லுணர்வு

—நான்மணிக் கடிகை

கைப்பொருள் கொடுத்துங் கற்றல்
கற்றபின் கண்ணு மாகும்
மெய்ப்பொருள் விளக்கு நெஞ்சின்
மெலிவிற்கோர் துணையு மாகும்...!
... ... ... ...

—சீவகசிந்தாமணி

மயிர்வனப்பும் கண்கவரு மார்பின் வனப்பும்
உகிர்வனப்பும் காதின் வனப்பும்—செயிர்தீர்ந்த
பல்லின் வனப்பும் வனப்பல்ல நூற்கியைந்த
சொல்லின் வனப்பே வனப்பு

—சிறுபஞ்சமூலம்

கண்ணிரண்டே யாவர்க்குங், கற்ருேர்க்கு மூன்றுவிழி
எண்ணுவிழி யேழாகு மீவோர்க்கு—நண்ணும்
அநந்தந் தவத்தால் அருள்ஞானம் பெற்ருேர்க்கு
அநந்தம் விழியென் றறி.

—நீதிசாரம்

பொன்னணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னு மறிஞரைத்தா மற்ருெவ்வார்—மின்னுமணி
பூணும் பிறவுறுப்புப் பொன்னே யதுபுனையாக்
காணுங்கண் ணெக்குமோ காண்.

—நன்னெறி

வாக்குநயத் தாலன்றிக் கற்றவரை மற்றவரை
யாக்கைநயத் தாலறிய லாகாதே—காக்கையொடு
நீலச் சிறுகுயிலை நீடிசையா லன்றியே
கோலத் தறிவருமோ கூறு

—நீதிவெண்பா

வெள்ளத்தால் அழியாது
வெந்தழலால் வேகாது
வேந்த ராலும்
கொள்ளத்தான் இயலாது
கொடுத்தாலும் நிறைவொழியக்
குறைப டாது
கள்ளத்தார் எவராலும்
களவாட முடியாது
கல்வி யென்னும்
உள்ளத்தே பொருளிருக்க
உலகெங்கும் பொருள்தேடி
உழல்வ தென்னே !

—விவேக சிந்தாமணி



காட்சி புரிந்தருளும் காமர் விழிபோல
மாட்சி புரிந்து மனுக்குலத்தை—ஆட்சியால்
பல்வழியும் ஊக்கிப் பயன்காட்டி நிற்றலால்
கல்வியுஞ் செல்வமுங் கண்

—தரும தீபிகை

... ... ... ...
... ... ... ...
பலவித மான புகழ்நல்கும் வேந்தர் பரவச்செய்யும்
கல்வியழகே யழகா மெவருக்குங் காரிகையே

—கோடீச்சுரக் கோவை

கல்வியே மக்கள்தங் கண்ணே புலவர்தஞ்
செல்வியே மனத்தின் செவ்விய வுணவே
நின்னொடு பயிறல் மன்னிய மாந்தர்
தமக்கும் பிறக்குந் தனிப்பே ரின்பம்
கரும்பயில் தற்குக் கைக்கூலி போலத்
தரும்பொரு ளேயுயர் தகைமுத்தி வித்தே
பரந்த பாரினும் விரிந்த வானினும்
பாவலர் நூலினும் பரிவுடன் மேவி
ஆவலின் விளையாட் டயர்தரு மங்காய்
கருத்தினிற் களிப்பை உரைப்பை யாற்றுரை
கதுமென நின்னைக் கைப்பிடித் தோர்தமக்
கெதுவுநன் ருடே எதுவுநல் லூரே
ஆகவு மென்கொ லநேகர்
ஊன மின்றிநா ளுலப்பிவிட் டனரே.

—தனிப்பாசுரத் தொகை.

— தொகுப்பு: தமிழ்ப்பித்தன்.

# ஊனமுற்ரோரை முன்னேற்றும் முட்டுக்காடு

சென்னை — மாமல்லபுரம் சாலையில் உள்ள முட்டுக்காட்டில் உடல் ஊனமுற்ரோருக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக ரூ. 25 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள தொழிற்சாலையை முதல்வர் கலைஞர் அவர்கள் 1-6-75-ல் திறந்து வைத்தார்கள்.

விழாவுக்கு மேதகு தமிழக ஆளுநர் கே. கே. ஷா அவர்கள் தலைமை ஏற்ருர்கள். மைய அரசின் திட்டக் குழுத் துணைத் தலைவர் திரு. பி.என். ஹக்சர் தொழிற்சாலையின் இயந்திரங்களை இயங்கி வைத்தார். விழாவில் அவர் குறிப்பிட்டார்:

''உடல் ஊனமுற்ரோருக்கு ஆறுதல் சொல்லக்கூட யாரும் இல்லாத நிலை இருப்பது நாம் அறியாததல்ல. அப்படியிருக்கையில் தமிழ் நாடு முதலமைச்சர் கருணுநிதி அவர்கள், உடல் ஊனமுற்ரோருக்கு வெறும் ஆறுதல் மட்டும் கூருமல், அவர்கள் தன்மானத்தோடு மறுவாழ்வு பெறவும் வகைசெய்து வருவதை நான் மனப்பூர்வமாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.''

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் சி. வி. எம். அண்ணுமலை, அவர்கள் அனைவரையும் வரவேற்ருர்.

இந்தத் தொழிற்சாலையில் தயாராகும் மூன்று சக்கர வண்டிகள் 80, சக்கர நாற்காலிகள் 20 வாங்குவதற்கு அரசு ஆணை கொடுத்துள்ளது.

இந்தத் தொழிற்சாலையில் ஊனமுற்ரோர் மொத்தம் 60 பேருக்குப் பயிற்சியளிக்கப் படுகிறது. பயிற்சி பெறுகிறவர்களுக்கு மாதம் ரூ. 75/- உதவித் தொகை வழங்கப் படுவதுடன் தங்குவதற்கு வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த முட்டுக்காடு எதிர்காலத்தில் முன்னணிக்கு வருவது உறுதி.












# தமிழகத்தில் கல்லூரிக் கல்வி

கு. மோகனரங்கம்
(கல்லூரிக் கல்வி இயக்குநர்)

தமிழகத்தில் கல்லூரிக் கல்வி பள்ளியிறுதி படிப்பு முடித்த எல்லோருக்கும் கிடைக்குமளவுக்கு இருக்க வேண்டும், அந்தக் கல்வி பயிலுவதற்கான வசதி பரவலாக இருக்க வேண்டும். மாணவர்களின் வாழ்க்கைக்குப்பயன்பெறத்தக்கதாக இருக்க் வேண்டும், அதுவும் தரமான கல்வியாக இருக்க வேண்டும் என்பதுதான் தமிழக அரசின் கொள்கையும், குறிக்கோளுமாகும்.

கடந்த எட்டு ஆண்டுகளில் கல்விக்கான வரவு செலவுத் திட்டம் சீராக உயர்ந்து கொண்டே வந்திருக்கிறது. 1975-76-ஆம் ஆண்டு பொதுக் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் நிதி ஒதுக்கீடு மொத்தம் ரூ. 116.5 கோடி ஆகும். அதில் கல்லூரிக் கல்விக்கு மட்டும் ரூ. 9.6 கோடி ஆகும்.

இருக்கின்ற நிதி வசதியில் கல்வியும் வளர்ச்சியடைய வேண்டும், நல்ல தரமான கல்வியாகவும் அது இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் திட்டமிடப்பட்டுச் செயல் படுத்தப்பட்டு வருகின்றது.

கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் கீழ் கலைக் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள், கீழ்த் திசைக் கல்லூரிகள், உடற்பயிற்சிக் கல்லூரிகள் ஆகியவை வருகின்றன.

இருக்கின்ற கல்லூரிகளில் உள்ள இடங்களே பள்ளியிறுதி வகுப்பு முடிந்து கல்லூரிப் படிப்பு படிக்க வருகின்ற மாணவர்களுக்குப் போதுமானதாக உள்ளது. சேர்க்கைச்சமயத்தில் ஒரு சில நகர்ப்புறங்களில் கல்லூரிகளில் சேரக்கூட்டம் அதிகமிருப்பதாகத் தோன்றினாலும் உண்மை நிலை அதுவல்ல. சில குறிப்பிட்ட கல்லூரிகளில் பெற்றோர்களும் மாணவர்களும் சேர முயலுவதுதான் காரணம்.

அந்தந்த வட்டார மாணவர்களுக்குக் கல்லூரிகளில் சேர வசதிகள் இருக்க வேண்டும் என்ற கருத்தில்தான் கடந்த எட்டு ஆண்டுகளில் பல புதிய கல்லூரிகள் அரசுத்துறையிலும், தனியார் துறையிலும் பரவலாகத் திறக்க அனுமதியளிக்கப்பட்டது.

1975-76-ஆம் ஆண்டிலும் 5 புதிய கல்லூரிகள் தனியார் துறையில் திறக்க அரசு திட்டமிட்டுள்ளது.

## பட்டப் படிப்பு/பட்ட மேற்படிப்பு

கல்வியாளர்கள் கருத்துப் படியும், சிறப்புக் குழுக்களின் கருத்துப்படியும் பட்டப்படிப்பு வேலை வாய்ப்புடையதாக இருத்தல் வேண்டும் என்ற கருத்தில் தமிழகத்தில் அரசுக் கல்லூரிகளில் கீழ்க்கண்ட வேலைவாய்ப்புடைய பட்டப் படிப்பு 1975-76-ஆம் ஆண்டு தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

1. புத்தகத் தொழில்.
2. பொது மக்கள் தொடர்பு.
3. சுற்றுலா.
4. வணிகவியல் செயலர் துறை.
5. உணவுமுறை மற்றும் சத்துணவு.

அண்மைக் காலத்தில் பி.காம். பட்டப்படிப்புக்கு நிறையத் தேவைகள் இருப்பதாக அறிந்து அரசுக் கல்லூரிகளில் பி.காம். பட்டப்படிப்பு திறக்கப்பட்டுள்ளது.

பட்டமேற் படிப்பு, குறிப்பாகச் சென்னையில் மட்டுமே இருக்கக் கூடாது என்றும் அந்தப் படிப்பு மாணவர்களின் நலன் கருதி மாவட்டத் தலை நகரில் உள்ள கல்லூரிகளிலும் இருக்கவேண்டும் என்று கருதப் பட்டு, கோவை, திருச்சி, மதுரை, தஞ்சை, சேலம் ஆகிய நகரங்களில் உள்ள அரசுக் கல்லூரிகளிலும் பட்ட மேற்படிப்புக்கு வசதி செய்யப் பட்டுள்ளது.

இவை தவிரப் பல்கலைக்கழக மானியக்குழு பல்கலைக் கழகங்களால் அமைக்கப்படும் பட்ட மேற்படிப்பு நிலையம் (Post-Graduate Centre) இவைகளை ஆராய்ந்து நிதி உதவி செய்கின்றனர்.

### தனியார் கல்லூரிகளுக்கு அரசு மான்யம்

தனியார் கல்லூரிகளில் ஆகும் செலவில் 80 சதவிகிதம் அக்கல்லூரிகளுக்கு அரசால் மான்யமாக அளிக்கப்படுகிறது. இவை தவிர புகுமுக வகுப்பில் சேரும் மாணவர்களின் சம்பள நட்டத்தை ஈடு செய்யும் வகையில் ஒரு மாணவனுக்கு, ரூ. 240/- என்ற கணக்குப்படி தனியார் கல்லூரிகளுக்கு அளிக்கப்படுகிறது. தமிழகத்தில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையில் பெரும்பான்மை தனியார் கல்லூரிகளில் படிப்பவர்களாக இருப்பதால் அக்கல்லூரிகளுக்கு அளிக்கப்படும் மானியத்திற்காக அரசு செலவழிக்க வேண்டிய தொகை ஆண்டுதோறும் கூடி வருகிறது.

அரசுக் கல்லூரிகளின் எண்ணிக்கையும் அதில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையும் தனியார் கல்லூரிகளின் எண்ணிக்கை அதில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை ஆகியவற்றைவிடக்குறைவென்ருலும், அரசாங்கக் கோட்பாடான ''சமூக நீதியை''ச் செயல்படுத்துவதில் அரசுக் கல்லூரிகளுக்கு முக்கியப் பங்கு உண்டு. தனியார் கல்லூரிகளில் ஆகும் அதிகக் கல்விச் செலவை ஏற்க இயலாதவர்களும் சமுதாயத்தில் சமூகம், பொருளாதாரம், கல்வி ஆகியவற்றில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைச் சார்ந்தவர்களுமான மாணவர்களுக்கு அரசுக் கல்லூரிகள் குறைந்த கட்டணத்தில் நல்ல தரமான கல்வியை அளிக்கின்றன.

இவை தவிர மாலைக் கல்லூரிகள் துவக்கியது உயர் கல்வி முன்னேற்றத்தில் ஒரு பெரும் பங்காகும். வசதியின்மையினுல் கல்லூரிப் படிப்பைத் தொடராமல் வேலைக்குச் சென்றவர்களுக்கு வேலை பார்த்துக் கொண்டே அவர்களது கல்லூரிப் படிப்பினைத் தொடர இம்மாலைக் கல்வி பெரும் வாய்ப்பளிக்கின்றது.

1972-73-ஆம் ஆண்டு முதல் மதுரைப் பல்கலைக் கழகம் அஞ்சல் முறை மூலம் கல்லூரிப் படிப்பினைப் படிக்க வசதி செய்து அதுவும் சிறப்புற நடைபெற்று வருகின்றது.

### தமிழ் பயிற்சி மொழி

மாணவர்கள் தங்கள் தாய் மொழி மூலம் கல்லூரிக் கல்வியைப் பெற்ருல் சிறந்தவர்களாக வரமுடியும் என்பது உறுதியான கொள்கை. அதே நேரத்தில் ஆங்கிலப் போதனு முறை மூலம் படிப்புப் பெற விரும்புவர்களுக்கு வசதி இருக்க வேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டு அதற்கான வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

1967-68ஆம் ஆண்டு புகுமுக வகுப்புகளில் கலைப் பாடங்களைத் தமிழில் கற்பிக்கும் முறை பெருமளவிற்குக் கொண்டுவரப்பட்டது. படிப்படியாக அது சீரான முறையில் புகுமுக வகுப்பில் விஞ்ஞானப் பாடங்களிலும், பட்டப்படிப்பில் கணிதம், புவியியல், வேதியல் தாவரவியல், விலங்கியல்



ஆகிய பாடங்களில் தமிழ் போதனு முறையில் படிக்க வசதி செய்யப்பட்டுள்ளது.

தமிழ் போதனு முறை மூலம் புகுமுக வகுப்பில் படிக்கும் மாணவர்களுக்கு புத்தகத்திற்காக ரூ. 50/-ம், பட்டப் படிப்பில் படிப்பவர்களுக்கு ரூ. 180/-ஆம் உதவித்தொகையாக ஆண்டுதோறும் கொடுக்கப்பட்டு வருகின்றது.

தமிழகத்தில் பள்ளி, கல்லூரிப் பாடப் புத்தகங்களை அச்சிட்டு வெளியிடுவதற்காக தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம் என்று ஒன்று நிறுவப்பட்டு அது புத்தகங்களை வெளியிடுகிறது. 1975-76-ஆம் ஆண்டு முதல், தமிழ் போதனு முறை மூலம் பயிலும் மாணவர்களுக்கு அவர்களுக்கு தேவையான பாடப் புத்தகங்களை இலவசமாக உதவித் தொகைக்குப் பதிலாக அளிக்க முடிவெடுத்துச் செயல்படுத்தப் படவிருக்கிறது.

புகுமுக வகுப்பு வரை எல்லோருக்கும் இலவசக் கல்வி வழங்கி இந்தியாவில் மற்ற மாநிலங்களுக்கு முன்னேடியாகத்தமிழகம் திகழ்கிறது. இதனுல் அரசுக்கு ஆண்டு தோறும் ரூ. 2 கோடி செலவாகிறது.

இது தவிர சம்பளச் சலுகைகளும் கல்வி உதவிச் சம்பளங்களும் ஒவ்வொரு ஆண்டும் அளிக்கப்பட்டு வருகின்றது.

பள்ளியிறுதி வகுப்பிற்கு மேற்கொண்டு கல்வியைத் தொடர மத்திய அரசு கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டங்கள் செயலில் இருந்து வருகின்றன.

1. உயர்தகுதி பெற்ற மாணவர்களுக்குத் தேசியக் கல்வி உதவித்தொகை.

2. தொடக்கநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றில் பணியாற்றும் ஆசிரியர்களின் குழந்தைகளில் தகுதியுள்ளவர்களுக்கு வழங்கும் தேசியக் கல்வி உதவித் தொகை.

3. தேசியக் கடன் உதவித் தொகை.

இவ்வளவு கல்லூரிக் கல்வி வளர்ச்சியிலும் பெண்களுக்

**1967-68-ஆம் ஆண்டு இருந்த கல்லூரிகள் (பயின்ற மாணவர்கள்)**

| கலைக் கல்லூரிகள் | ஆண் | பெண் | மாணவர்கள் | மாணவிகள் |
|---|---|---|---|---|
| கலைக் கல்லூரிகள் | 85 | 31 | 84,401 | 26,202 |
| ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் | 12 | 8 | 1,203 | 1,013 |
| கீழ்த்திசைக் கல்லூரிகள் | 19 | ... | 1,355 | 505 |
| உடற் பயிற்சிக் கல்லூரிகள் | 3 | ... | 532 | 245 |
| 1974-75-ஆம் ஆண்டு கலைக் கல்லூரிகள் | 135 | 48 | 1,43,064 | 57,550 |
| ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் | 13 | 10 | 1,472 | 1,207 |
| கீழ்த் திசைக் கல்லூரிகள் | 17 | ... | 1,194 | 905 |
| உடற் பயிற்சிக் கல்லூரிகள் | 3 | ... | 434 | 254 |

கான வசதி சிறிதும் குறையக் கூடாது என்பதற்கு அரசு தனிக் கவனம் செலுத்தி, ஆவன செய்து வருகிறது. தற்பொழுது பெண்களுக்காக 48 கல்லூரிகள் உள்ளன. 1975-76ஆம் ஆண்டு திறக்கத் திட்டமிடப்பட்டுள்ள 5 கல்லூரிகளில் இரண்டு கல்லூரிகள் பெண்களுக்கானவை.

இவை தவிர ஆண்கள் கல்லூரிகளே உள்ள இடங்களில் பல்கலைக் கழகங்களின் அனுமதி பெற்றுப் பெண்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். அங்குப் பெண்களுக்குத் தேவையான வசதிகள் செய்யப்படுகின்றன.

பல்கலைக் கழக மான்யக் குழு கல்லூரிகளின் வளர்ச்சிக்கான கட்டடம், விளையாட்டு மைதானம் செப்பனிட, ஓய்வு அறைகள் நிறுவ, சிற்றுண்டி விடுதி அமைக்க உதவிகள் அளித்து வருகின்றன. அவை எல்லாம் எவ்வளவு அதிகம் பயன்படுத்த முடியுமோ அவ்வளவு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

கல்லூரிகள் அதிகப்படுத்தப்பட்டு, ஆசிரியர்கள் கல்லூரிகளில் நியமனம் பெற்றுவிடுகின்றனர். அவர்கள் தாங்கள் இன்னும் திறமைமிக்கவர்களாக இருக்க வேண்டும், அவர்கள் தாங்கள் அறிந்ததை மாணவர்களுக்கு நன்கு போதித்துக்கல்லூரிகளிலிருந்து பட்டம் பெற்று வரும் மாணவன் நல்லதொரு திறமைசாலியாக வரவேண்டுமென்று அரசு கருதுகிறது. எனவே திறமை மிகுந்த ஆசிரியர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். கல்லூரிகளில் போதிக்கும் ஆசிரியர்கள் பட்ட மேற்படிப்புப் பெற்றவர்களாக இருக்க வேண்டும், அவர்கள் ஆராய்ச்சி அனுபவம் பெற வேண்டும் என்ற எண்ணத்தில் பி.எச்டி. ஆராய்ச்சிக்கு அனுப்பும் திட்டம் அரசுக் கல்லூரி ஆசிரியர்களுக்குச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

பி.எச்டி. பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு ரூ. 100/- சிறப்பு ஊதியமாக வழங்கப்பட்டு வருகின்றது.

பல்கலைக் கழகங்கள் கல்வி வளர்ச்சிக்கான தங்களது சேவையைச் செவ்வனவே செய்து வருகின்றன. வளர்ந்து வரும் நாட்டின் தேவைக்கேற்பப் பாடத்திட்டங்களை மாற்றியமைத்து, மாற்றியமைத்த பாடத் திட்டங்களை எப்படிப் போதிப்பது என்பதற்காகக் கோடை விடுமுறையில் கல்லூரி ஆசிரியர்களுக்கு சிறப்பு பயிற்சிஅளித்துச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

தேர்வு முறையில் சீர்திருத்தம் தேவையெனச் சொல்லாதவர் யாரும் இல்லை. கல்வியாளர்கள், அறிஞர்கள் எல்லாருடைய கருத்துகளைக் கொண்டு பல்கலைக் கழக மான்யக் குழுவின் கருத்துப்படியும் ''செமஸ்டர் முறை'' திட்டம் பொறியியற் கல்வி, மருத்துவக் கல்வியில் புகுத்தப்பட்டுள்ளது. படிப்படியாக எல்லாக் கல்லூரிப் படிப்புக்கும் இதைச் செயல்படுத்தப்படத் திட்டமிடப்பட்டுள்ளது.

கல்விக்காக இவ்வளவு தொகை செலவிடப்படுகிறதே இந்தச் செலவை முறையாக்கி இன்னும் சிக்கனப்படுத்த முடியுமா என்பதை ஆராய ஓர் உயர்மட்டக் குழு (Education Finance Review Committee) அரசால் அமைக்கப்பட்டு ஆராயப்படுகிறது. அக்குழுவின் பரிந்துரைக்குப் பிறகு நடவடிக்கை எடுக்கப்படும்.

10+2+3 தேசியக் கல்வி முறையை தமிழ்நாட்டில் எந்த வழியில் செயல்படுத்தலாம் என்று ஆராய்ந்து பரிந்துரைய உயர்மட்டக்குழு ஒன்று அமைக்கப்பட்டு எல்லோருடைய கருத்தும் கேட்கப்பட்ட பின் பரிந்துரை எதிர்பார்க்கப்படுகிறது.

கல்லூரிகளில் மாணவர்களின் நியாயமான கோரிக்கை கவனிக்கப்பட்டு அதனால் ஏற்படும் மாணவர்களின் அமைதியின்மை தவிர்க்கப்பட வேண்டும் என அரசு கருத்திற்கொண்டு ஒவ்வொரு அரசுக் கலைக் கல்லூரியிலும் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. அதில் கல்லூரி முதல்வர், பெற்றோர் சங்கப் பிரதிநிதி, மாணவர்களின் பிரதிநிதி, பழைய மாணவர்களின் பிரதிநிதி ஆகியவர்கள் இருப்பார்கள். இக்குழு அடிக்கடி கூடி மாணவர்களின் கோரிக்கையைக் கவனித்து ஆவன செய்கிறது. இதனால் மாணவர்களின் அமைதியின்மை ஓரளவு தவிர்க்கப்பட ஏதுவாக உள்ளது.

**பல்கலைக் கழகம்**

தமிழகத்தில் தற்போது மூன்று பல்கலைக் கழகங்கள் உள்ளன. சென்னை, மதுரைப் பல்கலைக் கழகங்கள் இணைப்புப் பல்கலைக் கழகங்கள் (Affiliating Universities) அண்ணாமலைப் பல்கலைக் கழகம், தனிப்பட்ட (Unitary) பல்கலைக் கழகம். கோத்தாரிக் குழு பரிந்துரையில் 45 கல்லூரிகளுக்கு ஒரு பல்கலைக் கழகம் அமைந்தால்தான் கல்லூரிக் கல்வி சிறப்பானதாக இருக்கும் என கூறப்பட்டுள்ளது. அதற்கேற்ப மேலும் இரண்டு பல்கலைக் கழகங்கள் திருச்சியிலும் கோவையிலும் அமைக்க தமிழக அரசு கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.



# தொழில் நுட்பக் கல்வித்துறை டிப்ளமா, பட்டப்படிப்பு

டாக்டர் வா. செ. குழந்தைசாமி
இயக்குநர்,
தொழில் நுட்பக் கல்வி.

இந்தியாவில் தொழில் நுட்பக் கல்வி தனக்கென ஒரு தனித்துவம் அடையாத நிலை தேசிய நடப்புக்களில் ஒரு முக்கியத்துவம் பெருத அளவிலும் இன்னும் இருந்து வருகிறது. எதிர்காலத்திற்கான பொறியியற் கல்வியின் அமைப்பு முறையானது, பொறியியல் துறையினர் சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய கடமைகளையும், பொறியியல் பயிலும் குடிமகனைப் பயனுடைய ஒரு தனி மனிதனுக உயர்த்தும் முக்கியத்துவத்தையும் அடிப்படையாகக் கொண்டு அமைதல் வேண்டும். பொறியியலாளன் சமூகத்தின் தொண்டன் என்ற முறையில், மனிதனின் சுற்றுச் சூழ்நிலையை முன்னேற்றுவதிலும் அதைத் தொடர்ந்து நிர்வகிப்பதிலும், அச்சமூகத்தின் முன்னேற்றத்திற்கான உடல் உழைப்பைக் குறைக்கும் நல்ல பல கண்டு பிடிப்புகளையும், சாதனங்களையும் புதிதாகப் புகுத்துவதிலும், ஒரு பெரும் பணியாற்ற அழைக்கப்படுகிருன். அவன் ஆற்றலும் உழைப்பும் சமுதாய நலனில் ஒரு நேரிடையான நாட்டம் கொண்டதாகப் பெரிதும் அமைகிறது. அவன் தான் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணத் தோன்றும் பல வழி முறைகளில், சிறந்ததொரு வழியை ஆராய்ந்து தேர்ந்தெடுப்பதில் வல்லவனுக இருத்தல் வேண்டும்.

எந்த ஒரு கல்வித்திட்டத்திலும், பொதுவான அறிவைப் புகட்டும் முறையானது எத்துணைச் சிறப்புடையதாக இருப்பினும், ஒரு தனி மனிதனின் சிந்திக்கும் திறனையும், சீர்தூக்கிப் பார்க்கும் ஆற்றலையும் எடுத்துக் கொண்ட பொருளை வகைப்படுத்தும் முறையையும், கொடுக்கப்பட்ட ஆதாரங்களிலிருந்து தகுந்த முடிவுகள் காணும் வல்லமையும் அறிவைத் தனக்குத்தானே ஈட்டிக்கொள்ளும் சக்தியையும், அல்லது பெற்ற அறிவைப் புதிய சூழ்நிலைகளுக்கேற்பச் செயல்படுத்தும் தெளிவையும் வளர்ப்பதாக அமையும் வழிமுறைகள் தான் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவை என்று கூறலாம்.

பொறியியல், அறிவுத்துறையின் மிகத் துடிப்பான ஒரு பகுதியைச் சார்ந்தது என்ருல் அது மிகையாகாது. எனவே பொறியியற் கல்வி என்பது ஒருவனது வாழ்நாள் எல்லை வரை தொடர்ந்து பயிலக் கூடிய ஒன்ருகும்.

பொறியியல் என்பது செயல்முறை அறிவியலாகும். எனவே ஒருவன் தற்போது தனக்குக் கிடைத்துள்ள நுண் அறிவியலின் துணை கொண்டு திட்டமிடவோ, இருப்பதை வளர்க்கவோ, இயக்கவோ, நிர்வகிக்கவோ, உற்பத்தியைப் பெருக்கவோ தன்னைத் தயார் செய்து கொள்ள வேண்டும்.

தொழில் நுட்பக் கல்வியை பொதுக் கல்வியினின்றும் பிரித்து வேறுபடுத்துதல் இயலாததொன்ருகும். ஏனெனில் பொதுக்கல்விதான் பொறியியல் வல்லுனனுக்கு அவனுக்கென்ற ஒரு வாழ்க்கைச் சித்தாந்தத்தை ஏற்படுத்தி அறத்துடனும் நெறியுடனும் கூடிய தொழிலை அவன் மேற் கொள்வதற்கு உறுதுணையாயிருக்கிறது.

இவ்விதம், தொழில் நுட்பக் கல்வியானது தொழில் நுட்ப நோக்கு, சமூக நோக்கு என்ற இரு நோக்குகளின் அடிப்படையில் அமைவதாகும். இவ்விரண்டும், ஒருவன் தொழில் நுட்பக் கல்வி பெறும் முன்போ அன்றி பெற்று வெளி வந்த பின்போ தக்க முறையில் இணைந்து அவன் மேற்கொள்ளும் வாழ்வுக்குப் பின்னணி

யாக விளங்கி அவனுக்குச் சக்தியையும், முன்னேற்ற வளர்ச்சிக்கான முனைப்பையும் அளிக்கிறது.

மேற்கண்ட வரையறுக்கப்பட்ட நோக்குகளுடன், அடுத்து மேற்கொள்ள வேண்டிய செயல், ஏற்பான பாடத் திட்டத்தை அமைப்பதாகும். கல்விக்கான பாடத்திட்டத்திற்கு இறுதியான முடிவு என்று ஒன்றில்லை. அது தொடர்ந்து மாறுதலுக்கும் மறுபரிசீலனைக்கும் உட்பட்டது. அதைச் சார்ந்த செயல் முறை முடிவு பெறாத ஆனால் நிலையான தொன்றாகும். திடமான மறு ஆய்வும், சோதனையும் அதற்குத் தேவையாகும்.

ஆகவே பாடத்திட்டத்தின் அமைப்பு முறை அடிக்கடி நிகழும் மாறுதல்களுக்கு இடங் கொடுப்பதாயும் அதே சமயம் அடிக்கடி மாறுதலுக்குட் படாத சில அம்சங்களுடன்





அமைந்து ஒரு பரந்த எல்லைக் கோட்டுக்குள் இயங்க வல்லதாகவும் இருத்தல் அவசியம். பாடத்திட்ட அமைப்பு கீழ்க் கண்டவைகளைக் கொண்ட ஒரு சேர்க்கையாக இருத்தல் நன்று.

(1) கலையியல், சமூகவியல் (Humanity, Social Science)

(2) அடிப்படை அறிவியல் (Basic Science)

(3) தொழில்நுட்ப அறிவியல் (Engineering Science)

(4) ஆய்வு, அமைப்புத் தொழில்நுட்ப இயல் (Analysis Design)

(5) நடைமுறைத் தொழில் நுட்ப இயல்

(6) சோதனை முறைத் தொழில் நுட்பவியல்.

தொழில்நுட்பக் கல்வி சிறப்பாகவும் பயனுள்ளதாகவும் விளங்க மேலும் பல அம்சங்கள் காரணமாக உள்ளன. அவைகளுக்குள் ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களை மேம்படுத்தலும், மற்றும் தேசிய வளர்ச்சியின் தேவைகளுக்கேற்பப் பாடத்திட்ட முறையை உருவாக்கலும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவை. தொழில்நுட்பக் கல்விக் கூடங்களில் மாணவர்களைச் சேர்ப்பதற்கான விதிமுறைகள் உயர்நிலைப் பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் அமையும் தொடர்பு முறை, ஏழ்மைப் பிடியிலுள்ள சிறந்த மாணவர்களுக்கு உதவும் வழிவகை, பட்டப்படிப்பு, மேல்பட்டப் படிப்பு தொடர்கல்வி இவைகளைத் தக்க முறையில் புகுத்துதல், மேலும் ஆராய்ச்சியையும் வளர்ச்சியையும் அடிப்படையாகக் கொண்ட செயல் முறைகளைக் கடைப்பிடித்தல் போன்றவைகள் தொழில் நுட்பக் கல்வியின் தரத்தை நிர்ணயிக்கும் சில கூறுகளாகும்.

பல்துறைத் தொழிற் பயிற்சிக் கல்லூரிகளில் புகுத்தப்பட்ட பலதரப்பட்ட பாடத் திட்டங்கள், ஆசிரியர்கள் பயிற்சி பெற வேண்டிய அவசியத்தை உருவாக்குகின்றன. ஆசிரியர் மாணவனுக்கு முழுமையான பயிற்சி யளிக்க வேண்டுமானால் முதற்கண் அவர் முழுமையான பயிற்சி பெற்றிருத்தல் அவசியம். இதைக் கருத்தில் கொண்டு 14-12-1964 அன்று மத்திய அரசினரால், பல்துறைத் தொழிற் பயிற்சிக் கல்லூரி ஆசிரியர்களைத் தற்கால தொழில்நுட்பம், அதன் முறைகள் ஆகியவற்றில் பயிற்றுவிக்கவும் மேலும் பயிற்சிப் பொருட்கள் அட்டவணைகளை உபயோகித்து மாணவர்களுக்குத் தேவையான பயிற்சி தரும் முறைகளைக் கற்பிக்கவும் வேண்டி தொழில் நுட்ப ஆசிரியர் பயிற்சி நிறுவனம் நிறுவப்பட்டது. இப் பயிற்சி, பொறியியல் மீதான பாடத்திட்டம் உட்பட 9 முதல் 18 மாதங்கள் வரை அளிக்கப்படுகிறது. மேலும் இந்நிறுவனம் கல்லூரி முதல்வர்களுக்கும் பல்துறைத் தொழிற் பயிற்சிக் கல்லூரியிலுள்ள துறைத் தலைவர்களுக்கும், அண்மைக்காலக் கண்டுபிடிப்புகளிலும் பயிற்சி முறைகளிலும் அவர்கள் தெளிவு பெற வேண்டி குறுகிய காலப் பயிற்சியளிக்கிறது.

மேலும் இந்நிறுவனம் 1974-ஆம் ஆண்டு முதல் சென்னைப் பல்கலைக் கழகம் நடத்தும் B.Tec. பட்டத்திற்கான பயிற்சியும் அளிக்கிறது.

தர உயர்வு பெறுதல் வேண்டிப் பல தொழில்நுட்பக் கல்வி நிலையங்களிலும் சில வழிமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதுபோலவே வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கச் சில முக்கிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேலும் பாடத்திட்ட அமைப்பு மையம், தாஉயர்வுத் திட்டம், தொழிலகத்தொடர்பு வாரியம் போன்றவை தொழில்நுட்பக் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கும், அக்கல்வி ஒரு பயனுள்ள கருவியாகத் திகழ்வதற்கும் வழி செய்கின்றன. மத்திய அரசின் வேலைவாய்ப்புத் திட்டம், தொழில் தொடங்குவதற்கான பயிற்சி அளிக்கும் திட்டம், பயிலகங்களில் வேலை வாய்ப்புத் தேடித் தரும் பிரிவு போன்றவை வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்க வழி வகை செய்கின்றன.

தற்போது நம் மாநிலத்திலுள்ள பொறியியல் கல்லூரிகள் சென்னை, மதுரைப் பல்கலைக் கழகங்களுடன் இணைந்துள்ளன. பல்துறைத் தொழிற் பயிற்சிக் கல்லூரிகள் மாநிலத் தொழில் நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி வாரியத்துடன் இணைந்துள்ளன. இப்பல்கலைக் கழகங்களும், தொழில் நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி வாரியமும் தேர்வுகள் நடத்தி முறையே பட்டங்களும் டிப்ளோமாக்களும் வழங்குவதோடு பாடத்திட்டங்களை உருவாக்குவதிலும், தரத்தைப் பராமரிப்பதிலும் பொறுப்புடையனவாய் உள்ளன. அண்மைக் காலங்களில் அறிவியல்-கலைக் கல்லூரிகள் எண்ணிக்கையில் பெருகியுள்ளதன் விளைவாக, பல்கலைக் கழகம் தொழில் நுட்பக் கல்வி மீது போதிய, அளவு கவனம் செலுத்த இயலவில்லை. தொழில் நுட்பக் கல்வி முறையில் முன்னேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டியும் தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் தேவையான அளவு கவனம் செலுத்த வேண்டியும் தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் நிறுவ வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இதனால் இத்துறையில் ஆய்வு, அபிவிருத்தித் திட்டங்களைத் தொழில் நுட்பத்தின் பல்வேறு பிரிவுகளிலும் செயல்படுத்த உதவுகிறது. இப்பல்கலைக்கழகம் நிறுவும் கருத்து மாநில அரசால் கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பல்கலைக்கழக மானியக் குழுவின் ஒப்புதலுடன் செயல்படுத்தும் முறை அரசின் சீரிய கவனத்தில் உள்ளது.

இதுவரை பொறியியலாளர்களுக்கான கல்வித்திட்டத்தைப் பற்றி விளக்கப்பட்டது. இனி பல்துறைத் தொழிற் பயிற்சிக் கல்லூரிகளுக்கான கல்வி முறை பற்றிச் சிறிது காண்போம்.

பல்துறைத் தொழிற் பயிற்சிக் கல்வியானது தொழில் கைவினைஞர்களுக்கும், பொறியியல் நிபுணர்களுக்கும் ஒரு தொடர்பை ஏற்படுத்தும் இடைப்பட்ட தொழில் நுட்பப் பணியாளர்களைப் (டெக்னீசியன்) பயிற்றுவிக்கும் முக்கியமான முறையாக அமைகிறது. இவ்வாறு பயிற்சி பெற்ற 'டெக்னீசியன்' என அழைக்கப்படுவோர் தொழிலகங்களில் முக்கிய இடம் வகிக்கின்றனர். இவர்கள் மேற்பார்வையாளர், பிரிவு அலுவலர், தொழில் நுட்ப உதவியாளர், போன்ற பல பதவிப் பெயர்களின் கீழ் நியமிக்கப்படுகிறார்கள். இவர்கள், தொழில் நுட்பத் திறனை உற்பத்தியும் கட்டுமானமும், சோதனையும் அபிவிருத்தியும், பொறியியல் இயந்திரங்களை நிறுவுதலும் இயக்குதலும், வரைதலும், விலை நிர்ணயம் செய்தலும், விஞ்ஞான சாதனங்களை வாடிக்கையாளரிடம் விற்பதும் அதன் உபயோகம் பற்றி உரைப்பதும் ஆன செயல் முறைகளில் திறமையுடன் செயல்படப் பயிற்றுவிக்கப்படுகிறார்கள். இந்த டெக்னீசியன்கள் எப்போதும் தேவைப்படுவதோடன்றி இந்தியா போன்ற தொழில் வளர்ச்சி அடைந்து வருகின்ற நாட்டில் மிகவும் எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

விரைவான தொழில்வளர்ச்சியினால் மிகுதியாகத் தேவைப்படுகின்ற சிறந்த டெக்னீசியன்களை ஏற்ற காலவரையறைக்குள் தேர்ந்து எடுக்கப்பட்ட சில சிறப்பான துறைகளில் திறமை வாய்ந்தவர்களாக உருவாக்குவதே பல்தொழில் நுட்பக் கல்வியின் நோக்கமாக இருக்க வேண்டும்.

தொழில் நுட்பக் கல்வி நமது நாட்டில் கடந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் கால இறுதிவரை பெருமளவில் முன்னேற்றம் கண்டுள்ளது. முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டக் காலத்தை தொழில் நுட்பக் கல்வியின் 'வளர்ச்சிக் காலம்' எனலாம். இக் காலத்தில் தான் தொழில் நுட்பக் கல்விக்கூடங்கள் பெருமளவில் நிறுவப்பட்டன. இவ்வளர்ச்சியில், தமிழ்நாடு பெரும் பங்கு கொண்டுள்ளது. மேலும், மூன்றாவது திட்டக்கால இறுதி வரை பொறியியல் பட்டதாரிகளும் டிப்ளமோதாரர்களும் தொழில் நுட்பக் கல்விக் கூடங்களிலிருந்து அதிக அளவில் வெளி வந்துள்ளனர். ஆனால், எதிர்பாராத வகையில் தொழில்துறையில் ஏற்பட்ட தேக்க நிலையாலும், இந்திய எல்லையில் ஏற்பட்ட எதிரி







களின் தாக்குதலாலும், அதன் காரணமாக நேர்ந்த வேலை வாய்ப்புக் குறைவாலும் நான்காவது திட்டக் காலத்தில் தொழில் நுட்பக் கல்வித்துறையின் வளர்ச்சியில் சிறிது தேக்கம் ஏற்பட்டது. சமீப காலங்களில், இத் தேக்க நிலை மாறி, தொழில் நுட்பக் கல்வித் துறை மீண்டும் போதிய முதலீட்டைப் பெற்று பொலிவு பெறத் தொடங்கியுள்ளது. இவ்வளர்ச்சி தொழில்நுட்பக் கல்வி நிலையங்களின் எண்ணிக்கையைப்பெருக்குவதோடன்றி அவைகளின் தரத்தை உயர்த்தும் நோக்கத்தால் விளைந்தது. நான்காவது ஐந்தாண்டுக் காலத் திட்டத் தொடக்கம் முதல் தொழில் நுட்பக் கல்வியின் தர வளர்ச்சிக்கான முயற்சிகள் பல மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொழில் நிறுவனங்கள், மற்றும் பிற பொதுத்துறை, தனியார் துறை நிறுவனங்களின் தேவைகளைக் கருத்திற்கொண்டு பாடத்திட்டம், பயிற்சி ஆகியவற்றில் புதிய மாற்றங்களைப் புகுத்தல், ஆசிரியர்களின் திறமையை வளர்த்தல், பலதரப்பட்ட பாடத்திட்டங்களைத் தோற்றுவித்தல், மாணவர்களுக்கான பாடப்புத்தகங்களை நமது ஆசிரியர்களைக்கொண்டே தயாரித்தல் போன்ற பல மாறுதல்கள் மேற்கொள்ளப் படுகின்றன.

தமிழ்நாட்டின் தொழிற் கல்வியில், பொறியியல் கல்லூரிகள் பல்துறைத் தொழிற் பயிற்சிக் கல்லூரிகள், தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றின் எண்ணிக்கை, அவற்றின் ஆண்டு மாணவர் சேர்ப்பு எண்ணிக்கை இவற்றில் ஏற்பட்ட வளர்ச்சியைக் கீழ்க்காணும் அட்டவணையில் காணலாம்.

| கல்வி நிறுவனங்கள் | முதல் திட்டக் கால முடிவு 1956 | | இரண்டாவது திட்டக்கால முடிவு 1961 | | மூன்றுவது திட்டக் கால முடிவு 1966 | | நான்காவது திட்டக் கால முடிவு 1974 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை | ஆண்டு சேர்ப்பு | கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை | ஆண்டு சேர்ப்பு | கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை | ஆண்டு சேர்ப்பு | கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை | ஆண்டு சேர்ப்பு |
| (1) பொறியியல் கல்லூரிகள் (பல்கலைக் கழகத் துறைகள் ஐ.ஐ.டி. சென்னை உட்பட) | 7 | 660 | 11 | 1300 | 13 | 2430 | 13 | 2040 |
| (2) பல்துறைத் தொழிற் பயிற்சிக் கல்லூரிகள் (மகளிர் மற்றும் சிறப்பு நிறுவனங்கள் உட்பட) | 7 | 810 | 23 | 2910 | 36 | 4860 | 45* | 5600 |
| (3) தொழில்நுட்ப உயர்நிலைப் பள்ளிகள். | ... | ... | ... | ... | 16 | 960 | 15 | 900 |

''ஆயுதம் செய்வோம் -நல்ல
காகிதம் செய்வோம்
ஆலைகள் வைப்போம் - கல்விச்
சாலைகள் வைப்போம்
குடைகள் செய்வோம் - உழு
படைகள் செய்வோம்
கோணிகள் செய்வோம்-இரும்
பாணிகள் செய்வோம்
நடையும் பரப்ப - வரும்
வண்டிகள் செய்வோம்
ஞாலம் நடுங்கவரும்
கப்பல்கள் செய்வோம்''

என்று முழங்கிய அமரகவி பாரதியாரின் கனவு நனவாகும் நாட்களை நாம் நெருங்கிக் கொண்டிருக்கிறோம் என்றால் அது மிகையாகாது.

தொழில்நுட்பக் கல்வித் துறை இவ்வாறு பலவாறகப் பல்கிப் பெருகி மேன்மேலும் நாட்டிற்கு மிகச் சிறந்த முறையில் தொண்டாற்றி வரும் என்பது உறுதி. இவற்றை நோக்குங்கால் தமிழகம் உண்மையாகவே வளர்ந்து வருகிறது என்று நாம் மிகவும் பெருமைப்படலாம்.



# தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சி



வரவு-செலவுத் திட்டத்தில் மற்றெல்லாத் துறைகளைக் காட்டிலும் கல்வித் துறைக்கே அதிகத் தொகை அளிக்கப்பட்டுள்ளது. கல்விக்காக 1975-76-ஆம் ஆண்டில் ரூ. 118 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இத் தொகை 1975-76-ல் வருவாய்க் கணக்கில் ஆகும் மொத்தச் செலவான ரூ. 538 கோடியில் ஏறத்தாழ 22 விழுக்காடாகும்.

கல்விக்கான செலவு தொடர்ந்து உயர்ந்து கொண்டே வருகிறது. 1974-75-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தையும், 1975-76-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இது புரியும். 1974-75-ல் 108.5 கோடி ரூபாய் கல்விக்குச் செலவிடப்பட்டது. 1975-76-ல் 118 கோடிரூபாய்க்கு மதிப்பீடு உள்ளது.

பொது நூலகங்கள், தொல்பொருள் ஆராய்ச்சி, அரும்பொருட் காட்சிச் சாலைகள், பிற இனங்கள் ஆகியவற்றிற்கு 11.82 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

கல்வி வளர்ச்சிக்காகச் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கங்கள் தவிர, பள்ளி, கல்லூரிக் கட்டடங்கள், கடன்கள் முதலியவற்றுக்காக பிற கோரிக்கைகளின் கீழ் 1975-76-ல் பொதுக் கல்விக்கு ரூ. 5.52 கோடியும், தொழில் நுட்பக் கல்விக்கு ரூ. 27 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன.

மேற்சொன்ன நிதி ஒதுக்கங்கள்அனைத்தும் கணக்கிற்கொள்ளப்பட்டால், 1975-76-ல் கல்விக்காகச் செலவிடப்படும் தொகை ரூ. 124 கோடியாகும்.

அரிசனங்கள், பின் தங்கிய வகுப்பினர் நலப் பள்ளிகள், விடுதிகள், அரிசனங்கள், பழங்குடி வகுப்பினர், பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களுக்குப் படிப்பு உதவித் தொகைகள் முதலியவற்றுக்கான செலவும், சீர்திருத்தப் பள்ளிகள், தொழிற் பயிற்சி நிறுவனங்கள் போன்றவற்றிற்காகச் செலவுகளும் மேற்படி செலவினங்களின் கீழ் வாரா. இப் பல்வகை இனங்களின் மொத்தச் செலவு சுமார் ரூ. 17 கோடியாகும்.

மருத்துவக் கல்வி, வேளாண்மைக் கல்வி, கால்நடை மருத்துவக் கல்வி ஆகியவற்றுக்கு, அந்தந்தத் துறைகளின் கீழ் 1975-76-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் தனித்தனியாக ஒதுக்கப்பட்டுள்ள நிதி மொத்தம் சுமார், 7 கோடியாகும். மேற்கண்ட இரு இனங்களுக்காகும் செலவையும் (ரூ. 17 கோடியும், ரூ. 7 கோடியும்) கணக்கில் கொண்டால், 1974-75-ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் கல்வி வளர்ச்சிக்கான மொத்தச் செலவு சுமார் ரூ. 148 கோடியாக இருக்கும்.

இந்த நாட்டில் எழுத்தறிவை ஊட்டுவதிலும், கல்விக்காகச் செலவு செய்வதிலும் முன்னணியில் நிற்கும் மாநிலங்களில் நமது தமிழகம் ஒன்று ஆகும். 14 வயது வரை சிறுர் அனைவருக்கும் தொடக்க நிலைக் கல்வியை இலவசமாக அளிக்க வேண்டுமென்ற அரசியல் சட்ட நெறிமுறைக்கோட்பாட்டினை நிறைவேற்றுவதிலும், வேறுபல மாநிலங்களைக் காட்டிலும், தமிழகம் முன்னணியில் உள்ளது. வரவு-செலவு மதிப்பீட்டில் அனைத்து வகைக் கல்விகளுக்குமான மொத்தச் செலவுத் தொகை ஏறத்தாழ முப்பது விழுக்காட்டுக்கு மேல் ஆகும்.

## தொடக்கக் கல்வி:

### மாணவர் சேர்ப்பு:

1971-ஆம் ஆண்டு மக்கட் தொகைக் கணக்கின்படி தமிழ் நாட்டில் 6—11 வயதுத் தொகுதியைச் சேர்ந்த (1—5 வகுப்புகளில் படிப்பதற்குரிய) சிறுர்களின் எண்ணிக்கை 1975—76-ல் 61.6 இலட்சமாகும். இவர்களில் 90.3 விழுக்காட்டினர் ஆகிய 55.6 இலட்சம் சிறுர்கள் (நான்காவது திட்டக் காலத்திலும் 1974—75-ஆம் ஆண்டிலும் கூடுதலாகச் சேர்க்கப்பட்ட 6.42 இலட்சம் சிறுர்கள் உட்பட) பள்ளிகளில் படித்துக் கொண்டுள்ளனர். 1975—76-ல் இவ்வயதுத் தொகுதியினரில் மேலும் ஒரு இலட்சம் பேரைப் பள்ளிகளில் சேர்ப்பது குறிக்கோள் ஆகும்.

1974—75-ல் 11—14 வயதுத் தொகுதிச் சிறுர்கள்



சென்னைப் பல்கலைக் கழகம்.

(6—8 வகுப்புக்கட்குரியர்) 27.7 இலட்சம் பேர் இருந்தனர். அவர்களில் 52.6 விழுக்காட்டினர் ஆகிய 14.56 இலட்சம் பேர் (கடந்த ஆறு ஆண்டுகளில் கூடுதலாகச் சேர்க்கப்பட்ட 2.28 இலட்சம் உட்பட) பள்ளிகளில் படித்து வந்தனர். 1975—76-ல் இவ் வயதுச் சிறுர்களில் மேலும் 50,000 பேரைப் பள்ளிகளில் சேர்க்கத் திட்டமிடப்பட்டு உள்ளது.

தொடக்கப் பள்ளிகளில் அறிவியல் போதனையின் தரத்தையுயர்த்தும் நோக்கத்துடன் பாடத் திட்டங்கள் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. அறிவியல் சாதனங்கள் வாங்குதற் பொருட்டு ஒவ்வொரு உயர் தொடக்கப் பள்ளிக்கு ஆயிரம் ரூபாயும், ஒவ்வொரு தொடக்கப் பள்ளிக்கும் முந்நூறு ரூபாயும் உதவித் தொகையாக வழங்கப்படுகின்றன. இதுவரை இத் திட்டத்தால் 12,720 தொடக்கப்பள்ளிகளும், 3,334 உயர் தொடக்கப் பள்ளிகளும் பயன் அடைந்துள்ளன. 1975—76-ல் மேலும் 500 தொடக்கப் பள்ளிகளும் 200 உயர் தொடக்கப் பள்ளிகளும் பயன் அடையும்.

''ஐக்கிய நாடுகள் பன்னாட்டுக் குழந்தைகள் நிதி'' (யூனிசெஃப்) உதவியுடன் 1971—72 கல்வி ஆண்டு முதல் 1973—74 கல்வி ஆண்டு முடிய சென்னை, செங்கற்பட்டு, தென்னார்க்காடு மாவட்டங்களில் 50 தொடக்கப் பள்ளிகளிலும் 30 உயர் தொடக்கப் பள்ளிகளிலும் அறிவியல் பாடத்தைப் பயிற்றுவிக்கும்தரத்தைஉயர்த்துவதற்கான முன்னோடித் திட்டமொன்று செயல்பட்டது. 1974—75- முதல் யூனிசெஃப் உதவியுடன் அத் திட்டம் மாநிலத்தில் பல்வேறு பகுதிகளிலுமுள்ள 1,550 தொடக்கப் பள்ளிகட்கும், 1,800 உயர் தொடக்கப் பள்ளிகட்கும் பயனளிக்குமாறு விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இந் நிறுவனம், ரூபாய் மூன்று இலட்சம் செலவில், 1,550 தொடக்கப் பள்ளிகட்கு அறிவியல் ஆய்வுக் கருவிகள் அடங்கிய பெட்டிகளையும், 1,800 உயர் தொடக்கப் பள்ளிகட்கு, ரூ. 20 இலட்சம் செலவில், அறிவியல் ஆய்வுக் கருவிகள் அடங்கிய பெட்டிகளையும் இலவசமாக வழங்கியுள்ளது.

தொடக்கப் பள்ளிகட்கு இன்றியமையாத நூலகப் புத்தகங்களை வாங்கி வழங்கிட, 1974—75-ல் ரூ. 1,00,000 அனுமதிக்கப்பட்டது. 1975—76-ஆம் ஆண்டிலும் ரூபாய் ஒரு இலட்சம் இப்பணிக்குச் செலவிடப்படும்.

மாநிலத்திலுள்ள 5,800 உயர் தொடக்கப் பள்ளிகளில் சிலவற்றிலேயே தனியான உடற்பயிற்சி ஆசிரியர்கள் உள்ளனர். எனவே, 1973—74-ல் 195 உடற் பயிற்சி ஆசிரியர்கள் புதிதாக நியமிக்கப்பட்டனர். 1975—76-ல் மேலும் 150 பேர் புதிதாக நியமிக்கப்படுவர்.

தாம் வாழுமிடத்திற்கு ஏற்ற பயனுள்ள தொழில்களை மாணவர்கள் கற்றுக் கொள்ளும் பொருட்டும், தொழில் நுணுக்கத்தையும் உற்பத்தித் திறனையும் அறிந்து கொள்ளும் பொருட்டும், தொடக்கப் பள்ளிகளிலும் கைத்தொழிற் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. மாநிலத்திலுள்ள உயர் தொடக்கப் பள்ளிகளில் சுமார் 4,900 பள்ளிகளில் ஏற்கெனவே பகுதி நேர அல்லது முழு நேர கைத்தொழில் ஆசிரியர்கள் உள்ளனர். 1973—74-ல் ஏற்படுத்தப்பட்ட 576 முழுநேரக் கைத்தொழிலாசிரியர்கள் பணியிடங்களும் இதில் அடங்கும். இந்த 576 பணியிடங்களில் நேரிடை நியமனம் வழி ஏறத்தாழ 300 முழுநேரக் கைத்தொழில் ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டன. முழு நேரக் கைத்தொழில் ஆசிரியர் நியமனத்திற்கேற்ற தகுதிபெற்றிருந்தும் பகுதி நேரக் கைத்தொழில் ஆசிரியர்களாகப்பணியாற்றி வந்தவர்களுக்கு எஞ்சிய பணியிடங்கள் தரப்பட்டு உள்ளன. 1975—76-ல் கூடுதலாக 150 முழு நேரக் கைத்தொழில் ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்படும்.

**இலவசப் புத்தகங்கள் வழங்குதல்:**

1—3 வகுப்புகளில் பயில்வோரும், நண்பகல் உணவு பெறுவோருமான ஏழை மாணவர்களுக்கு, முதல் வகுப்பில் பாடப் புத்தகங்களும், சிலேட்டும், இரண்டு, மூன்று வகுப்புகளில் பாடப் புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத் திட்டத்தின் கீழ் ஆண்டு தோறும் 12 இலட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர்.

1972 — 73-ஆம் ஆண்டிலிருந்து பாட நூல்கள் தருவதற்கு ஆகும்செலவினைத் தமிழ்நாட்டுப் பாட நூல்நிறுவனமே தனது நிதியிலிருந்து ஏற்றுக் கொண்டுள்ளது. பாட நூல் நிறுவனம் இப் பணிக்காக 1974—75-ல் ஏறத்தாழ ரூ. 20 இலட்சமும் 1975—76-ல் ரூ. 25 இலட்சமும் செலவிடும். முதல் வகுப்பு மாணவர்கட்குச் சிலேட்டுகள் வழங்கும் வகையில் 1975—76-ல் ரூ. 2.50 இலட்சத்தை மாநில அரசு செலவிடும்.

**உள்ளாட்சி மன்றப் பள்ளிகள் :**

தமிழ்நாட்டிலுள்ள ஏறத்தாழ 32,565 தொடக்கப் பள்ளிகளுள் ஏறத்தாழ 22,400 பள்ளிகள் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் அமைந்துள்ளன. அவற்றுள் 22,400 பள்ளிகள் (சுமார் 19,200 தொடக்கப்



மதுரைப் பல்கலைக் கழகம்

பள்ளிகளும், சுமார் 3,200 உயர் தொடக்கப் பள்ளிகளும்) ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப்பட்டு வருகின்றன. ஆரம்பக் கல்விக்காக ஊராட்சி ஒன்றியங்கட்கு மானியம் வழங்குவதற்கான திருத்திய முறைப்படி (ஒரு ரூபாய் நிலவரிக்கு 45காசு என்று வசூலிக்கப்படும்) உள்ளூர் வரியில் 4/9 பாகம் தொடர்ந்து ஊராட்சிஒன்றியக் கல்வி நிதிக்கு வழங்கப்படும். 1971-ஆம் ஆண்டு மக்கட் தொகை அடிப்படையில் ஒவ்வொரு வட்டாரத்திலுமுள்ள மக்கள் தொகைக்கு தலைக்கு ரூ. 6 வீதம் கணக்கிட்டு வழங்கும் மானியம் கல்வி நிதிக்குச் செல்கிறது. தொடக்கக்கல்விக்காக ஆகும் செலவில் எஞ்சியதை மாற்றியமைக்கப்பட்ட வட்டார வகைப் பாட்டிற்கு ஏற்ப அரசும், ஊராட்சி ஒன்றியங்களும் பகிர்ந்து கொள்கின்றன.

சுமார் 1,400 பள்ளிகளை (சுமார் ஆயிரம் தொடக்கப் பள்ளிகளும், சுமார் நானூறு உயர் தொடக்கப் பள்ளிகளும்) நகராட்சிகள் நடத்தி வருகின்றன. நகராட்சிகள் கல்வி வரி வசூலிப்பதுடன் அவ்வாறு வசூலாகும் தொகையில் பாதிக்கு இணையான தொகையை அரசு மானியமாகவும் பெறுகின்றன. அத்துடன் நகராட்சிகளின் தொடக்கக் கல்விக் கணக்கில் துண்டு விழும் முழுத் தொகையினையும் அரசே ஈடுசெய்து வருகின்றது.

**உயர்நிலைப் பள்ளிக் கல்வி :**

1974 — 75-ல் தமிழ்நாட்டில் 14—17 வயதுத் தொகுதியினர் 22.87 இலட்சம் பேர் இருந்தனர். இவர்களில் 33 விழுக்காட்டினராகிய 7.52 இலட்சம் பேர் (கடந்த ஆறு ஆண்டுகளில் கூடுதலாகப் பள்ளிகளில் சேர்க்கப்பட்ட 1.15 இலட்சம் மாணவர்களையும் சேர்த்து) உயர்நிலைப் பள்ளிகளில் 9—11 வகுப்புகளில் பயின்றனர். இம் மாநிலத்தில் 2,882 உயர்நிலைப் பள்ளிகள் உள்ளன. அவற்றில் பயில்வோர் 16.55 இலட்சம் மாணவர்கள். பணி புரியும் ஆசிரியர்கள் 69,500 பேர்கள். ஆசிரியர்களுள் ஏறத்தாழ 10,000 ஆசிரியர்கள், கடந்த ஆறு ஆண்டுகளில் நியமனம் பெற்றவர்கள். 1975—76-ஆம் ஆண்டில் 14—17 வயது மாணவர்களுள் சுமார் 30,000 மாணவர்களைக் கூடுதலாகச் சேர்க்கவும் சுமார் 600 பட்டதாரி ஆசிரியர்களைக் கூடுதலாக நியமிக்கவும் கருதப்பட்டுள்ளது.

**கல்வித் தர உயர்வு :**

புதிய பாடத் திட்டத்தின் கீழ் ஏழாம் வகுப்பிலிருந்தே இயல்பியல், வேதியல், உயிரியல் ஆகியவை தனித் தனிப் பாடங்களாகக் கற்பிக்கப்படுகின்றன. அறிவியல் ஆய்வுக் கருவிகள் வாங்குவதற்கும், ஆய்வுக் கூடங்களை அமைப்பதற்கும், நிதியுதவி அளிக்கும் திட்டம் 1975—76-லும் தொடரும். இது வரை 867 உயர்நிலைப் பள்ளிகள் அறிவியற்கூட நிதியுதவியைப் பெற்றுள்ளன. 1975—76-ல் மேலும் 11 உயர்நிலைப் பள்ளிகள் இந் நிதியுதவியைப் பெறும். 1974—75- முதல் ஒவ்வொரு பள்ளிக்கும் ஆன செலவுத் தொகை ரூ. 40,000 -லிருந்து ரூ. 55,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. ஆய்வுக் கூடக் கட்டடத்திற்காகரூபாய் 37,000-ம் அறிவியல் சாதனங்களுக்காக ரூ. 18,000-ம் செலவிடப்படும். தனியார் உயர்நிலைப் பள்ளிகளும், நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளும்பெறும் ஆய்வுக்கூட மானியம் ரூபாய் 40,200 ஆகும். இதில் ரூபாய் 18,000 கருவிகளுக்காகும். இக் கருவிகளைப் பள்ளிக் கல்வித் துறை இயக்குநரே விலைக்கு வாங்கி வழங்குகிறார். கட்டடத்திற்கான செலவில் 60 விழுக்காடு அல்லது ரூ. 22,200 இதில் எது குறைவோ அது, என்ற அடிப்படையில் ஆய்வுக் கூடக் கட்டட மானியம் தனியார் மற்றும் நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளுக்கு அளிக்கப்படுகிறது.

உயர்நிலைப் பள்ளிகளில் நூலக வசதியைப் பெருக்கும் நோக்குடன் பொருத்தமான நூலகப் புத்தகங்கள் வாங்கப்பட்டுப் பள்ளிகட்கு வழங்கப்படுகின்றன. 1974—75-ல் பள்ளி ஒவ்வொன்றிற்கும் ரூ. 500 மதிப்புள்ள புத்தகங்கள் வீதம் 684 உயர்நிலைப் பள்ளிகட்கு நூல்கள் வழங்கப்பட்டு உள்ளன. இது வரை ஏறத்தாழ 2,472 உயர்நிலைப் பள்ளிகள் இத்திட்டத்தால் பயன் பெற்றுள்ளன. 1975—76-ல் ரூ. 85,000 மொத்தச்செலவில் மேலும் 85 அரசு உயர்நிலைப் பள்ளிகள் நூலகப் புத்தகங்களை பெறும்.

1974—75-ல் உயர்நிலைப் பள்ளிகளில் ஒளி-ஒலிக் கல்வி வசதிகளை ஏற்படுத்தவும் மாநிலத் திரைப்படச் சேமிப்பு நிலையத்தை முன்னேற்றவும், ரூபாய் ஒரு இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. சென்னையிலும் அதன் அண்மையிலும் உள்ள சுமார் 300 பள்ளிகளில் 1975—76-ல்தொலைக் காட்சிக் கருவிகள் நிறுவப்படக் கூடும்.

உயர்நிலைப் பள்ளிகளில் தொழிற் பயிற்சி தருவதற்காக பல்வகைப் பயிற்சிப் பள்ளிகளை (Comprehensive High School) நிறுவுமாறுகோத்தாரிக் கல்விக் குழு பரிந்துரைத்துள்ளது. வானொலிப் பெட்டிகள் பழுது பார்த்தல், மின் இயக்கிகள் பின்னுதல் (Electric Motor Rewinding) உந்து வண்டிகள் பழுது பார்த்தல் (Motor Mechanism) வேளாண்மைப்


விலை உயர்ந்த ரசாயன
உரத்தைக் களைகள்
தின்று விடுகின்றன
மாசேடி
அவற்றை முளைக்கும்
முன்னரே
அழித்துவிடுகிறது
இனி உங்கள் நெல் வயல்களில் களைகளினால் ஏற்படும்
பயிர்ச் சேதம் வெகுவாகக் குறைந்து விடும்.
மாசேடி ரசாயன உரத்தின் முழுப் பயனும்
உங்கள் நெற்பயிருக்குக் கிடைக்க வழிசெய்கிறது.
நீங்கள் அமோகமான நெல் விளைச்சலையும்,
அபாரமான லாபத்தையும் பெறுகிறீர்கள்.
MacHete
Monsanto
DANGER
மாசேடி®
களை நீக்கி
தயாரிப்பாளர்
Monsanto
மான்ஸான்டோ
50% ஈஸி மற்றும் 5% குருணைகளாகக் கிடைக்கிறது.
மான்ஸான்டோ கெமிகல்ஸ் ஆஃப் இந்தியா பிரை. லி.
தலைமை அலுவலகம்: வேக்ஃபீல்ட் ஹவுஸ், 11, ஸ்ப்ராட் ரோடு,
பாலர்டு எஸ்டேட், பம்பாய் 400 001
கிளைகள்: 3/8, அஸஃப் அலி ரோடு, புது டெல்லி 110 001
19, ராஜேந்திரநாத் முக்ர்ஜீ ரோடு, கல்கத்தா 700 001
310/311, லிங்கி செட்டி தெரு, சென்னை 600 001
மான்ஸான்டோ-இந்திய விவசாயிக்குச்
சேவைபுரியும், களைக்கொல்லி தயாரிப்போர்.
® மான்ஸான்டோ கம்பெனியின் ரெஜிஸ்டர்டு டிரேட்மார்க்.
அங்கீகாரத்துடன் மான்ஸான்டோ கெமிகல்ஸ் ஆஃப் இந்தியா
பிரைவேட் லிமிடெட் உபயோகிப்பது.
களைகளைப் போக்கி
விளைச்சலைப் பெருக்குங்கள்
Grant.18.TM(R)

பொறியியல் ஆகியவற்றைப் பாட நேரத்திற்குப் புறம்பான வேளைகளில் கற்பிக்கும் வண்ணம் 1974—75-ல் விரிவாக்கப்பட்டு, மேலும் சில உயர்நிலைப் பள்ளிகளில் அந்தந்த இடங்களின் சூழ்நிலைத் தேவைகட்கு ஏற்ப வெவ்வேறு தொழிற் பயிற்சிகளைத் தொடங்கி அப் பள்ளிகள் பல்வகைப் பயிற்சி தரும் பள்ளிகளாக உயர்த்தப்படும்.

### படிப்பு உதவித் தொகைகள் :

தமிழ்நாட்டில் எல்லா நிலையங்களிலும் பள்ளிக் கல்வி இலவசமாகும். கிராமப்புறத்தைச் சார்ந்த, கல்வியில் சிறந்த மாணவர்களுக்கு உதவித் தொகைகள் 1971—72 முதல் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்படி ஆண்டுதோறும் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் இரண்டு மாணவர்களுக்குப் புதிதாக இவ்வுதவித் தொகை வழங்கப்படுகின்றது. ஒரு முறை உதவித்தொகை பெற்ற மாணவர் பள்ளிக் கல்வியை முடித்து வெளிவரும் வரை இவ்வுதவித் தொகையைப் பெறுவார். இத்திட்டத்திற்கென ஏற்கப்பட்ட பள்ளிகள் ஏதாவது ஒன்றில் மாணவர் படிப்பதாயிருந்தால், உணவு விடுதியில் தங்கிப் படித்தால் ஆண்டொன்றுக்கு ரூ.1,000-ம் விடுதியில் தங்காமல் பள்ளிக்கு வந்து சென்று படித்தால் ஆண்டொன்றுக்கு ரூ. 500-ம் உதவித்தொகை வழங்கப்படும். மாணவர் தம் விருப்பப்படி சாதாரணப் பள்ளியில் சேர்ந்து படித்தாலும் ஆண்டொன்றுக்கு ரூ. 150 வழங்க 1974—75 முதல் ஏற்பாடு செய்யப்பட்டு

> கல்வி செழித்தால் கவிதை வரும்
> கற்பன கற்றால் திறமை வரும்
>
> —கவிஞர் சுரதா

உள்ளது. இந்த உதவித் தொகையைப் பெறும் மாணவர் எண்ணிக்கை ஆண்டுதோறும் (புதிதாகப் பெறுவோருள்பட) சுமார் 2,000 ஆகும். இது தவிர, பர்மா, இலங்கை அகதிகள், முன்னாள் இராணுவத்தினர், தாழ்த்தப்பட்ட இனத்தவர், பழங்குடி மக்கள், தங்கக் கட்டுப்பாட்டினால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்கள், அரசியல் தியாகிகள் ஆகியோரது குழந்தைகளுக்கும் தாராளமான கல்விச் சலுகைகள் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றன.

### தேர்வுகள் :

1975 பிப்ரவரி வரை பள்ளிக் கல்வி இயக்குநரே அரசுத் தேர்வு ஆணையாளராகவும் இருந்து வந்தார். 1975 பிப்ரவரி முதல், அரசுத் தேர்வுகளுக்காகத் தனி இயக்குநர் நியமிக்கப்பட்டுள்ளார். மாணவர் கல்வித் தர ஆய்வுக் குழு, மாநிலக் கல்வி ஆய்வு நிறுவனம் ஆகியவற்றுக்கும் அவரே இயக்குநர் ஆவார். அரசுத் தேர்வு ஆணையாளருக்கு உதவியாக ஒரு செயலர், ஒரு கூடுதல் செயலர், ஒரு முதுநிலை கணக்கு அலுவலர் ஆகியோர் உளர். அவர் ஆண்டுதோறும் சுமார் 24 தேர்வுகளை நடத்துகிறார். அவற்றில், ஆண்டுக்கு ஒரு முறை நடப்பவை சில; ஆண்டுக்கு இரு முறை நடப்பன சில. பள்ளியிறுதித் தேர்வு அவற்றில் முதன்மையானதாகும். அது மார்ச்சுத் தேர்வில் 1,200 மையங்களிலும் அக்டோபர் தேர்வில் 150 மையங்களிலும் நடைபெறுகிறது. 1974 மார்ச்சில் நடைபெற்ற பள்ளி இறுதித் தேர்வு எழுதிய 2,21,402 பேரில் 1,12,358 பேர் வெற்றி பெற்றனர். வெற்றி பெற்றவர் விழுக்காடு 51.9 ஆகும். பள்ளியிறுதித் தேர்வு முடிவுகளை விரைவில் அறிவித்தற் பொருட்டு இயந்திரக் கணிப்புப் பொறி பயன்படுத்தப்படுகிறது.

**மாநிலத்திலுள்ள ஏற்பளிக்கப்பட்ட பள்ளிகளில் எட்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்று, 18 வயது நிறைவு பெற்ற அனைவரும் தனிப்பட்ட முறையில் பள்ளியிறுதித் தேர்வில் கலந்து கொள்ள அனுமதித்துள்ளது குறிப்பிடத்தக்க சீர்திருத்தம் ஆகும்.**

படிப்பை முடிக்காமல் நின்று விட்டவர்கள்-தற்காலத்தில் தங்களுக்கு விருப்பமுள்ள வேலையில் தனிப்பட்ட முறையில் கல்வி பயில வசதி செய்ய வேண்டும் என்று மாநிலத் திட்டக் குழு பொதுவாகப் பரிந்துரைத்திருந்தது. அப் பரிந்துரைக்கேற்ப மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கை பெரிதும் வரவேற்கப்பட்டு உள்ளது.

### ஊனமுற்றோருக்கான பள்ளிகள் :

உடல் ஊனமுற்ற சிறுவர்களுக்காகத் தற்பொழுது இம் மாநிலத்தில் 27 பள்ளிகளும் செயல்பட்டு வருகின்றன. பார்வை இழந்த சிறுவர்களுக்காக 12 பள்ளிகளும், காது கேட்காத சிறுவர்களுக்காக 14 பள்ளிகளும், தொழு நோயால் வருந்தும் குழந்தைகட்காக 2 பள்ளிகளும், முடமாயுள்ள சிறுவர்களுக்காக ஒரு பள்ளியும் நடைபெற்று வருகின்றன. இப் பள்ளிகளில் ஏறத்தாழ 3,000 பிள்ளைகள் கல்வி பயில்கின்றனர்.

### கல்லூரிக் கல்வி :

இம் மாநிலத்தில் 1974-ஆம் ஆண்டு 24 ஆகவும், 1961-ல் 59 ஆகவும், 1966-67-ல் 105 ஆகவும் இருந்த கலை, அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரிகளின் எண்ணிக்கை 1974-75-ல் 183 ஆக உயர்ந்து உள்ளது. கல்லூரிகளில்


அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

மாணவர்களின் எண்ணிக்கை 1947, 1961 மற்றும் 1966-67 ஆகிய ஆண்டுகளில் முறையே 17,000; 45,000 மற்றும் 94,000 என வளர்ந்து 1974-75-ஆம் ஆண்டில் 2 இலட்சமாக உயர்ந்துள்ளது.

நான்காவது திட்டக் காலத்தில் புதிதாக 40 கல்லூரிகளே தொடங்கத் திட்டமிடப்பட்டிருப்பினும் அந்த ஐந்து ஆண்டுகளில் 56 கல்லூரிகள் திறக்கப்பட்டன. 1974-75-ம் ஆண்டில் 4 கல்லூரிகள் திறக்கப்பட்டன. இப்பொழுது மொத்தம் உள்ளவை 183 கல்லூரிகள். இம்மாநிலத்தில் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் தேவை ஏறத்தாழ முழுமையாக நிறைவேற்றப்பட்டு விட்டது எனலாம்.

கல்லூரிக் கல்விக்காகச் செலவு செய்யப்பட்ட தொகை 1967-68-ம் ஆண்டில் ரூபாய் 3.21 கோடியாகவிருந்து 1975-76-ம் ஆண்டில் ரூ. 11 கோடியாக (கல்லூரிக் கட்டடச் செலவு உட்பட) உயர்ந்துள்ளது.

நமது மாநிலத்தில் தற்போதுள்ள 183 கல்லூரிகளில் 106 கல்லூரிகள் சென்னைப் பல்கலைக் கழகத்துடனும் 77 கல்லூரிகள் மதுரைப் பல்கலைக் கழகத்துடனும் இணைந்துள்ளன. ஒரு பல்கலைக் கழகத்துடன் இணைந்துள்ள கல்லூரிகள் எண்ணிக்கை 30 அல்லது 40-க்கு மேல் அதிகமாக இருத்தல் கூடாது என்ற கஜேந்திர கட்கர் குழுவின் பரிந்துரையின்படித் தமிழ்நாட்டில் மேலும் ஒன்று அல்லது இரண்டு பல்கலைக் கழகங்களைத் துவக்குவதற்கு நியாயம் உண்டு. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் புதிய பல்கலைக் கழகம் ஒன்று தொடங்க வகை செய்யப்பட்டுள்ளது.

தற்போதுள்ள 183 கல்லூரிகளில், 51 கல்லூரிகள் அரசால் நேரடியாக நடத்தப்படுகின்றன. ஏனைய 132 கல்லூரிகள் மானியம் பெறும் தனியார் கல்லூரிகளாகும். 1966-67-ம் ஆண்டில் 78 ஆக இருந்த தனியார் கல்லூரிகளின் எண்ணிக்கை 1974-75-ஆம் ஆண்டில் 132 ஆக உயர்ந்துள்ளது. 1975-76-ஆம் ஆண்டில் கல்லூரிக் கல்விக்கான மொத்த செலவுத் தொகையான ரூபாய் 11 கோடியில் தனியார் கல்லூரிகளுக்கு மட்டும் சுமார் ரூபாய் 4 கோடி மானியமாக வழங்கப்படும்.

இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆல யம்பதி னாயிரம் நாட்டல்
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்

—சுப்ரமணிய பாரதி

ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கல்லூரிக் கல்வியின் தரத்தை உயர்த்துவதே அரசுக் கல்லூரிகளின் முக்கிய நோக்கமாகும். சென்னையிலுள்ள மாநிலக் கல்லூரி, இராணிமேரி கல்லூரி ஆகிய இரு முதன்மையான கல்லூரிகளும் பட்ட மேற்படிப்பு நிலையில் குறிப்பிட்ட பாடத் துறைகளில் சிறப்புக் கல்வி தரும் நிலையங்களாக மேம்படுத்தப்படுகின்றன. அறிவியல் கல்வியை வளர்த்திட அரசுக் கல்லூரிகளில் ஆய்வகக்கூட வசதி பெருக்கப்படும். இதற்காக 1974-75-ஆம் ஆண்டில் ரூ. 3.50 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1975-76-ஆம் ஆண்டிற்கும் ரூ. 4 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதிக விலையுள்ள பாடப் புத்தகங்களை வாங்க இயலாதவர்கள் பயன்படுத்துவதற்காக அரசுக் கல்லூரிகளில், தமிழ்ப் பாட புத்தகங்கள் உட்பட, அனைத்துப் பாடப் புத்தகங்களும், பொது அறிவிற்கான புத்தகங்களும் சேமித்து வைத்து வழங்கிட 1974-75-ஆம் ஆண்டில் ரூபாய் ஒரு இலட்சம் செலவிடப்பட்டது. அரசுக் கல்லூரி மாணவர்களின் வசதிக்காக உணவருந்தும் இடம், மிதி வண்டி நிறுத்துமிடம், சிற்றுண்டிச் சாலைகள் ஆகியவற்றை அமைக்க 1974-75-ல் ரூ.3.35 இலட்சங்களும், 1975-76-ல் ரூ. 3.50 இலட்சங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. கல்லூரிகளில் மாணவர்களின் விளையாட்டுத் திறனை வளர்த்திடவும், விளையாட்டுத் திடல்களைப் பேணிச் சீர்படுத்துவதற்காகவும் விளையாட்டுச் சாதனங்கள் வாங்குவதற்காகவும் தனிக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

### படிப்பு உதவித் தொகைகளும், பயிற்சி உதவித் தொகைகளும்

கல்லூரிப் புகுமுகப் படிப்பு அளவில் இலவசக் கல்வி அளிக்கும் ஒரு சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். இத்திட்டத்தினால் அரசுக்கு ஆண்டு தோறும் சுமார் ரூபாய் இரண்டு கோடி செலவாகிறது. இதைத் தவிர 1971-72-ஆம் ஆண்டு முதல், அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் பி.ஏ., பி.எஸ்ஸி.

வேளாண்மைப் பல்கலைக் கழகம். கோவை



வகுப்புகளில் தமிழ் மூலம் பயிலும் மாணவர்கள் ஆண்டுக்கு ரூ. 50 புத்தகப்படியும் பெற்று வருகிறார்கள். இத்திட்டத்தினால் ஒவ்வொரு ஆண்டிலும் அரசுக்குச் சுமார் ரூ.40 இலட்சம் செலவாகிறது. அரசுக் கல்லூரிகளிலும் தனியார் கல்லூரிகளிலும் தமிழைப் பயிற்று மொழியாகக்கொண்டு பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 1974-75-ல் புகுமுக வகுப்பில் 19,542 பட்டப் படிப்பில் 15,839 ஆகும்.




தேசியப் படிப்பு உதவித் தொகைத் திட்டத்தின் கீழும் ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கான படிப்புதவித் தொகைத் திட்டத்தின் கீழும், தற்போது ஆகும் அளவுக்குச் செலவை 1974-75-ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து செய்துவரும் பொறுப்பை மாநில அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், அந்தச் செலவுக்கு மேலாகக் கூடுதல் படிப்புதவித் தொகைகள் ஏற்படுத்துவதற்கு ஆகும் செலவை மட்டுமே மைய அரசு ஏற்கும் என்றும், மைய அரசு தெரிவித்துள்ளது. இம்முடிவை மறு ஆய்வு செய்து, முன்போலவே முழுச் செலவையும் மைய அரசு தொடர்ந்து ஏற்றுவர வேண்டுமென அவ்வரசிடம் கோரப்பட்டுள்ளது.

உடல் ஊனமுற்றோர், பாதுகாப்புப் படையினரின் குழந்தைகள், பர்மா, இலங்கை அகதிகளின் குழந்தைகள் ஆகியோருக்கான படிப்பு உதவித் திட்டங்களும் செயல்பட்டு வருகின்றன. அரிசன மாணவர்களும், பழங்குடி மாணவர்களும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களும், அரிசன நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆகிய துறைகளிலிருந்து படிப்புதவித் தொகைகள் பெற்று வருகின்றனர்.

படிப்புதவித் தொகைத் திட்டங்களில் கல்லூரிக் கல்வி இயக்குநர் பொறுப்பில் உள்ளவற்றிற்கு மட்டும் 1975-76 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு சுமார் ரூபாய் ஒரு கோடியாகும்.

**தமிழ்மொழியில் கல்லூரிப் பாட நூல்கள்:**

தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் தமிழைப் பாட மொழியாகக் கொண்டுள்ள கல்லூரி மாணவர்களுக்காக இதுவரையில் 650 புத்தகங்களை வெளியிட்டுள்ளது. இந்த 650 புத்தகங்களில் 490 மூல நூல்களாகும். 160 மொழி பெயர்ப்புகளாகும். இந்த வெளியீடுகளில் பலவற்றை பாடநூல்களாகவும், குறிப்புப் புத்தகங்களாகவும் மாணவர்கள் பயன்படுத்திடப் பல்கலைக் கழகங்கள் பரிவுரை செய்துள்ளன. தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், மானிடவியல் முதல் அணுசக்தி அறிவியல் வரை அனைத்துப் பொருள்களையும் பற்றி மேலும் 250 புத்தகங்களை வெளியிடுவதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

**சட்டக் கல்வி :**

சட்டக் கல்லூரி மாணவர்களின் எண்ணிக்கை 1968—69-ல் 1,045 ஆக இருந்து 1974—75-ல் சுமார் 2,647 ஆக (முறையான பட்டப் படிப்பு வகுப்புகளில் 1,830, மாலை நேரப் பட்டப் படிப்பு வகுப்புகளில் 703, எம். எல். வகுப்புகளில் 114) உயர்ந்துள்ளது. சட்டப் படிப்பில் சேருவதற்கான ஆர்வத்தை நிறைவு செய்யும் பொருட்டு, மாலை நேர வகுப்புகள் 1966—67-ல் தொடங்கப்பட்டன. மாலை நேரக் கல்லூரி மாணவர்களுக்கான பட்ட மேற்படிப்பு வகுப்புகளும் (எம். எல்.) 1969—70-ல் தொடங்கப்பட்டன.

1974—75-ஆம் ஆண்டில் மதுரையில் புதிய சட்டக் கல்லூரி திறக்கப்பட்டு 320 மாணவர்கள் முதல் ஆண்டுச் சட்ட வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

**தொழில் நுட்பக் கல்வி:**

தொழில் நுட்பக் கல்விக்காக 1974-75-ல் ரூ. 462 இலட்சங்கள் (தொழில் நுட்பக் கல்வி நிலையக் கட்டடச் செலவு போன்றவை உட்பட) ஒதுக்கட்டுள்ளன. இத்துறையின் கீழ் 7 பொறியியற் கல்லூரிகளும், 38 பல்தொழில் நுட்பப் பயிலகங்களும் (மூன்று மகளிர் பயிலகங்களும், எட்டு தனித்தொழில் டிப்ளமோ கல்வியகங்களும் உள்பட) 14 தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகளும் உள்ளன. இன்றைய நிலையில் பட்டப் படிப்புகளில் 1,300 மாணவர்களும், தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகளில் 840 மாணவர்களும் ஆண்டுதோறும் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். மேற்சொன்ன ஏழு பொறியியற் கல்லூரிகள் தவிர இந்த மாநிலத்தில், கிண்டியிலுள்ள அழகப்பச் செட்டியார் தொழில் நுட்பக் கல்லூரி, இந்தியத் தொழில் நுட்பக் கல்வியகம், சென்னை தொழில் நுட்பக் கல்வியகம்,

அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பொறியியற் கல்லூரி, திருச்சிராப்பள்ளியில் உள்ள வட்டாரப் பொறியியற் கல்லூரி ஆகிய ஐந்து பொறியியற் கல்லூரிகளும் உள்ளன. அவை பல்கலைக் கழகப் பிரிவுகளாக இயங்குபவை, அல்லது தன்னுரிமையுள்ளவை ஆகும்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக்காலத் தொடக்கத்திலிருந்தே தொழில் நுட்பக் கல்விக்காக இருக்கின்ற வசதிகளைச் சீர்செய்து ஒருமுகப் படுத்துவதிலும், தரத்தை மேம்படுத்துவதிலும்தான் அதிகக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. மாணவர்களுக்கு அதிக வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தவும், தொழில் நிறுவனங்களில் புதிதாகத் தோன்றும் துறைகளிலும், பிரிவுகளிலும் எந்தெந்தப் பயிற்சிகளைப் பெற்றவர்கள் தேவைப்படுகிறார்களோ அந்தந்தப் பயிற்சிகளை அளிக்கவும் தொழில் சம்பந்தப்பட்ட பல புதிய பாடத் திட்டங்கள் துவக்கப்பட்டிருக்கின்றன.

**பொறியியற் கல்லூரிகள்:**

புதிய பல பாடங்களைத் தொடங்கும் திட்டத்தின் கீழ் கிண்டிப் பொறியியல் கல்லூரியில் ''செயல் வகையாய்வு'' (Operations Research) என்ற துறையில் பட்ட மேற்படிப்பு டிப்ளோமா வகுப்பு தொடங்கப்படும். அக்கல்லூரியிலே ஆற்றல் மின்னணுவியல் (Power Electronics) என்ற புதிய துறையும் துவக்கப்படுகிறது.

**பல்தொழில் நுட்பப் பயிலகங்களும் டிப்ளோமா வழங்கும் மற்ற பயிலகங்களும் :**

பல்தொழில் நுட்பப் பயிலகங்களில் பல புதிய பாடத் திட்டங்கள் துவக்கப்படும். சென்னையிலுள்ள மையப் பல்தொழில் நுட்பப் பயிலகத்தில் தொலைப்படப் பொறியியல் டிப்ளோமா மேற்படிப்புத் திட்டம் துவக்கப்படும். திருச்சிராப்பள்ளியிலுள்ள அரசுப் பல்தொழில் நுட்பப் பயிலகத்தில், மகளிர் பயிலுவதற்காக, மின் அணுவியல் துறையில் ஒரு டிப்ளோமா படிப்பு ஆரம்பிக்கப்படும். மாநிலத்தில் ஏற்கெனவேயுள்ள மகளிர் பயிலகங்களிலுள்ள வசதிகளோடு மேற்சொன்ன ஆண்கள் பயிலகத்திலும் இவ்வாறு மகளிர்க்கான படிப்புத் திட்டங்களைத் தொடங்குவது மகளிர்க்கான வசதிகளை நிறைவாக்கும். சென்னையிலுள்ள மையப் பல்தொழில் நுட்பப் பயிலகத்தில் இப்போதுள்ள ''மீன் தொழில் நுட்பம் — கப்பலியக்கு முறை'' ஆகியபடிப்பு, வேலையிடைக் கல்வி (Sandwich) முறைக்கு மாற்றப்படும். தோல் பதனிடுவதற்கேற்ற ஒரு தொழிற்படிப்புத் திட்டம், சென்னை, தோல் தொழில் நுட்பப் பயிலகத்தில் தொடங்கப்பட்டுள்ளது. நுண் அலைத் தொடர்பு (Micro-wave Communications) என்ற விருப்பப் படிப்பு சென்னையிலுள்ள மகளிர் தொழில் நுட்பப் பயிலகத்தில் துவக்கப்படும். மாமல்லபுரத்திலுள்ள சிற்பப் பயிற்சி நிலையமும், சென்னையிலுள்ள கலைத் தொழில் நுணுக்கக் கல்லூரியும் 1973-ஆகஸ்ட் திங்கள்



**மாமல்லபுரம் சிற்பப் பயிற்சிப் பள்ளி.**

1-ம் தேதியிலிருந்து தொழில் நுட்பக் கல்வி இயக்குநரின் கீழ் வந்துள்ளன. அந்தச் சிறப்புப் பயிற்சி நிலையத்தில் இப்பொழுது இருக்கும். 'கட்டடம் மற்றும் சிற்பக் கலை'க்கான டிப்ளோமாப் படிப்பு சீர்திருத்தி அமைக்கப்படும். அது டிப்ளோமா வாங்குவதற்கு முன்னால் இரண்டு வருடப் படிப்பும், மூன்றாவது வருடம் அதே பாடத்தில் முறையான டிப்ளோமா படிப்பும் கொண்டதாக அமைக்கப்படும். அந்தக் கலைத்தொழில் நுணுக்கக் கல்லூரியில் புகைப்படக்கலை, கல்லச்சுப் பதிப்புக் கலை, படஅச்சு-செய்முறை, புத்தகக் கட்டுக் கலை, சிப்பம் கட்டும் கலை (Photography, Lithograpy, Block Macking, Book Binding, Packaging) ஆகியபுதியபாடங்கள் தொடங்கப்படும்.

தொழில் நுட்பக் கல்வி இயக்ககமே அனைத்து டிப்ளோமாப் படிப்புகளுக்கும் தேர்வுகளையும் நடத்தி வருகிறது. தேர்வு நடத்தும் முறை ஒழுங்கு ஆகியவை முன்னேற்றம் கண்டு வருகின்றன. 1974-ஆம் ஆண்டு நவம்பரிலிருந்து சில பாடங்களில் ''வினா வங்கி' முறை துவக்கப்பட்டுள்ளது. இந்த முறையினால் வினா வங்கியில் விவரித்த வினாக்களின் உதவியோடு மாணவர்கள் அந்தந்தப் பாடம் முழுவதையும் கற்று அறிந்து கொள்ள இயலும். வினா வங்கியிலிருந்துதான் தேர்வுக்கு வினாக்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. வினா வங்கியானது அந்தந்தப் பாட ஆசிரியருக்கும் ஒரு துணையாகும்.

**தனியார் பொறியியற் கல்லூரிகளும், தொழில் நுட்பப் பயிலகங்களும் :**

தனியார் பொறியியல் கல்லூரிகளுக்கும் தொழில்நுட்பப் பயிலகங்களுக்கும் ஆண்டுதோறும் அளிக்கப்பட்டு வரும் மானியத் தொகை படிப்படியாக உயர்ந்து வருகிறது. 1968-69-ல் ரூ. 68 இலட்சங்கள் அளிக்கப்பட்டதற்கு மாறாக 1975-76-ல் சுமார் ரூ. 1,09 இலட்சங்கள் மானியத் தொகையாக வழங்கப்பட

விருக்கிறது. தனியார் பள்ளி மற்றும் தனியார் கல்லூரி ஆசிரியர்கள் ஏற்கெனவே தாராள ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். தனியார் பொறியியற் கல்லூரி மற்றும் தொழில் நுட்பப் பயிலகங்களின் ஆசிரியர்களையும் அவ்விதிகளின் கீழ் கொண்டு வந்து அவர்களுக்கும் ஓய்வூதியம் தர அரசு முடிவெடுத்துள்ளது.

**வணிகவியல் பாடங்களில் தேர்வு:**

தொழில் நுட்பவியல் இயக்குநரே வணிகவியல் பாடங்களான தட்டெழுத்து, சுருக்கெழுத்து, வரவு-செலவு கணக்கியல், வணிகவியல் பயிற்சி, வணிகப் புவியியல், வங்கியியல் முதலியவற்றில் ஆண்டுதோறும் ஏறத்தாழ ஒரு இலட்சம் மாணவர்களுக்குத் தேர்வு நடத்தும் அதிகாரியுமாவார். மேற்கண்ட பாடத்திட்டங்களும், தேர்வு முறைகளும் செம்மையாக்கப்பட்டுள்ளதோடு, இம்மாநிலத்துள்ள ஒப்புதலளிக்கப்பட்ட வணிகவியல் பள்ளிகளில் கல்வி கற்பிக்கும் தரமும் உயர்த்தப்பட்டுள்ளது.

**தொழில் நுட்பப் பல்கலைக் கழகம்:**

கடந்த சில ஆண்டுகளாகவே தமிழகத்தில் ஒரு தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் துவக்க முனைப்பான முயற்சிகள் செய்யப்பட்டன. ஒற்றை வகைத் (Unitary Type) தொழில்நுட்பப் பல்கலைக் கழகம் ஒன்றைச் சென்னையில் ஏற்படுத்த வேண்டுமென்னும் மாநில அரசுக் கோரிக்கைக்குக் கொள்கையளவில் 1975 சனவரி திங்கள் 15- அன்று பல்கலைக் கழக மானியக்குழு

> கல்வியிலான் ஆவியிலா தவனே
> —பாவேந்தர் பாரதிதாசன்

இசைந்துள்ளது. கிண்டிப் பொறியியற் கல்லூரியுடன் அதையொட்டியமைந்துள்ள மையத் தொழில் நுட்பப் பயிலகங்களைச் சேர்த்து "அறிவியல், தொழில் நுட்பப் பல்கலைக் கழகம்" அமைக்கப்படும். கடந்த 180 ஆண்டுகளாகச் சிறப்பாகச் செயல்படும் கிண்டிப் பொறியியற் கல்லூரியில் தற்பொழுது ஆண்டு தோறும் 400 மாணவர்கள் நான்கு பொறியியல் துறைகளில் பட்டப் படிப்பிற்கும், 100 மாணவர்கள் பதினைந்து துறைகளில் பட்ட மேற்படிப்பிற்கும் சேர்க்கப்படுகின்றனர். பொதுவியல், இயந்திரவியல், மின்னியல், மின்னணுவியல், இரசாயன நுட்பவியல், தோல் நுட்பவியல், நெசவு நுட்பவியல், மீன்தொழில் நுட்பவியல், தோட்டக்கலை, அச்சியல், வணிகவியல் முதலிய பல்வேறு தொழில் நுட்பவியல்களுக்கான டிப்ளொமாப் படிப்புகளையும் மற்ற வேறு பலவகைப் படிப்புகளையும் மையத் தொழில் நுட்பப் பயிலகங்கள் நடத்தி வருகின்றன. கிண்டிப் பொறியியற் கல்லூரி வளாவின் பரப்பளவு 265 ஏக்கரும், மையத் தொழில் நுட்பப் பயிலகங்கள் வளாவின் பரப்பு 891 ஏக்கரும் ஆகும். பல்கலைக் கழகம் நிறுவுவதற்கான கட்டடங்களும், தேவையான கருவிகளும் இந்த நிறுவனங்களில் உள்ளன.



**கணித அறிவியல் நிறுவனம்:**

நடுவண் அரசு, மாநில அரசுகளின் உதவியோடு தன்னுரிமை பெற்ற அமைப்பாக கணித அறிவியல் நிறுவனம் அடையாறு பகுதியில் செயல்படுகிறது. இந்நிறுவனத்துக்கு மாநில அரசு ஆண்டொன்றுக்கு 3.5 இலட்சம் மானியமாக அளிக்கிறது. தற்பொழுது இந்நிறுவனம் அடிப்படைக் கணிதத்திலும் கணிதஞ் சார்ந்த இயல்பியலிலும் உயர்தர ஆய்வு நடத்தி வருகிறது. இந்நிறுவனம் அனைத்திந்தியப் பெருமை அடைந்துள்ளது. அதன் பணிகள் சிறக்கும் வகையில் இந்திய அரசு பெருமளவில் அதற்கு உதவி செய்ய முன்வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**சென்னைத் தொழில் நுட்பக் கல்வியகம்:**

குரோம்பேட்டையிலுள்ள சென்னைத் தொழில் நுட்பக் கல்வியகம் 1949-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 1969-70 வரை அது தனியார் பொறியியற் கல்லூரியாக இருந்தது. 1969-70ஆம் ஆண்டு முதல் அது தமிழ் நாட்டுக் கல்வி அமைச்சரைத் தலைவராகக் கொண்ட ஒரு ஆட்சிக்குழுவின் நிருவாகத்தின்கீழ் வந்துள்ளது. முற்றிலும் புதிய துறைகளான வானவூர்திப் பொறியியல், உந்து வண்டிப் பொறியியல் மின்னணுப் பொறியியல், கருவிப் பொறியியல், ஆகிய துறைகளில் இந்நிறுவனம் வகுப்பு நடத்துகிறது. அறிவியல் பட்டதாரிகளே இவ் வகுப்புகளில் சேர்க்கப்படுகின்றனர். வானவூர்திப் பொறியியலிலும், மின்னணுப் பொறியியலிலும் இந்நிறுவனம் பட்ட மேற் படிப்பு வகுப்புக்களையும் (சென்னைப் பல்கலைக் கழகத்தோடு இணைந்தவை) நடத்துகிறது. இந்நிறுவனத்தை நடத்த ஆண்டுதோறும் ஆகும் நிகரச் செலவு இப்பொழுது ஏறத்தாழ ரூபாய் 11 இலட்சமாகும். இச்செலவில் மூன்றில் இரண்டு பகுதியை நடுவண் அரசும், மூன்றில் ஒரு பகுதியை மாநில அரசும் ஏற்று வந்தன. இந்த விகிதத்தின்படி செலவுத் தொகையை ஏற்றுக் கொள்ள முதலில் 1974-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ஆம் நாள் முடியவே மைய அரசு ஏற்று இருந்ததெனினும், அந்நாளுக்குப் பின்னரும் தொடர்ந்து ஏற்று வருமாறு மைய அரசு வேண்டப்பட்டுள்ளது. அவ்வரசு இசையும் என நம்பப்படுகிறது.

# ஆசிரியர்களுக்கு நல்வாழ்வுத் திட்டங்கள்!

ஆசிரியர்கள் நல நிதிக்குப் பணம் திரட்டுவதற்காகத்தான் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 5-ஆம் தேதி ஆசிரியர்கள் தினம் கொண்டாடப்படுகிறது என்று பொதுவாக நினைக்கிறோம். ஆனால் பணம் திரட்டுவதைக் காட்டிலும் மேலான நோக்கம் இந்த நாளுக்கு உண்டு. குழப்பம் நிறைந்த நவீன யுகத்தில் கல்வியறிவு புகட்டும் ஆசிரியர் பெருமக்களுக்கு நம்முடைய வணக்கத்தையும் மரியாதையையும் தெரிவிப்பதற்காக இந்த நாள் கொண்டாடப்படுகிறது. கற்றுக் கொடுப்பவர்களுக்கும் கற்றுக் கொள்பவர்களுக்கும் இடையே இரு வழிப் பாதை உள்ளது என்பதை உணர்த்துவது இந்தக் கொண்டாட்டத்தின் நோக்கம்.

பண்டைக் கால இந்தியாவில், அரசன் முதல் ஆண்டி வரை எல்லாரும் குருவுக்குத் தங்கள் வாழ்க்கையில் முக்கிய இடமும் மரியாதையும் கொடுத்தனர். இன்று சூழ்நிலைகள் மாறிவிட்டன. ஆசிரியர்களின் தொழில் முறைத் தகுதியையும் மதிப்பையும் உயர்த்துவதற்கு முயற்சி செய்வதன் வாயிலாக, நெடுங்காலமாகப் போற்றிப் பாராட்டி வரும் ஒரு சிறந்த மரபையே நாம் பின்பற்றுகிறோம். இன்றைய உலகில் அறிவு வளர்ச்சிக்கு எல்லையே இல்லை. எல்லோரையும் புரிந்து கொண்டு வெற்றியுடன் வாழ வேண்டுமானால் அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். இந்த நிலையில் அறிவை வளர்க்கும் ஆசிரியர்கள் முக்கிய இடம் பெறுவதில் வியப்பில்லை.

இந்தியா, ஆசிரியர்களின் முக்கியத்துவத்தை உணர்ந்திருப்பதால் நாட்டின் விடுதலைக்குப் பிறகு ஆசிரியர்களின் நல்வாழ்வுக்காகப் பல திட்டங்களைத் துவக்கி இருக்கிறது. தேசிய ஆசிரியர்கள் நல நிறுவனம் என்ற அமைப்பு, சிரமத்தில் இருக்கும் ஆசிரியர்களுக்கும், அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் இதுவரையில் ஒரு கோடியே 55 இலட்சம் ரூபாய் அளவுக்கு உதவி செய்திருக்கிறது. இந்தத் திட்டத்தின் மூலம் 26,580 ஆசிரியர்கள் பயனடைந்திருக்கின்றனர். கடந்த சில ஆண்டுகளில் ஆசிரியர்கள் நல்வாழ்வுக்காகத் துவக்கப்பட்டிருக்கும் புதிய திட்டங்களில் சில:

மிகச் சிறப்பாகப் பணி புரியும் ஆசிரியர்களைச் சிறப்பிப்பதற்காக 1958-ஆம் ஆண்டில் ஆசிரியர்களுக்காக தேசிய விருது வழங்கும் திட்டம் துவக்கப்பட்டது. 1969-ஆம் ஆண்டு முதல் இதுவரையில் 100 ஆசிரியர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இவர்களில் 90 பேர் துவக்க, உயர்நிலைப் பள்ளிக்கூட ஆசிரியர்கள், 9 பேர் சமஸ்கிருத பண்டிதர்கள்; ஒருவர் மத்தியப் பள்ளிக்கூடத்தைச் சேர்ந்தவர். விருது பெறும் ஆசிரியர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழும் 1,000 ரூபாய் ரொக்கமும் வழங்கப்படுகிறது. 1973-ஆம் ஆண்டில் நான்கு உயர் மட்ட விருதுகள் ஏற்படுத்தப்பட்டன. இரண்டு விருதுகள் ஆசிரியர்களுக்கும் மற்றும் இரண்டு விருதுகள் ஆசிரியைகளுக்கும் வழங்கப்படுகின்றன. இவர்கள் ஒவ்வொருவருக்கும் பாராட்டுச் சான்றிதழும் 1,000 ரூபாய் ரொக்கமும் 1,000 ரூபாய் மதிப்புள்ள தேசிய சேமிப்புப் பத்திரங்களும் வழங்கப்படுகின்றன. ஆசிரியர்களுக்கான தேசிய விருதுகள் ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் 5-ஆம் தேதி அறிவிக்கப்படுகின்றன.

**ஆசிரியர் குழந்தைகளுக்குச் சம்பளத்தில் சலுகை:**

தமிழ்நாடு, ஆந்திரம், பீகார், கேரளம், கர்நாடகம், ஆகிய மாநிலங்களிலும் மத்திய நிர்வாகப் பகுதிகளிலும் உயர்நிலைப் பள்ளிக்கூட நிலை வரையில் ஆசிரியர் குழந்தைகளுக்கு இலவசக் கல்வி வசதி கிடைக்கிறது. இந்த மாநிலங்களில் பொதுவாகவே உயர்நிலைப் பள்ளிக்கூட நிலை வரையில் இலவசக் கல்வித் திட்டம் இருந்து வருகிறது.

**தேசிய ஆசிரியர்கள் நல நிறுவனம்:**

ஏழ்மை நிலைமையில் இருக்கும் ஆசிரியர்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் உதவுவதற்காக 1962-ல் மத்திய கல்வி அமைச்சகம் இந்த நிறுவனத்தை ஏற்படுத்தியது. ஆசிரியர்களின் குழந்தைகளுக்குக் கல்வி வசதி அளிப்பதற்கும் இத்திட்டம் உதவுகிறது. பாராட்டுக்குரிய வகையில் பணி புரிந்து ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கு இந்த நிறுவனம் உதவித் தொகையும் வழங்குகிறது.

## தொழிலாளர் கல்வித் திட்டம்

தொழிலாளர் கல்வித் திட்டத்தின்படி, நாட்டில் முக்கிய தொழில் பிரிவுகள் உள்ள பகுதிகளில் தொழிலாளர் கல்வி வசதிக்காக, இதுவரை, 33 வட்டார நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மத்திய தொழிலாளர் கல்வி வாரியத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் இந்த நிலையங்கள், 3,000 தொழிலாளர் – ஆசிரியர்களுக்கும், ஒரு லட்சத்து 65 ஆயிரம் தொழிலாளர்களுக்கும் பயிற்சி அளித்துள்ளது.

மேலும், தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக, 115 தொழிற் சங்கங்களுக்கு, மொத்தம், ஒரு லட்சம் 52 ஆயிரத்து 176 ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

கல்வி அதிகாரிகள், தொழிற்சங்க உறுப்பினர்கள், முதலியவர்களுக்கும், மறு பயிற்சி வகுப்புகளும், முறையான பயிற்சி வகுப்புகளும் நடத்தப்படுகின்றன.

மத்திய மற்றும் வட்டாரத் தொழிலாளர் நலக் கழகங்கள், தொழிற்சாலைகளில் விபத்துத் தடுப்பு, நல்வாழ்வு, தொழில் பிரிவிலேயே பயிற்சி, உற்பத்தித் திறன், தொழிலாளர் மனநிலை போன்ற பல்வேறு தலைப்புகள் சம்பந்தமாகப் பயிற்சி வகுப்புகள் நடத்தி வருகின்றன.

# மதுரைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்வழிப் பயிற்று முகாம்!





தாய் மொழி வழியாக அறிவியலையும், கலைகளையும் மாணவர்கள் பயில வேண்டும் என்ற கருத்தைத் தமிழக அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. இதனைச் செயல்படுத்துவதற்காகப் பன்னூருயிரரூபாய் செலவில் பல முன்னேற்பாடுகளைத் தமிழக அரசு பலஆண்டுகளாக ஆற்றி வந்துள்ளது. அறிவியல் நூல்களும், கலையியல் நூல்களும் தமிழில் படைக்கப்பட்டு அச்சாகி அறிவுலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளன. எனவே தமிழில் அறிவியல், கலை நூல்கள் இல்லை என்ற குறை நீங்கியது.

மாணவர்களுக்கு, இவ்வறிவியல், கலைகளைத் தமிழில் பயிற்றுவிக்க ஆசிரியர்களும் பல ஆண்டுகளாகப் பயிற்றுவிக்கப்படுகிறூர்கள். இந்த அடிப்படையில் தமிழக அரசும், மதுரைப் பல்கலைக் கழகமும் இணைந்து நடத்தும் ''தமிழ் வழிப் பயிற்று முகாம்'' புகுமுக வகுப்பில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்காக. மதுரை அருள்மிகு மீனுட்சி அரசினர் மகளிர் கல்லூரியில் 23-12-74 முதல் 5-1-75 வரை பதினைந்து நாட்கள் நடைபெற்றது. கணக்கியல், இயற்பியல், வேதியியல், தாவர இயல், விலங்கியல், வணிகவியல் ஆகிய துறைகளைச் சார்ந்ததேர்ந்தெடுக்கப்பெற்ற 225 ஆசிரியர்கள் பயிலுநராக இங்கு முகாமிட்டனர். ஏற்கெனவே இத்துறையில் பயிற்சி பெற்ற 38 ஆசிரியர்கள் இவர்களுக்குப் பயிற்சி அளித்தனர். மதுரைப் பல்கலைக் கழக சிண்டிகேட் உறுப்பினர் பேராசிரியர் திரு. தி. சக்திவேலு இப் பயிற்சி முகாமின் இயக்குநராகப் பொறுப்பேற்று நடத்திஞர்.

கல்லூரி ஆசிரியர்கள் தமிழ் வழியாகப் புகுமுக வகுப்பு மாணவர்களுக்கு அறிவியல், கலைப் பாடங்களைப் புகட்டும் அளவிற்குப் பயிற்சி அளிக்கப் பெற்றனர்.

**பயிற்சி முறை :**

மேலே கூறப்பட்ட ஆறு துறையினரும் அவரவர்கட்கு உரிய அறைகளில் குழுமுவர். காலை 9 மணி முதல் 11 மணி வரை நால்வர் அல்லது அறுவர் முறையே 30, 20 நிமிடங்கள் அவரவர்க்கெனக் குறித்த, மதுரை, சென்னைப் பல்கலைக் கழகங்களின் புகுமுக வகுப்புப் பாடத் திட்டத்திலடங்கிய சில பகுதிகளில் மாதிரி வகுப்புக்கள் நடத்தினர். 11 மணி முதல் 12 மணி வரை கலைச் சொல் பட்டியலைச் சரிபார்த்துச் செப்பம் செய்ததுடன், புதிய கலைச் சொல் பட்டியலும் உருவாக்கினர். ஒவ்வொரு துறையினரும் ஆறு, அல்லது ஏழு பேர் கொண்ட குழுக்களாகப் பிரிந்து மாலை 2 மணி முதல் 4 மணி வரை தேர்ந்தெடுக்கப் பட்ட ஐந்து புத்தகங்களைத் தமிழில் மொழிபெயர்த்தனர்.

**மொழி பெயர்க்கப்பட்ட புத்தககங்கள் :**

மேலும் மறுநாட் காலையில், பயிலுநர் நடத்த வேண்டிய மாதிரிப் பாடத்தைத் தயாரித்தல், அப்பாடப் பகுதியில் இடம் பெறும் கலைச் சொற்களைப் பொறுக்கி எடுத்தல் ஆகிய பணிகளை அந்தந்தக் குழுவின் பயிற்றுநர் தலைமையில் செய்தனர்.

சில மாலை வேளைகளில், மதுரைப் பல்கலைக் கழக வட்டத்தில் உள்ள தலையாய சில பேராசிரியர்களைக் கொண்டு சிறப்புச் சொற்பொழிவுகள் நடத்தப்பட்டன. நாள் தோறும் இரவு 8 மணி முதல் 10 மணி வரை ஒவ்வொரு துறைக்கான படங்கள் திரையிடப்பட்டன.

இவ்வாறு, தமிழ் வழியே ஆன்ற கலை பலவும் மாணவர்களுக்கு அளித்திடும் பயிற்சியை தமிழகக் கல்லூரி ஆசிரியர்கள் வைகைக் கரையில் நிகழ்ந்த இம்முகாமிற் பெற்றவர். 'தமிழிலே கற்பிக்க முடியுமா?' என்று ஐயுறுவோர்க்குத் தமிழ் வழியே கற்பிக்கும் ஆற்றல் ஆசிரியர்களை உருவாக்கி ''முடியும்'' எனப் பதிலுரைக்கிறது இப்பயிற்சி முகாம்!



**கே: தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் தோன்றிய வரலாற்றைக் கூற இயலுமா?**

ப: தமிழ்நாட்டில் பாடநூல் வெளியீட்டினை நாட்டுடைமையாக்கும் பணி 1960-ஆம் ஆண்டிலேயே அறிமுகப்படுத்தப் பட்டது. அன்றிலிருந்து 1969-70 கல்வியாண்டுவரை 1 முதல் 8-ஆம் வகுப்பு வரையிலான தமிழ்ப் பாடநூல்களும், 4 முதல் 8-ஆம் வகுப்புகளுக்கான ஆங்கிலப் பாடநூல்களும் நாட்டுடைமைத் திட்டத்தின்கீழ் அரசின் கல்வித் துறையால் அரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டு மாவட்ட விற்பனையாளர்கள் மூலம் விற்கப் பட்டு வந்தன. 9, 10-ஆம் வகுப்புகளுக்கான தமிழ், ஆங்கில நூல்களும், 3 முதல் 10-ஆம் வகுப்புகளுக்கான கணக்கு நூல்களும் நாட்டுடைமையாக்கப்பட வேண்டுமென்று 1970-71-ஆம் ஆண்டில் அரசு கருதியது. இந்நிலையில் வளர்ந்து வரும் இப்பணியைச் செய்வதற்குத் தனியாக ஒரு நிறுவனம் இருப்பது பொருத்தமானதெனக் கருதி, 'தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம்' (Tamilnadu Text book Society) 1970 - ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 4-ஆம் நாள் தொடங்கப்பட்டது. அதற்குமுன் கல்லூரிப் பாடநூல்களைத் தமிழில் வெளியிடுவதற்காகத் தனியாக இயங்கி வந்த 'தமிழ் வெளியீட்டுக் கழகம்' (Bureau of Tamil Publication) பின்னர் இத்துடன் இணைக்கப்பட்டது.

**கே : நிறுவனத்தின் நோக்கமென்ன?**

ப: கல்விக் கண்ணைப் பெற்று வாழ்வில் வளமும் நலமும் பெற்று வாழ்வதற்கு முதல் நிலையிலிருந்து முதுநிலை வரை உறுதுணையாகவிருப்பது பாட நூலே. இத்துணை இன்றியமையாத பாட நூல்களைத் தரமாகத் தயாரித்துக் குறைந்த

நாளையத் தலைமுறைகளான இன்றைய மாணவர்கள் கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கங்களில் சிறந்து விளங்கிடத் துணைநிற்பவை பள்ளி, கல்லூரிகளே அன்றோ? அவர்களுக்குக் கண்ணெனத்தகும் கல்வியினை வழங்குவதற்குப் பெரிதும் உதவுபவை பாட நூல்களாகும். ஆரம்பக் கல்வி முதல் கல்லூரிக் கல்வி வரையிலான பாடநூல்களை அழகுற உருவாக்கி அச்சிட்டு வழங்குகின்றது, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம். இதன் மேலான பணிகளை விளக்கிக் கூறுகிறார் மேலாண்மை இயக்குநர் திரு. சு. ந. சொக்கலிங்கம் அவர்கள்.

# இந்தியாவிலேயே தலைசிறந்த பாடநூல் நிறுவனம்



## தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவன மேலாண்மை இயக்குநர் திரு சு.ந. சொக்கலிங்கம் அவர்களின் பேட்டி

விலைக்கு அனைத்துக் குழந்தைகளும் வாங்கும் முறையில் குறித்த காலத்தில் வெளியிட வேண்டுமென்பதே பாடநூல் நிறுவனத்தின் நோக்கமாகும்.

இது வணிக நோக்கத்துடன் அமைக்கப்பட்ட ஓர் அரசு நிறுவனம் அன்று. கல்விப்பணி செய்யவேண்டும், தமிழ்நாட்டு மாணவர்கள் நலம் பேண வேண்டும் என்னும் நன்னோக்கத்துடன் அமைக்கப்பட்ட ஒரு மாபெரும் பணி நிறுவனமாகும் என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

**கே: பாடநூல் நிறுவனத்தின் வளர்ச்சி பற்றிக் கூற முடியுமா?**

ப: நிறுவனம் அமைக்கப்பட்டவுடன் நூல்கள் வெளியிடும் பணி வெகு வேகமாக முன்னேறியது. நிறுவனம் அமைக்கப்படுவதற்கு முந்திய 1969-70-ஆம் ஆண்டில் பள்ளி நூல்களில் 69.20 இலட்சம் படிகளே வெளியிடப்பட்டிருந்தன. நிறுவனம் அமைக்கப்பட்டபின்னர் வெளியிடப்பட்ட நூல்களின் எண்ணிக்கை 1970-71—ல் 119.20 இலட்சம் படிகளாகவும்,1971-72-ல் 156.05 இலட்சம் படிகளாகவும் 1972-73-ல் 250.00 இலட்சம் படிகளாகவும், 1973-74-ல் 231.25 இலட்சம் படிகளாகவும். 1974-75-ல் 200 இலட்சத்திற்கும் மேலான படிகளாகவும் வளர்ச்சி அடைந்துள்ளது.

**கே: நூல்கள் அச்சடிக்கும் தாள், அச்சு முறை, விலை இவை பற்றி விவரமாகக் கூற இயலுமா?**

ப: இந்த நிறுவனத்துக்கு ஆண்டு ஒன்றுக்கு 5000 டன்னுக்கும் அதிகமான அச்சுத்தாள் தேவைப்படுகிறது. இதில் கிட்டத்தட்ட 2000 டன் தாள் ஆலைகளிலிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்யப்படுகின்றது. தற்பொழுது மைய அரசு ஆதரவுடன் திட்டமிடப்பட்ட விலையில் தாள் பெற முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

பாடநூல்கள் தெளிவான அச்செழுத்துக்களுடன் பிழையின்றி அச்சடிக்கப்படுகின்றன. துவக்கப்பள்ளிகளுக்கான பல பாடநூல்கள் நான்கு வண்ணங்களில் கண்ணைக் கவரும் வகையில் படஅச்சு (ஆப்செட்) முறையில் அச்சிடப்படுகின்றன. இதுவரை இவ்வளவு




பாடநூல் நிறுவனம் வெளியிட்டுள்ள கல்லூரி நூல்கள்

அழகிய முறையில் யாருமே வெளியிட்டதில்லை.

நூல்களின் விலையை நிர்ணயிக்கும்பொழுது கூடுமானவரை நிறுவனத்துக்கு ஓரளவு உபரியே வரத்தக்க நிலையிலும் மாணவர்களுக்கு நூல்கள் வாங்குவதற்குக் கட்டுப்படியாக வேண்டுமென்ற நோக்கோடும் விலை நிர்ணயம் செய்யப்படுகின்றது. கடந்த ஆண்டு தாள் விலை மிக அதிகமாயிருந்துங்கூட அந்த ஆண்டு வெளியிட்ட மறுபதிப்பு நூல்களுக்கு முந்திய விலையையே நிர்ணயம் செய்ததும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

ஒருமுறை நிர்ணயம் செய்யப்பட்ட இவ்விலையானது, எக்காலத்திலும் எக்காரணம் கொண்டும் மாறவே மாறாது.

**கே: ஓர் ஆண்டில் மொத்தம் எத்தனை நூல்கள் வெளியிடப்பெறுகின்றன? இவற்றைப் பாதுகாக்கக் கிடங்குகள் உள்ளனவா?**

ப: நிறுவனத்தின் சார்பில் ஓர் ஆண்டில் 32 மில்லியன் பாடநூல்கள், 176 தலைப்புகளில் வெளியிடப்படுகின்றன.

இந்த நூல்கள் அச்சகங்களில் தயாரானதும் நன்கு சிப்பம் (Pack) செய்யப்பட்டு லாரிகள் மூலம் கிடங்குகளுக்கு அனுப்பப்படுகின்றன. சென்னை கோடம்பாக்கம் ஆர்க்காடு சாலையில் 4 கிடங்குகள் உள்ளன. இங்கு 1 முதல் 11வது வகுப்புகள் வரையிலான பாடநூல்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. இவை பார்ப்பதற்கு மலைபோலக் காட்சியளிக்கும்.

**கே: இந்த நூல்கள் எப்படி விற்பனை செய்யப்படுகின்றன?**

ப: பாடநூல்கள் மாநிலம் முழுவதுமுள்ள வட்ட (Taluk) விற்பனையாளர்களுக்கு (மொத்த விற்பனையாளர்கள்) மே திங்களிலிருந்தே அனுப்ப்படுகின்றன. அவர்களுக்கு 12.5 சதவீதம் கழிவு அளிக்கப்படுகிறது. மாநிலம் முழுவதும் 900-க்கும் அதிகமான சில்லறை விற்பனையாளர்கள் இருக்கின்றனர். இவர்களுக்கு மொத்த விற்பனையாளர்கள் 7.5 சதவீதம் கழிவு அளிக்கிறார்கள். சென்னை, செங்கற்பட்டு மாவட்டங்களைப் பொறுத்த வரையில் சில்லறை விற்பனையாளர்கள், நிறுவனத்தின் புத்தகக் கிடங்கில் நேரடியாக நூல்களைப் பெற்று விற்பனை செய்து வருகின்றனர்.

**கே: பிறமொழிப் பாடநூல்களும் வெளிடப் பெறுகின்றனவா?**

ப: ஆம். மொழிச் சிறுபான்மையர் அனைவர் நலத்தையும் கருத்தில் கொண்டு தெலுங்கு, கன்னடம், மலையாளம், உருது ஆகிய மொழிகளில் தொடக்க, நடுத்தரப் பள்ளிகளுக்கான நூல்களை நிறுவனம் வெளியிட்டு வருகிறது. இதை ஓர் அறச் செயலாகவே கருதி நிறுவனம் இப்பணியை மேற்கொண்டு வருகின்றது. இதனால் மொழிச் சிறுபான்மையைச் சார்ந்த குழந்தைகள் தங்கள் பாட நூல்களுக்கு வெளி மாநிலங்களைச் சார்ந்து நிற்கும் நிலைமாறி, அவர்களும் மற்ற மாணவர்களைப் போலவே தாங்கள் வாழும் சூழ்நிலைகேற்ற முறையில் தயாரிக்கப்பட்ட நூல்களைப் பயன்படுத்தும் நிலை உருவாகியுள்ளது.

தற்போது பள்ளிக் கல்வியைப் பொறுத்தவரை, கிட்டத்தட்ட எல்லாப் பாடநூல்களுமே இந்நிறுவனத்தால் வெளியிடப்பட்டு வருகின்றன. ஆங்கிலம் மூலம் கல்வி பயிலும் மாணவர்களுக்கான பாடநூல்களும் (Text books for Non—Language Subjects) புதியபாடத்தின்படி இந்நிறுவனத்தாலே வெளியிடப்பட்டு வருகின்றன.

**கே: பாடநூல்கள் வெளியிட ஆலோசனை கூறுவதற்கும் பிற பணிகளுக்கும் ஏதேனும் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளனவா?**

ப: உள்ளன. தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் தலைவராகத் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களும், துணைத்தலைவராக கல்வியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களும் உள்ளனர். கல்வி, நிதித் துறைச் செயலாளர்களும், கல்லூரிக் கல்வி, பள்ளிக் கல்வி, தொழிற் கல்வி, எழுதுபொருள் அச்சு, தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் ஆகியவற்றின் இயக்குநர்களும் இதன் உறுப்பினர்களாவர்.

இதுவன்றி வேறு மூன்று குழுக்களும் உள்ளன. அவை. 1. நிர்வாகக்குழு, 2. நிதிக்குழு 3. கல்விக் குழு.

ஒவ்வொரு பாடத்திற்கான நூல்களுக்கும் ஒரு வல்லுநர் குழு உள்ளது. அலுவலகத்தில் தமிழ் வரலாறு ஆகியவற்றுக்குத் தனியாக முழுநேரப் பதிப்பாசிரியர்கள் உள்ளனர்.




குமார்.....

**கே: இதுபோன்ற நிறுவனங்கள் பிறமாநிலங்களில் உள்ளனவா?**

ப: ஆம். மகாராட்டிரம், ஒரிசா, பீகார் முதலிய மாநிலங்களில் பாடநூல் நிறுவனங்கள் உள்ளன என்றாலும் தமிழ்நாட்டில் இயங்கிவரும் இந்நிறுவனமே, இந்தியாவில் எல்லா நிலைகளிலும் பாட நூல்களை வெளியிடும் தலைசிறந்த நிறுவனமாகும்.

**கே: குறித்தகாலத்தில் நூல்கள் கிடைக்கின்றனவா?**

ப: சந்தேகமில்லாமல். புத்தகம் கிடைக்கவில்லையே என்ற ஏக்கப் பெருமூச்சுக்கு இடமே இல்லாமல், கடந்த நான்கு ஆண்டுகளாகக் குறித்த காலத்தில் பாடநூல்கள் கிடைத்து வருகின்றன.

இந்த ஆண்டும் வழக்கம் போல் மே 5 ஆம் தேதியன்றே எல்லாப் பாடநூல்களும் விற்பனையாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

**கே: ஏழை மாணவர்களுக்கு இலவசமாகப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றனவா?**

ப: ஆம். இந்த நிறுவனத்திற்கு இதுவரை தமிழ்நாடு அரசு மானியமாகவும் கடனாகவும் 99.06 இலட்சம் ரூபாய் அளித்துள்ளது. இதில் 50 இலட்சம் ரூபாய்க் கடனைத் திருப்பியளிக்கப்பட்டுவிட்டது. நிறுவனத்தின் சொத்துக்களின் மதிப்பு இன்று ஆறு கோடியை எட்டுகிறது. இவ்வளவு குறுகிய காலத்தில் இந்த அளவு வளர்ச்சியடைந்துள்ள பாடநூல் நிறுவனம் இந்தியாவிலேயே இதுவேதான். நிறுவனம் தனக்குக் கிடைக்கும் நிகர ஊதியத்தைக் கல்வி மேம்பாட்டுப் பணிகளுக்கே செலவிடவும் நிறுவனத்தின் விதிகளில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இதன்படி இந்நிறுவனம் கடந்த மூன்று ஆண்டுகளாகத் தமிழ்நாடு முழுவதும் உள்ள 1 முதல் 3 வகுப்புகளில் படித்து வரும் மதிய உணவு உண்ணும் ஏழை மாணவர்களுக்குத் தமிழ், கணக்கு, அறிவியல், ஆங்கிலம் ஆகிய நூல்களை இலவசமாக வழங்கி வருகிறது. இதனால் ஏறத்தாழ 18 இலட்சம் குழந்தைகள் [illegible] பயன்

பெறுகின்றனர். நிறுவனம் ஆண்டுதோறும் இப்பணிக்காக ஏறத்தாழ 22 இலட்சம் ரூபாயைத் தனது நிதியிலிருந்து செலவிட்டு வருகிறது. இதுவரையில் 86 இலட்சம் ரூபாயைச் செலவிட்டுள்ளது. இதுவும் இந்நிறுவனம் ஆற்றிவரும் அறச் செயலுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

இதுவன்றி, 'ஆசிரியர் பணியிடைப் பயிற்சி'க்கு இவ்வாண்டு 5 இலட்சம் ரூபாயை நிறுவனம் வழங்கியுள்ளது. இன்னும் அதிகத் தொகையை வழங்க ஆயுத்தமாக உள்ளது.

**கே. பாடப்புத்தகங்கள் வெளியிடும் பணியை நிறுவனமே ஏற்றுக் கொண்டதால், ஏற்கெனவே அப்பணியில் ஈடுபட்டிருந்த மற்ற பதிப்பகங்கள் பாதிக்கப்படுகின்றனவா?**

ப: இல்லை. ஏற்கெனவே பாடநூல் வெளியிட்டு வந்த பெரும்பாலோர், நிறுவனத்தின் புத்தகங்களை விற்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். அச்சகம் வைத்திருப்பவர்களுக்குப் பாடநூல்கள் அச்சடிக்கும் வேலைகளைத் தந்து வருகிறோம்.

**கே: தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்ட கல்லூரி மாணவர்களுக்கென பாடநூல்கள் வெளியிடப் பெறுகின்றனவா?**

**கீழ்த் திசைக் கல்விப் பள்ளிகள்**

வடமொழி கற்பிக்கும் 12 பள்ளிகளும், அரபு மொழி கற்பிக்கும் 5 பள்ளிகளுமாக ஏற்பளிக்கப்பட்ட கீழ்த்திசைக் கல்விப் பள்ளிகள் பதினேழு இம் மாநிலத்தில் நடைபெற்று வருகின்றன. சாதாரண உயர்நிலைப் பள்ளிகளைப் போலவே இப்பள்ளிகளும் அரசு மானியம் பெற்று வருகின்றன.

ப: ஆம். கல்லூரி அளவில் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு பயிலும் மாணவர்களுக்கு ஏற்ற பாடநூல்கள், பார்வை நூல்கள் போதிய அளவு இல்லாதது பெருங்குறையாக இருந்து வந்தது. இக்குறையைப் போக்கும் நோக்கோடு மைய அரசு வட்டார மொழிகளில் கல்லூரிகளுக்கான பாடநூல்களை வெளியிடுவதற்காக அளிக்கும் ஒரு கோடி ரூபாய் நிதி உதவித் திட்டத்தின்கீழ் பாடநூல் நிறுவனம் பல்வேறு துறைகளிலும் பாடநூல்களை வெளியிட்டு வருகின்றது.

இதுவரை இந்நிறுவனம் 655-க்கும் அதிகமான நூல்களை-மானிடவியல், வணிகவியல், கூட்டுறவு, பொருளாதாரம், கல்வி, அறிவியல், வரலாறு, சட்டம், அளவையியல், மெய்ப் பொருளியல், அரசியல், உளவியல், வேளாண்மை, வானியல், உயிரியல், தாவரவியல், வேதியியல், பொறியியல், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணக்கு, மருத்துவம், இயற்பியல், சமூகவியல், புள்ளியியல், விலங்கியல் ஆகிய பல்வேறு துறைகளில் வெளியிடப்பட்டுள்ளது.

1973 அக்டோபரில் மைய அரசு வெளியிட்ட புள்ளி விவரப்படி அனைத்திந்தியாவிலும் தமிழ் மாநிலமே மிக அதிகமான எண்ணிக்கையில் நூல்களை வெளியிட்டு முன்னணியில் நின்று வருகின்றது.

**கே: நிறுவனத்தின் எதிர்காலத் திட்டங்கள் ஏதேனும் உள்ளனவா?**

ப: எல்லார்க்கும் பெருமளவில் பயன்தரக்கூடிய 50,000 சொற்களுக்கு மேற்பட்ட 'தமிழ் அகராதி' ஒன்றைத் தயாரிக்கும் திட்டம் செயல் வடிவம் பெற்று வருகின்றது.

நிறுவனத்துக்கு ஒன்பது மாடிக் கட்டடம் ஒன்று கட்டுவதற்கான திட்டமொன்று குறிப்பில் உள்ளது.

பாடப்புத்தகங்களைப் பாதுகாத்திட ஒரு இலட்சம் சதுர அடி பரப்பளவில் சென்னை அடையாறில் ரூ. 20 இலட்சம் செலவில் கிடங்கு ஒன்றைக் கட்டும் திட்டமும் உள்ளது. பாடநூல் தயாரிப்பு பற்றி ஆராய்ச்சிப் பிரிவு ஒன்றும் தனியாக ஏற்படுத்த எண்ணியுள்ளோம்.

இவ்வாறு பல சீரிய செயல் திட்டங்களைக் கொண்டு, பாடநூல் வெளியிடும் துறையில் தன்னிகரற்று விளங்கிவரும் 'தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்' பிறமாநிலங்களுக்கு ஓர் முன்மாதிரியாகவும் விளங்கி வருகிறது என்பதை நான் பெருமிதத்தோடு கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

**பேட்டி : பி. வி. ஜி.**

**புத்தகக் கிடங்கின் ஒரு பகுதி**





## விருது பெற்ற நல்லாசிரியர்!

தமிழக அரசு ஆண்டுதோறும் ஆசிரியர் பெருமக்களைச் சிறப்பிக்கும் வகையில் ''நல்லா சிரியர்'' விருதினை வழங்கி வருகின்றது.

தமிழகத்திலுள்ள பல்வேறு பள்ளிகளின் ஆசிரியர், ஆசிரியைகளின் பணியினைப் பாராட் டும் வகையில் இந்த விருது அளிக்கப்படுகின்றது.

கடந்த ஆண்டு இந்த விருதினைப் பெற்றவர் களில் திரு. புலவர். தணிகை உலகநாதன் அவர்களும் ஒருவராவர்.

சென்னை மாணவர் மன்றத்தினைத் தமி ழுலகம் நன்கறியும். மாணவ, மாணவிகளுக்கான பல்வேறு போட்டிகளை நடத்தி அவர்கள் அறிவு வளர்ச்சிக்கு ஒரு கலங்கரை விளக்காய் விளங்கி வருகிறது இம்மன்றம். இதன் செயலாளராகத் தொண்டாற்றி வருகிறார் திரு. தணிகை உலக நாதன்.

கடந்த முப்பது ஆண்டுகளாகச் சென்னை இந்து தியாலாஜிகல் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றி வரும் இவர், குழந்தை இலக்கியத்தில் குன்றாத ஆர்வமுடை யவர். குழந்தைகளுக்காக நீதிக்கதைகளையும், பாடல்களையும் சொல்லி அவர்களை மகிழ்விப் பதில் திறம் வாய்ந்தவர்.

வானொலிச் சிறுவர் சங்கப் பேரவையின் தலைவராகச் செயலாற்றும் இவர், ஒவ்வொரு முழுநிலா நாள் அன்றும் தம்வீட்டு மாடியில் சிறுவர் சிறுமியர்களுக்குக் கதைகள், பாடல்கள் சொல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளார்.

ஒவ்வொரு ஆண்டும் பள்ளி திறந்தவுடன் தேர்வில் வெற்றிபெற்ற மாணவர்களின் பழைய பாடப்புத்தகங்களை இவர் விலைக்கு வாங்குகிறார்! இதற்குக் காரணம், புத்தகங்கள் வாங்க முடியாத ஏழை மாணவர்களுக்கு இலவசமாக அதைக் கொடுப்பதற்காகத்தான்!

**தொழிற் பயிற்சி அளிப்பதில் தமிழகமே முதன்மையாக விளங்குகிறது.**

ஒவ்வொரு ஆண்டும் மத்திய அரசு ''அகில இந்தியத் தொழில் திறமைப் போட்டி'' நடத்து கிறது. ஒவ்வொரு மாநிலத்தி லிருந்தும் அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்ற நபர்கள் இந்த அகில இந்தியப் போட்டியில் கலந்து கொள்கிறார்கள்.

1974-வது ஆண்டு நவம்ப ரில் நடைபெற்ற 11-வது அகில இந்தியத் தொழில் திறன் போட்டி யில், தொழில் பயிற்சி அளிப்ப தில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலம் தமிழகமே என்று இந்திய அரசாங்கத்தால் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. தமிழ கத்தில் இந்தச் சாதனையைப் பாராட்டி இந்தியக் குடியரசுத் தலைவர் தமிழகத்திற்குச் சுழற் கோப்பை ஒன்று வழங்கியிருக் கிறார். தமிழகம் இச்சிறப்பினைப் பெறுவது இது முதல் தடவை அல்ல, இதற்கு முன்பு 5 தட வைகள் தமிழகமே இச்சிறப் பினைப் பெற்றிருக்கிறது.

1974–ஆம் ஆண்டு நவம்ப ரில் நடைபெற்ற இந்தியத் தொழில் திறன் போட்டியில் தமிழகத்தைச் சேர்ந்த இரண்டு பயிற்சியாளர்கள் இந்தியாவி லேயே மிகச் சிறந்த பயிற்சி யாளர்களாக இந்திய அரசாங் கத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டி ருக்கிறார்கள். அவர்களில் ஒருவ ரான திரு ஜி. பால்ராஜ் என்பவர் நாகப்பட்டினம் அரசினர் தொழில் பயிற்சி நிலையத்தில் இயந்திர வேலையாள் (கம்போசிட்டராகப்) பயிற்சி பெற்றவர். கடைசல் பிடிப்பவர் பயிற்சியில் தூத்துக் குடி தொழில் பயிற்சி நிலையத்தில் பயிற்சிபெற்ற திரு செல்வராஜன் இந்தியாவிலேயே முதன்மை யானவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்.

இச்சிறப்பினைப் பெற்ற இரு பயிற்சியாளர்களுக்கும் மத்திய அரசாங்கத்தால் ஒரு நற்சான் றிதழும், வெள்ளிப் பதக்கம் ஒன் றும், ரூபாய் 5,000/- பண உதவியும், இயந்திரக் கருவிகள் அடங்கிய ஒரு பெட்டியும் அளிக் கப்பட்டிருக்கின்றன. அவர்களு டைய தொழில் அறிவை வளர்த் துக்கொள்வதற்காக அவர்கள் இந்தியா முழுவதிலும் உள்ள முக்கியத்துவம் வாய்ந்த இடங் களுக்குச் சுற்றுலா செல்ல அழைத்துச் செல்லப்படுவார்கள்.

# வெண்மைப் புரட்சிக்கு உதவும் கல்லூரி

டாக்டர் வை. இரத்தின சபாபதி
இயக்குநர்,
கால்நடை மருத்துவக்கல்வி

ஊட்டச்சத்துக்கள் நிறைந்த பால், முட்டை, இறைச்சியையும் நம்நாட்டின் வளர்ச்சிக்குத் தேவையான அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் தோல் கம்பள உரோமம் ஆகியவைகளையும், நிலவளம் செழிக்க உதவும் எருவையும் தருகின்ற கால்நடைகள் நம்நாட்டின் செல்வங்களில் ஒன்று!

குறிப்பாகக் காளை மாடுகள் ஏர் உழவும், வண்டி இழுக்கவும் உதவி, உழவர்களின் உற்ற தோழனாக விளங்குகின்றன!

1970-71-ஆம் ஆண்டின் புள்ளி விவரப்படி தமிழ்நாட்டிலுள்ள கால்நடைச் செல்வங்களின் மதிப்பு 327 கோடி



ரூபாய்! அவைகளிலிருந்து ஆண்டுதோறும் கிடைக்கும் உற்பத்திப் பொருள்களின் மதிப்பு 170 கோடி ரூபாய்! இவ்வருவாய் தமிழ்நாட்டின் மொத்த வருவாயில் 6 சதவீதமாக உள்ளது. எனவே, தமிழ்நாட்டின் செழிப்புக்குக் கால்நடைகள் கணிசமாக உதவி வருகின்றன என்பதில் ஐயமில்லை!

ஆனால், கால்நடைகளுக்கு ஏதேனும் நோய் வந்தால், அந்நோய்களிலிருந்து கால்நடைகளைக் காப்பாற்றுவதில், நமது மக்களில் பெரும்பாலோர் அதிக கவனம் செலுத்துவதில்லை! இதன் காரணமாக நமது நாட்டுக் கால்நடைகள் உற்பத்தித் திறன் குன்றிய—தரங்குறைந்த — கால்நடைகளாகவே உள்ளன!

நாம் நம் உடலில் உள்ள குறைகளைப் பற்றியும், நோய்களைப் பற்றியும் மருத்துவர்களிடம் சொல்கின்றோம். ஆனால், 'வாயில்லா பிராணிகள்' எனப்படும் கால்நடைகளோ அவ்வாறு சொல்ல முடியாது! எனவே, கால் நடைகளைக் கவனித்து நோய்களிலிருந்து காப்பாற்றும் பொறுப்பு நம்மையே சாரும்!

நமக்குச் சிறு அளவில் தலைவலி வந்தாலும், உடனே மாத்திரைகளைச் சாப்பிடுகின்றோம். அல்லது மருத்துவர்களை நாடி ஓடுகின்றோம்! சத்துள்ள உணவுகளைச் சாப்பிடுகின்றோம். ஆனால் நமது கால்நடைகளுக்கு நோய் வந்தால், அந்நோயைப் போக்கிட நாம் முயற்சி செய்வதில்லை. நமது வளமான வாழ்க்கைக்குப் பலவகையிலும் உதவியாக இருக்கும் கால்நடைகளின் பராமரிப்பில் போதிய கவனம் செலுத்துவதில்லை!

இந்நிலையை மாற்றி கால் நடைகளைக் கண்களைக் காப்பாற்றினால், தமிழ்நாட்டில் தோன்றியுள்ள ''வெண்மைப் புரட்சி'' விரைந்து பரவும்! அதன் பயனாய் ஊட்டச் சத்து மிகுந்த பாலும், முட்டையும், இறைச்சியும் கிடைத்து, மக்கள் வளமாக வாழ முடிவதுடன், பசுமைப் புரட்சிக்கு உதவ முடியும்!

''வெண்மைப் புரட்சி'' பட்டி தொட்டியெங்கும் பரவிட வேண்டுமானால், முதலில் கால்நடை மருத்துவக் கல்விக்கு முதலிடம் அளிக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்!

கால்நடை மருத்துவக் கல்வியின் முக்கியத்துவம் கருதியே இன்றைய தமிழ்நாடு அரசு, கால்நடை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கென தனித்துறையை, 1969-ஆம் ஆண்டில் ஏற்படுத்தியது. பட்டப்படிப்பு நிலையிலும், பட்ட மேற்படிப்பு நிலையிலும் கால்நடைக் கல்வியின்தரத்தை மேம்படுத்தல், கால்நடை வளர்ப்பு, கால்நடை மருத்துவ அறிவியல் ஆகியவற்றின் பிரச்சினைகள் தொடர்பான ஆராய்ச்சி நடவடிக்கைகளை மும்முரமாக மேற்கொள்ளு



# களப் பரிசோதனைகள் காண்பிக்கின்றன:
# பிளானோபிக்ஸ்
## நிலக்கடலை விளைச்சலைக் கணிசமாகப் பெருக்குகிறது.

பிளானோபிக்ஸ் என்பது, மே & பேக்கர் லிட்டின் டிரேடு மார்க் ஆகும்.

20 பி.பி.எம். வீதம், அதாவது 4.5 லிட்டர் (1காலன்) நீரிலே 2 மிலி. வீதம் கரைத்து, விதைப்பாகி முதல் 40 நாட்களுக்கும், மறுபடி, விதைப்பாகி 80 நாட்களுக்கும் பிளானோபிக்ஸ் தெளித்துவந்தால் அது அதி உன்னதமான பலன்களைத் தருவதாக அறிவிக்கப்படுகிறது.

**விவரமான தகவல்களை விசாரித்தறியவும்.**

M&B May&Baker

**மே & பேக்கர் (இந்தியா) பிரைவேட் லிட்.**

பம்பாய் • கல்கத்தா • கவுஹாத்தி • இந்தோர்
லக்னோ • சென்னை • நியூ டெல்லி • பாட்னா

TAM



# சேலம் மத்திய கூட்டுறவு வங்கி (வரை) எண் 151.
## சேலம்-1.

**தபால் பை எண். 171** **தொலைபேசி எண் : 2402**

**கிளைகள் :** நாமக்கல், திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசிபுரம், ஓமலூர், தாரமங்கலம், வேலூர், சங்ககிரி, சேந்தமங்கலம், கொங்கணபுரம் சிறப்பு அங்காடி, சேலம் கடைவீதி, எடப்பாடி, பி. கொமாரபாளையம்; பள்ளி பாளையம், தம்மம்பட்டி, ஜலகண்டாபுரம், ஆட்டையாம்பட்டி, செவ்வாய்ப்பேட்டை, பெத்தநாய்க்கன் பாளையம், மேட்டூர் டேம், நாமகிரிப்பேட்டை, கொண்டலாம்பட்டி, மல்லூர், தலைவாசல், எருமைப்பட்டி, வாழப்பாடி, ஏற்காடு, எளம்பிள்ளை, மகுடஞ்சாவடி.

**சொந்த நிதி ரூ. 327 லட்சம்.** **நடைமுறை மூலதனம் 1711 லட்சம்.**

### வட்டிவிகித அட்டவணை

**கால் டெபாசிட்டுகள் :**
- ரூ. 5,000/-க்கும் அதற்கு மேலும் (முன் அறிவிப்பு இல்லாமல்) 3¼%
- ரூ. 10,000/-க்கும் அதற்கு மேலும் (3 நாள் முன் அறிவிப்பின் பேரில்) 3½%

**சீசன் டெபாசிட்டுகள் :** ரூ. 1,000/-க்கும் அதற்கு மேலும்
- 15 நாட்களுக்கும் அதற்கு மேல் 45 நாட்களுக்கும் 3%
- 46 நாட்களுக்கும் அதற்கு மேல் 90 நாட்களுக்கும் 3½%

**பிக்செட் டெபாசிட்டுகள் :** ரூ. 50/-ம் அதற்கு மேற்பட்ட பிக்செட் டெபாசிட்டுகளுக்கு :

1. 91 நாட்களுக்கும் அதற்குமேல் 6 மாதத்திற்குள் 6%
2. 6 மாதத்திற்கும் அதற்குமேல் 9 மாதத்திற்குள் 6½%
3. 9 மாதத்திற்கும் அதற்குமேல் 12 மாதத்திற்குள் 7½%
4. 12 மாதத்திற்கும் அதற்குமேல் 36 மாதத்திற்குள் 8½%
5. 36 மாதத்திற்கும் அதற்குமேல் 60 மாதத்திற்குள் 9½%
6. 61 மாதத்திற்கும் அதற்குமேலும் 10½%

**நடப்புக் கணக்கு ½%** **சேமிப்புக் கணக்கு 6%**

ரூ. 5000/-க்கு மேற்கொண்டு பிக்செட் டெபாசிட் போடுபவர்களுக்கு இலவச பாதுகாப்பு பெட்டக வசதி உண்டு. பிக்செட் டெபாசிட்டுகளின்மீது மாதாந்திர வட்டி உண்டு. ரெக்கரிங், பிராவிடெண்ட் டிபாசிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இதர விவரங்களுக்கு செயலாளரிடம் தொடர்புகொள்க.

**கி. பாலசுந்தரம், பி.ஏ.,**
துணைப் பதிவாளர்,
நிர்வாக அதிகாரி.

**எஸ். ஆறுமுகம்,**
தலைவர்.

தல், கல்வி, ஆராய்ச்சி வளர்ச்சிப்பணி ஆகியவற்றை ஒருங்கிணைத்தல் ஆகிய நோக்கங்களுடன் கால்நடைக் கல்வி மற்றும் ஆராய்ச்சித்துறை ஏற்படுத்தப்பட்டது.

**சென்னைக் கால்நடை மருத்துவ கல்லூரி**

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி, தற்போது உள்ள பகுதியில் 1903-ஆம் ஆண்டு துவக்கப் பெற்றது. இக்கல்லூரியில் ஆரம்பத்தில் 'ஜி.எம்.வி.சி.' எனப்படும் 3 ஆண்டு 'டிப்ளமா' படிப்பு அளிக்கப்பட்டது. 1935-ஆம் ஆண்டிலிருந்து 'பி.வி.எஸ்சி' என்ற பட்டப்படிப்பு அளிக்கப்பட்டு வருகிறது. இந்தியாவில் முதன் முதலில் இக்கல்லூரியில்தான் 'பி.வி.எஸ்சி' பட்டப்படிப்பு துவக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும். தற்போது 'பி.வி. எஸ்சி' பட்டப்படிப்பின் காலம் 5 ஆண்டு 3 மாதங்களாகும். 1958-ஆம் ஆண்டில் பட்ட மேற்படிப்பு அளிப்பதற்கான தென் மண்டல நிலையமாக இக்கல்லூரியின் தரம் உயர்த்தப்பட்டது. தேர்வு, மற்றும் ஆராய்ச்சி வழியாகப் பெறப்படுகின்ற 'எம்.வி. எஸ்சி' பட்டப்படிப்பு 15 பாடங்களில் ஆரம்பிக்கப்பட்டது.

கால்நடை மருத்துவக் கல்வியைப் பொருத்தவரையில் உலகிலேயே தலைசிறந்த பட்ட மேற்படிப்பு ஆராய்ச்சி நிலையங்களில் ஒன்று என்ற நற்பெயரைக் இக்கல்லூரி பெற்றுள்ளது.

பல்வேறு துறைகளில் 'பி.எச்.டி' படிப்பிற்கான ஆராய்ச்சியை மேற்கொள்ளுவதற்கான வசதிகளும் இக்கல்லூரியில் கிடைக்கிறது. நமது நாட்டிலுள்ள பல்வேறு மாநிலங்கள் மற்றும் அண்டை நாடுகளான இலங்கை, பர்மா, மலாயா, தாய்லாந்து, ஈராக் மற்றும் பல ஆப்பிரிக்க நாடுகள் ஆகியவற்றிலிருந்தும் பலர் இக்கல்லூரியில் படிப்பதற்காக விண்ணப்பிக்கின்றனர். இக்கல்லூரி சென்னைப்பல்கலைக் கழகத்திலிருந்து பிரிக்கப்பட்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்துடன் 20-1-974-இல் இணைக்கப் பெற்றுள்ளது.

**பட்டப்படிப்பு**

தற்பொழுது ஒவ்வொரு ஆண்டிலும் 136 மாணவர்கள் பட்டப்படிப்பிற்காகச் சேர்க்கப்படுகின்றனர். இதுவரை 2,184 பட்டதாரிகள் இக் கல்லூரியிலிருந்து வெளியேறியுள்ளனர்.

**பட்டமேற்படிப்பு**

'எம். வி. எஸ்சி' ஒவ்வொரு ஆண்டிலும் தமிழ்நாடு மற்றும் மற்ற மாநிலங்களிலிருந்து 48 பட்டதாரிகள் 'எம்.வி.எஸ்சி' படிப்பில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இதுவரை 458 'எம்.வி. எஸ்சி' பட்டதாரிகள் இக் கல்லூரியில் பட்டம் பெற்றுள்ளனர்.

'பி.எச்.டி': இதுவரை 14 பேர்கள் 'பி.எச்.டி.' பட்டம் பெற்றுள்ளனர். தற்போது 22 பேர்கள் 'பி.எச்.டி' பட்டப் படிப்பிற்காகப் பல்வேறு துறைகளிலும் பதிவு செய்துள்ளனர்.

**மருத்துவமனை**

நோயால் வாடும் கால்நடைகளுக்கு மருத்துவ உதவி செய்திட இக்கல்லூரியில், நவீன சாதனங்களுடன் கூடிய நல்லதொரு மருத்துவமனை உள்ளது. இம்மருத்துவமனையில் நாள்தோறும் 300-க்கும் மேற்பட்ட கால்நடைகள் சிகிச்சை பெற்றுக் குணமடைகின்றன!

நோய்களை எளிதில் கண்டறிவதற்காக நோய்க் குறியியல் ஆய்வுக்கூடமும், 'எக்ஸ்ரே' புகைப்படம் எடுக்கும் நிலையமும் இம்மருத்துவ மனையில் இணைக்கப் பெற்றுள்ளன.



சிறிய கால்நடைகளை மருத்துவ மனைக்குக் கொண்டு வருவதற்கான ஒரு உந்து வண்டியும், பெரிய கால்நடைகளை மருத்துவ மனைக்குக் கொண்டு வருவதற்கான ஒரு பெரிய உந்து வண்டியும் உள்ளன. நோயால் வாடும் கால்நடைகளை மருத்துவ மனைக்குக் கொண்டு வருவதற்காக ஒரு சிறிய தொகை மட்டுமே கால்நடைகளின் உடைமையாளர்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது.

உறை விந்து சேகரிப்பு நிலையமும் இக்கல்லூரியில் சமீப காலத்தில் நிறுவப்பட்டுள்ளது.

**நூலகம்**

இக்கல்லூரி நூலகத்தில், கால்நடை மருத்துவம் மற்றும் தொடர்புள்ள விஞ்ஞானப் பகுதிகள் சார்ந்த 12,500 புத்தகங்களும், 7,000 நூல்களும், இந்திய மற்றும் வெளிநாட்டு விஞ்ஞானப் பத்திரிகைகளும் உள்ளன.

**ஆராய்ச்சிக் குழு**

பல்வேறு ஆராய்ச்சித் திட்டங்களையும் அவற்றின் பதிவு அறிக்கைகளையும் ஆராய்வதற்காக ஒரு ஆராய்ச்சிக் குழு 1969-ஆம் ஆண்டு முதல் இக்கல்லூரியில் நிறுவப் பெற்றுள்ளது. தற்போது 41 ஆராய்ச்சித் திட்டங்கள் செயற்பட்டு வருகின்றன.

“ செரான் ” : கால்நடை மருத்துவம் மற்றும் கால்நடை பேணுதல் பற்றிய அரையாண்டுப் பத்திரிகையான ‘செரான்’ என்னும் ஆராய்ச்சிப் பத்திரிகை இக்கல்லூரி ஆராய்ச்சிக் குழுவால் வெளியிடப்படுகிறது.

**விரிவாக்கப் பணிகள்**

சைதாப்பேட்டை, மாதவரம் பகுதிகள் இக்கல்லூரியின் விரிவாக்கப் பணிகளுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இப்பகுதிகளிலுள்ள உழவர் பெருமக்களுக்குக் கால்நடைப் பேணுதலில் அறிவுரையும், வழிகாட்டுதலும் தரப்படுகின்றன. இக்கல்லூரி மாணவர்கள் முறையாக அடிக்கடி இப்பகுதிகளுக்குச் சென்று வேளாண்மைப் பணிகளில் பெரிதும் ஊக்கம் காட்டுகிறார்கள்.

**அட்டையில்.....**

175 ஆண்டுகளைக் கடந்து நிற்கும் கிண்டி பொறியியல் கல்லூரிக் கட்டடத்தின் முன்னே நில அளவைப் பணியில் ஈடுபட்டுள்ள பொறியியல் மாணவர்கள்.

**உழவர் பயிற்சி நிலையம்**

ஓசூர் கால்நடைப் பண்ணையில் 20-1-1972 முதல் உழவர்களுக்குக் கால்நடை பேணுதலில் அறிவுரையும், பயிற்சியும் வழங்குதற் பொருட்டு, 3 மாத கால அளவுடைய உழவர் பயிற்சிக் கல்வி நடத்தப் பெறுகின்றது. இதுவரை 50 உழவர்கள் கொண்ட ஆறு தொகுப்புகளுக்குப் பயிற்சி அளிக்கப் பெற்றுள்ளது.

**கால்நடை உதவியாளர் பயிற்சி நிலையம்**

அண்மைக் காலத்தில் கால்நடைப் பராமரிப்பில் உழவர்கள் கவனம் செலுத்தத் துவங்கியுள்ளதால், கால்நடை உதவியாளர்கள் தேவை அதிகமாகியுள்ளது. ஆகவே ஒரத்தநாடு, கால்நடைப் பண்ணையில் 10 மாத கால அளவுடைய, கால்நடை உதவியாளர் பயிற்சி நிலையம் 1974-ஆம் ஆண்டில் துவங்கப் பெற்றது.

**மாணவர் விடுதி**

இக்கல்லூரிக்கென 500 மாணவர்கள் தங்குவதற்கேற்ற மாணவர் விடுதி ஒன்று உள்ளது. 100 பட்ட மேற்படிப்பு மாணவர்கள் உறைவதற்கான கட்டடம் ஒன்று 8.65 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு வருகின்றது. அன்றாடம் வெளியிலிருந்து வந்து பயிலும் மாணவர்கள் நலனுக்காக ஒரு நிலையம் 0.85 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு வருகிறது.

ஓசூர் கால்நடைப் பண்ணையில் உழவர் பயிற்சியாளர்களுக்கும், ஒரத்தநாடு கால்நடைப் பண்ணையில் கால்நடை உதவியாளர் பயிற்சியாளர்களுக்கும் விடுதிகள் உள்ளன.

இந்த ஆண்டில் மொத்தம் 4 இலட்சம் ரூபாய் செலவில் நுட்பத் திறம் மேம்பட்ட சாதனங்கள் கூடுதலாக வாங்கப்பட்டு இக்கல்லூரி மேலும் வலுப்படுத்தப்படவிருக்கிறது. கல்லூரியின் நெடுநாள் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு மொத்தம் 54.55 இலட்சம் ரூபாய் முதலீட்டில் மிகப் பெரியதொரு கட்டுமானத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**கால்நடை மருத்துவர்களின் தேவை**

தமிழ்நாடு அரசின் மாநிலத் திட்டக்குழுவின் கால்நடைப் பராமரிப்பு பற்றிய செயல் அணி தயாரித்த தொலை நோக்குத் திட்டத்தின்படி (Perspective Plan), 1984-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கு 4,430 கால்நடை உதவி மருத்துவர்கள் தேவைப்படுகின்றனர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அந்த ஆண்டில் தமிழ்நாட்டில் கிடைக்கவிருக்கும் கால்நடை உதவி மருத்துவர்கள் (தற்பொழுது ஒவ்வொரு ஆண்டும் 136 மாணவர்களே சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் சேர்க்கப்படுகிறது என்ற அடிப்படையில்) எண்ணிக்கை 2,651 ஆக இருக்கும். எனவே, 1984-ஆம் ஆண்டில் 1,779 கால்நடை உதவி மருத்துவர்கள் பற்றாக்குறையாக இருப்பார்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அடிப்படையில் பார்த்தால் வருங்காலத்தில் கால்நடை மருத்துவக் கல்வி பயில்கின்றவர்களுக்கு நல்ல வேலை வாய்ப்பு உள்ளது என்பது தெளிவாகிறது.

வாயில்லா பிராணிகளானது கால்நடைகளின் நலங்காத்து நாட்டின் வளம் பெருக்குவது நாட்டுக்குச் செய்யும் நல்ல தொண்டு ஆகும்! எனவே, தமிழ்நாடெங்கும் “**வெண்மைப் புரட்சி**” பரவவும், அதன் பயனைத் தமிழ்ச் சமுதாயம் வளமோடு வாழவும், உழவர் குடும்பத்தைச் சார்ந்த அறிவிற் சிறந்த மாணவர்கள் கால்நடை மருத்துவக் கல்வி பயில முன்வர வேண்டும் என்று வேண்டுகோள்விடுத்துக் கொள்கின்றேன்.

**1973–74-ஆம் ஆண்டின் புள்ளி விவரப்படி, ஒவ்வொரு கால்நடை மருத்துவப் பட்டதாரிக்கும் தமிழ்நாடு அரசு ஏறத்தாழ 4,506 ரூபாய் செலவிடுகிறது.**



# 'தமிழரசு' கொண்டாடிய முதல்வர் கலைஞர் பிறந்தநாள் விழா

'தமிழரசு' அலுவலக, அச்சக ஊழியர் சார்பில் ஜூன் 3 ஆம் நாள் பகல் 12 மணியளவில் முதல்வர் கலைஞர் அவர்களின் 52வது பிறந்த நாள் விழா சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. ஆயிரத்துக்குமேற்பட்ட ஏழைகளுக்கு உணவு அளிக்கப்பட்டது. சென்னை திருவல்லிக்கேணி சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர் திரு கட்டையன் விழாவுக்குத் தலைமை ஏற்க, திருச்சி நாகம்மையார் குழந்தைகள் இல்லத்தைச் சார்ந்த சிறுமி அழகுமணி உணவு வழங்கும் நிகழ்ச்சியைத் துவக்கி வைக்க, செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. கே. ஏ. சுந்தரம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்த மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் மன்னை. ப. நாராயணசாமி அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள்.



# காலணிகள் வாங்க உரிய காலம்

குறைந்த விலையில் நீடித்து உழைக்கும்
சிறந்த காலணிகள், கைப் பைகள்,
பணப் பைகள், பெல்ட்டுகள், பெட்டிகள்
தமிழகம் முழுவதிலும் அமைந்துள்ள 180

**காதி கிராப்ட்** களில்
கிடைக்கும்.



# தமிழ்நாடு பள்ளி இறுதித் தேர்வு



கி. வேங்கடசுப்பிரமணியம்,
அரசுத் தேர்வு இயக்குநர்.

இவ்வாண்டு அகில உலக மகளிர் ஆண்டு. சப்பான் நாட்டைச் சார்ந்த வீராங்கனை ஒருத்தி வானுயுயர் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி வெற்றிக் கொடி நாட்டினுள். தமிழகத்திலோ சிதம்பரம் அரசினர் உயர்நிலைப் பள்ளி மாணவி, தமிழின் மூலம் கற்றுப் பள்ளியிறுதித் தேர்வில் (எஸ்.எஸ்.எல்.சி.) தமிழகத்திலேயே முதன்மையான எண் பெற்று வெற்றிக் கொடி நாட்டியுள்ளாள்.

ஆண்டுதோறும் பல லட்சக் கணக்கான குடும்பங்கள் ஆவலுடன் எதிர்பார்ப்பது பள்ளியிறுதித் தேர்வு முடிவுகளையே. பல்வேறு வேலைவாய்ப்புக்களுக்கும், உயர் கல்விக்கும் அடிகோலும் இத்தேர்வு நம் மாநிலத்திலேயே முக்கியமான தேர்வாகும். இவ்வாண்டு சுமார் 2.30 லட்சம் மாணவ, மாணவியர் இத்தேர்வு எழுத ஆயத்தமாயினர். சுமார் 52.2 சதவிகிதத்தினர் வெற்றி பெற்றனர். இது சென்ற ஆண்டு முடிவுகளை விடச் சற்றுக் கூடுதலாகும். இவ்வாண்டு முடிவின் சிறப்புக்கள் என்ன என்று ஆராய்வோம்.

எவ்வாண்டுமில்லாத வகையில் இவ்வாண்டு மே மாதம் மத்தியிலேயே முடிவுகள் வெளியாயின. முதல் எண்ணும், முதலிடமும் ஒரு பெண் மணியால், அதுவும் தமிழின் மூலம் ( Tamil Medium ) படித்த ஒரு நங்கையால் கைப்பற்றப்பட்டன. தமிழகத்திலேயே இரண்டாவது இடம் ஒரு பின்தங்கிய வகுப்பைச் சார்ந்த மாணவனுல் பெறப்பட்டது. சிறப்பு முதல் இடங்களில் இரண்டு இடங்களை அரிசன மாணவரிருவர் பெற்றனர். பின்தங்கிய வகுப்பு மாணவர் 28 பேர் முக்கிய முதலிடங்கள் பெற்றனர்.

இதனுல் அறியப்படுவது என்ன? பல்லாண்டுகளாக, தமிழக அரசு செய்து வரும் கல்விப்பணி இன்று பயன் தரும் நிலைக்கு வந்துள்ளது என்பதே இதன் விளக்கம். ''பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம் விழிபெற்றுப் பதவி'' கொள்ளச் செய்யும் நம் கல்விப்பணி, அறப்பணி, பூத்துக் காய்த்துக் கனியருளும் நிலையை எய்தியுள்ளது என்று கண்டு நாம் பூரிக்கலாம்.

தேர்வு அவசியம் தானு என்று கேட்போரும் உண்டு? உலகிலுள்ள ஓரறிவுள்ள உயிர்கள் முதலாக ஆறறிவுள்ள உயிர்கள் ஈருகவுள்ள அனைத்துயிர்களிடமும், இத்தேர்வு என்ற பண்பு இடம் பெற்றுள்ளது. செடிகொடி மரங்கள் அனைத்தும் உயிர் வாழ்வதற்குரிய இடங்களைத் தேர்ந்தெடுக்கின்றன. அவைகள் விதைகளைத் தக்க இடங்களில் பரப்புகின்றன. மற்ற உயிரினங்கள் உணவைத்தேடிக் தக்க உணவைப் பெறுவதிலும் தனக்குஇணையான வாழ்க்கைத் துணையைப் பெறுவதிலும் தேர்வு முறையைப் பயன்படுத்துகின்றன. இவைகளைத் தேர்ந்தெடுப்பதில் போட்டி உருவாகின்றது. போட்டி, தேர்வு, ஆகியவை ஒருபொருட் பன்மொழியாகும். உணவைத் தேடுவதிலும், வாழ்க்கைத் துணையைத் தேடுவதிலும் ஏற்பட்ட போட்டி வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் நீங்காத இடத்தைப் பெற்றுள்ளது. ஒரு செயலைச் செய்வதற்குரிய தகுதி ஒருவரிடம் உள்ளதாவென்று தேர்ந்து அறிவதே தேர்வாகும். பழங்காலத் திருமணங்கள் அனைத்தும் சுயம்வரம் மூலமாகத்தான் நடந்தன.

தமிழர் பின்பற்றிய மற்றெருருவழி, ஒரு பெண் குழந்தை பிறந்தவுடனேயே ஒரு காளைக் கன்றை வாங்கி, மிக வலிவுள்ள காளையாக வளர்ப்பர். அவள் மணப்பருவம் அடைந்தவுடன், அக்காளையின் வலியினை அடக்குகின்றவனையே அவள் தன் கொழுநனுகத் தேர்ந்தெடுப்பாள் என்று நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் கூறுகின்றது.

தேர்வு என்பது ஒருவிதமான அளவு கோலாகும். பொன்னையும் பொருளையும் அளப்பதைப் போல ஒருவர் கற்றதையும் அளந்து காண்பதே கல்வித் தேர்வின் நோக்கமாகும். எல்லோரும் நன்கு படிக்கின்றனர்! நன்கு தேர்வு பெறுகின்றனர். என்ருலும் முதலாவதாகத் தேர்ச்சி பெற்றவர் யாவர் என்பதை நுணுகியறிந்து சிறப்புச் செய்வதற்குத் தேர்வு முறை பயன்படுகிறது.

### அரசுத் தேர்வுகளுக்கு ஒரு தலை இயக்குநர்

1861-ஆம் ஆண்டில் ரெவினியூ போர்ட் உறுப்பினர் திருவாளர் ஆர்பத்நாட் அவர்களின் திட்டத்தின்கீழ், இம் மாநிலத்தில் தேர்வு முறைகளுக்குத் தக்கவாறு கல்வியில் வகைப்படுத்திய ஒரு புதிய அமைப்பு உருவாக்கப்பட்டது. இவர்தான் முதல் தேர்வு ஆணையராக நியமிக்கப்பட்டார். 1908-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 28-ஆம் தேதி வெளியிட்ட, 212 எண் (கல்வி) ஆணையின் மூலம், அரசாங்கம் ஒரு குழுவினை நியமித்துப் பள்ளிக் கல்வியின் இறுதியில் ஒரு தேர்வினை நடத்துவதற்கு உரிய வழிவகைகளை ஆராய்ந்து முடிவுகளைச் சமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொண்டது. இளம் மாணவ மாணவியர் பள்ளிக் கல்வி முடிக்கின்ற நேரத்தில் தத்தம் விருப்பம்போல் தொழில் துறையில் நுழையவோ தொழில் நுட்பக் கல்வி பெறவோ வாய்ப்பாக,

கல்வி பெறும் மாணவர்கட்கு ஊக்கமளிப்பதைக் கருத்தில் கொண்டு பள்ளி இறுதியாண்டில் தேர்வினை நடத்துவதென்ற முடிவை அரசு மேற்கொண்டது. அதன் பின்னரே இடைநிலைக் கல்வி இறுதிச் சான்றிதழ் திட்டம், மெட்ரிகுலேஷன் தேர்வுக்குப் பதிலாக பல்கலைக்கழகம் ஒப்புக் கொள்ளத் தக்க வகையில் நடைமுறையாக்கப்பட்டது. இத்திட்டத்தின் அடிப்படையில், 1911-ஆம் வருடம் மார்ச் மாதம் தான் முதன் முதலாக இடைநிலைக் கல்விச் சான்றிதழ் தேர்வு நடத்தப் பெற்றது.

1910-ஆம் ஆண்டுக்கு முன்னதாக நமது மாநிலத்தில், தற்போது உள்ளதைப்போல் பொதுத் தேர்வுகள் முறையாக்கப்படவில்லை. முன்னாளில் பிரத்தியேகமான சில தேர்வுகளை நடத்தி, குறிப்பிட்ட தகுதிகளை மட்டுமே பரிசோதித்து, அரசுப் பணிக்கென அவ்வத்துறைகளில் ஆட்களை நியமிக்கின்ற வகையில்தான் தேர்வுகள் நடத்தப்பட்டு வந்தன. இம்மாதிரி நடத்திய தேர்வுகளுக்கும் பல்கலைக் கழக படிப்பிற்கும்எவ்விதத் தொடர்பும் கிடையாது.

ஆரம்பக்கட்டத்தில், அரசுத் தேர்வு ஆணையர் பதவியை வருவாய்த்துறை வாரியத்தைச் சார்ந்த மூதிய உறுப்பினர்கள் ஏற்றிருந்தனர். சில ஆண்டுகட்குப் பின்னர் இத்தேர்வுத்துறை கல்வி இயக்ககத்துடன் இணைக்கப்பட்டது. 1975-ஆம் ஆண்டில் தமிழக அரசால் மீண்டும் தனித் துறையாக அமைக்கப்பட்டது.

சமூகப் பணிகளில் தலையாயதான கல்விப்பணியின் வளர்ச்சிக்காகப் பல்வாற்றாலும் திட்டங்கள் தீட்டி, அப்புனிதப் பணிக்காக விரிவான வளர்ச்சியை உருவாக்கி வருகின்ற இன்றைய நிலையில், அக்கல்விதனைப்பெற்றுவரும் மாணவர் தம் எண்ணிக்கையும் கூடவே பன்மடங்கு உயர்ந்து வருவது பெருமைக்குரியதாய் உணரப்படுகின்ற இந்தக் கட்டத்தில், பெருகி வரும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றாற்போல் நன்முறையில் பல வகைத் தேர்வுகளை நடத்த வேண்டிய பெரும் பொறுப்பினைக் கருத்தில் கொண்டு, அரசுத்தேர்வுகளுக்கெனத் தனியாக ஓர் இயக்குனரை நியமிக்க வேண்டிய இன்றியமையாமையை இன்றைய தமிழக அரசு உணர்ந்து, அதன் படி பள்ளிக் கல்வி இயக்குனருக்குச் சமமான தகுதியுடன் ஓர் இயக்குநரை நியமித்து அவர் தலைமையின் கீழ் தனியாக ஒரு துறை இயங்க வேண்டிய அவசியத்தையும் கருதி அரசுத் தேர்வு இயக்ககம் என்ற ஒரு தனித் துறையை அமைக்க முடிவு செய்து அவ்வாறே அமைத்துள்ளது தமிழக அரசு.

### தேர்வின் குறிக்கோள்

ஒரு மாணவனையோ மாணவியையோ தோல்வி பெறச் செய்ய வேண்டுமென்பது தேர்வின் குறிக்கோளாகாது. எல்லோரும் தேர்ச்சி பெற வேண்டுமென்பதே நமது இலக்கு. தமிழகத்தைப் பொறுத்தவரை நம் பள்ளியிறுதித் தேர்வின் தரம் சிறப்பாக அமைந்துள்ளது. மற்றைய மாநிலங்களும்—ஏன் பிற நாடுகளும் கூடப் பாராட்டும் வகையில் இத்தேர்வு அமைந்துள்ளது. ''உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்'' என்ற வகையில் மாணவரின் தரத்தை உயர்த்தி, அவரது திறமைகள் வளர வழிவகுப்பதே இத்துறையின் நோக்கம்.

பலமொழி மாணவரும் சிறப்பாகக் கல்வி கற்றுத் தேறும் வகையில் நாம், தமிழ், தெலுங்கு, மலையாளம், உருது கன்னடம், குஜராத்தி, அராபிக், பெர்ஷியன் முதலிய மொழிப் படிப்புக்கும் வகை செய்துள்ளோம். இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டோருக்கு இந்தி படிக்கும் வாய்ப்பும் அளித்துள்ளோம். வடமொழிக்கும் விருப்பப்பாடத்தில் இடமுண்டு. இவை தவிர பல விருப்பப்பாடங்களுக்கு வழிவகைகள் அமைத்துள்ளோம். பலநோக்குக் கல்வியின் அடிப்படையில் பல பிரிவுப் பாடங்களுக்கும் வழி செய்துள்ளோம். இப்படி எல்லாவற்றையும் கணக்கில் கொண்டால் சுமார் 131 வகையான கேள்வித்தாள்களை இத்துறை ஆண்டுதோறும் தயார் செய்து தமிழக மாணவ மாணவியர் தேர்வு எழுதி உய்ய வழி வகுக்கிறது. இவை தவிர 30 பிறவகையான தேர்வுகளை இத்தேர்வுத்துறை ஆண்டுதோறும் நடத்துகிறது.

தேர்வின் நோக்கமே உயர்வுதான். தன்னை ஒருவன் உயர்த்திக் கொள்ள வகை செய்வது தேர்வு என்னும் ஏணி.

தமிழக மாணவ மணிகள் வருங்காலங்களில் மற்றைய மாநிலங்களில் உள்ளோரை விடச் சிறப்பாகத் தங்களது எதிர்காலத்தை அமைத்துக் கொள்ள இத்துறை அயராது பாடுபடும்.

''விழிப்பு—கட்டுப்பாடு — கடமை'' என்பதே இத்துறையின் குறிக்கோள்களாக அமையும்.

சமன்செய்து சீர்தூக்கும்
கோல்போலமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி''

என்ற வள்ளுவத்தின் நீதியே எங்கள் ஒளிவிளக்கும்—வழிகாட்டியும் ஆகும்.

## ஆசிரியர் பேசுகிறார்!

தேசியக் கல்வி, ஆராய்ச்சி பயிற்சி அவை 12-வது அனைத்திந்திய பள்ளி ஆசிரியர்கள் அனுபவ ஆராய்ச்சிக் கட்டுரை கருத்தரங்குப் போட்டியில் தேசிய விருதுக்காக 21 ஆராய்ச்சிக் கட்டுரைகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டைச் சேர்ந்த திரு. கே. வி. அரங்கசாமி, திரு. ஒ. வி. கோபாலன் ஆகியோரின் ஆராய்ச்சிக் கட்டுரைகள் தேசியவிருது பெற்றுள்ளன.

இக்கருத்தரங்குகள் மூலம் தெரிந்தெடுக்கப்படும் கட்டுரைகள், 'ஆசிரியர் பேசுகிறார்' என்ற தலைப்பில் புத்தக வடிவில் வெளியிடப்படுகின்றன. மற்றக் கல்வியாளர்களும், பள்ளி ஆசிரியர்களும் இப்புத்தகத்தைப் படிக்க வேண்டும் என்பதுதான் இதன் நோக்கமாகும்.

# தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகள்

**சு. வையாபுரி**
கூடுதல் இயக்குநர்,
தொழில் நுட்பக் கல்வி.

நம் நாட்டின் பொருளாதார நிலை, வளர்ச்சியடைந்துள்ள ஏனைய மேலை நாடுகளை விடப் பின் தங்கிய நிலையில் உள்ளது, அதனைச் சீர்திருத்தி மீண்டும் நம் நாட்டை செல்வச் செழிப்புள்ளதாக ஆக்கவும், பெருகி வரும் மக்கள் தொகையினரின் வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் நாம் அனைவரும் முயற்சித்தல் நமது கடமையாகும். ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாகப் பணி புரிபவர்கள் தொழில் நுட்ப வல்லுநர்களே ஆவர். நம் நாட்டில், மிக வேகமாக முன்னேறிவரும் விஞ்ஞானம் நாள்தோறும் தோற்றுவிக்கும் புதிய புதிய கருவிகளைக் கையாள்வதற்கும், நவீன விஞ்ஞானக் கொள்கைகளைப் புரிந்து கொண்டு அவற்றை முறையாகப் பயன்படுத்திச் செயல் திட்டங்களை நிறைவேற்றுவதற்கும், உற்சாகம் மிகுந்த தரமான திறமையுள்ள இளம் நுட்பத் தொழிலாளர்கள் தேவை. இன்றைய இந்தியா மிக வேகமாகத் தொழில்துறையில் முன்னேற்றம் அடைய வேண்டுமானால் பொதுக்கல்வியும், தரமான தொழில்நுட்ப அறிவும்; கற்ற தொழில் முறைகளைச் செயலில் பயன்படுத்தி வெற்றி பெறக்கூடிய திறமையும் வாய்ந்த இளம் தொழிலாளர்களைச்சிறப்பாக நாம் உருவாக்க வேண்டும். இதனைக் கருத்தில் கொண்டுதான் தொழில்நுட்ப உயர்நிலைப் பள்ளிகள் தோற்றுவிக்கப்பட்டன.

**தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளியின் அவசியம்:**

அரிஸ்டாடில் என்னும் அறிஞர் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கல்வியானது எதன் எதன் சேர்க்கையில் அமைவது என்பதிலும், அது எவ்வாறு உரிய வழிகளில் கற்பிக்கப்பட வேண்டும் என்பதிலும் தீவிரக் கவனம் செலுத்த வேண்டும் என்று கருத்துத் தெரிவித்தார். அந் நாள் முதல் இன்று வரை எத்தகைய கல்வி அளிக்கப்பட வேண்டும் என்பதில் மாறுபட்ட கருத்துக்கள் நிலவி வருகின்றன. மாணவன் வாழ்வில் உயர்நிலை பெறத் தொழில் அடிப்படை கொண்ட கல்வி பெற வேண்டுமா அல்லது நீதி நெறி புகட்டும் கல்வி பெறவேண்டுமா அல்லது வேறு எந்த வகைக் கல்வி மூலம் அவன் மேம்பாடு அடைய முடியும் என்பது பற்றிய எண்ண வேறுபாடுகள் இருந்து வருகின்றன. இதற்கு ஒரு விடை காண்பது போல விட்ருவியஸ் என்ற அறிஞனின் கீழ்க்காணும் கூற்று அமைகிறது.

"எவன் ஒருவன் கல்வி அறிவை விடுத்துக் கைத்திறனையே பெற விழைகிறானோ அவன், தான் மேற்கொள்ளும் உழைப்புக்குத் தகுந்த உயர் நிலையை அடைய முடிவது இல்லை; மாறாக, கல்வி அறிவையும், கொள்கைக் கோட்பாட்டையுமே நம்பிக் கிடக்கும் ஒருவன் பொருளையன்றி அதன் நிழலையே தொடர்பவன் ஆவான். ஆனால் இவ்விருவரது அறிவையும் கொண்ட ஒருவன் தன் நோக்கம் நிறைவேறப் பெற்றுச் சிறப்பெய்துவான்"

சி. எல். கோஸ்லா என்னும் அறிஞர் தம் அறிக்கையில் 'இன்றைய விஞ்ஞான யுகத்தில் ஒரு நாட்டின் முன்னேற்றத்தைச் சரியாக அளந்தறியவல்ல அளவுக்கருவி, அந்த நாட்டு மக்களின் தொழில்நுட்ப வன்மையும் ஒவ்வொரு துறையிலும் பெற்றுள்ள ஆழ்ந்த பயிற்சியும் ஆகும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

எனவே கல்வியின் நோக்கமானது நமது மாணவர்களின் மனங்களிலே செய்திகளைப் போட்டு நிரப்புவதாக அல்லாமல், அவர்களின் அறிவுத் தாகத்தையும், செயல் திறனையும் தூண்டி எழச் செய்வதும், அவர்கள் அதைத் தாமாகவே பெறச் செய்வதுமாய் அமைதல் வேண்டும்.

**தற்போதைய நிலை:**

நம் நாட்டின் வளத்திற்கும், முன்னேற்றத்திற்கும் இன்றியமையாதது தொழிற்கல்வியே ஆகும். புதிய பொருள்கள், புதிய கருவிகள், புதிய முறைகள், புதிய கண்டுபிடிப்புகள் பெருகப் பெருக அவற்றிற்கு ஏற்பப் பயிற்சி பெற்ற தொழில் நுட்பக் கலைஞர்களை நாம் உருவாக்கிக் கொண்டே இருக்க வேண்டும். இது ஒரு தொடர்ச்சியான, திட்டமிட்ட வளர்ச்சியாக அமைய வேண்டும். இதைச் செயல்படுத்தும் வகையில்தான் தொழில் நுட்பப் பள்ளிப் படிப்பு, திறமையான தொழில் திறன் மிக்க மாணவர்களை உருவாக்குவதாகவும், மாணவர்களையும் தொழிலதிபர்களையும் கவரக் கூடியதாகவும், உயர்நிலைப் பள்ளிக் கல்விக்குப் பதிலாகத் தொடங்கும் மற்றொரு சாதாரணபாடத் திட்ட அமைப்பு முறை கொண்டதாக இல்லாமலும், மற்றும் அது பல்துறைத் தொழிற் பயிற்சிக் கல்லூரிகளில் சேருவதற்கான ஒரு பெரும் செலவு கொண்ட தயாரிப்பாக அல்லாமலும், படித்து முடித்த பின் பயனுள்ள ஒரு தொழிலை மேற்கொள்ளும் தன்மையை ஊட்டவல்லதான தொழில் சான்றிதழுக்கு வழி செய்யக் கூடிய வகையிலும் அமைந்து உள்ளது. இப்பள்ளிகளில் தரப்படும் கல்வியின் கால அளவு, பொதுவான வரையறைக்குட்படாமல் பாடத் திட்டங்களுக்குத் தகுந்தாற்போல இருப்பது அவசியம். பொதுவாக, இப்பள்ளிகள் பொதுக் கல்விக்கு முக்கியத்துவம் தருவதோடு திறமையான தொழிலாளர்களையும் உருவாக்குகின்றன. எனவே அறிவுத் திறனையும், செயல் திறனையும் பெரிதும் வளர்க்க உதவுவது தொழில்நுட்ப உயர்நிலைப் பள்ளிக் கல்வியாகும்.

தற்போது தமிழ் நாட்டில் 14 தொழில் நுட்பப் பள்ளிகள் உள்ளன. அவைகளின் விவரம் கீழ்வருமாறு :

அரசு பல்துறைத் தொழில் நுட்பக் கல்லூரியுடன் இணைக் கப்பட்ட தொழில்நுட்ப உயர் நிலைப் பள்ளிகள் :

1. சென்னை மையப் பல் துறைத் தொழிற்பயிற்சிக் கல்லூரியுடன் இணைக்கப்பட்ட தொழில்நுட்ப உயர்நிலைப் பள்ளி.

2. மதுரை தமிழ்நாடு பல் துறைத் தொழிற்பயிற்சிக் கல்லூரியுடன் இணைக்கப்பட்ட தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளி.

3. கோவை அரசினர் பல் துறைத் தொழிற்பயிற்சிக் கல்லூரியுடன் இணைக்கப்பட்ட தொழில்நுட்ப உயர்நிலைப் பள்ளி.

4. வேலூர் அரசினர் பல் துறைத் தொழிற்பயிற்சிக் கல்லூரியுடன் இணைக்கப்பட்ட தொழில்நுட்ப உயர்நிலைப் பள்ளி.

5. நாகர்கோவில் பல் துறைத் தொழிற்பயிற்சிக் கல்லூரியுடன் இணைக்கப்பட்ட தொழில்நுட்ப உயர்நிலைப் பள்ளி.

டன் இணைக்கப்பட்ட அரசு தொழில்நுட்ப உயர்நிலைப் பள்ளிகள் :

8. காரைக்குடி அழகப்பா பல்துறைத் தொழிற்பயிற்சிக் கல்லூரியுடன் இணைக்கப்பட்ட தொழில்நுட்ப உயர்நிலைப் பள்ளி.

9. காஞ்சீபுரம் பக்தவத் சலம் பல்துறைத் தொழிற் பயிற்சிக் கல்லூரியுடன் இணைக் கப்பட்ட தொழில்நுட்ப உயர் நிலைப்பள்ளி.

10. குடியாத்தம் ராஜ கோபால் பல்துறைத் தொழிற் பயிற்சிக் கல்லூரியுடன் இணைக் கப்பட்ட தொழில் நுட்ப உயர்நிலைப்பள்ளி.

11. நாகை வலிவலம்தேசிகர் பல்துறைத் தொழிற்பயிற்சிக் கல்லூரியுடன் இணைக்கப்பட்ட தொழில்நுட்ப உயர்நிலைப் பள்ளி.

தனியார் பல்துறைத் தொழிற்பயிற்சிக் கல்லூரிகளு டன் இணைந்த தனியார் தொழில்நுட்ப உயர்நிலைப் பள்ளிகள் :

லூரியுடன் இணைக்கப்பட்ட தொழில்நுட்ப உயர்நிலைப் பள்ளி.

இப் பள்ளிகளின் சேர்ப்பு எண்ணிக்கை ஆண்டொன் றுக்கு 840 மாணவர்களாகும்.

பாடத் திட்டம் :

தொழில்நுட்பப் பள்ளிகளில் மூன்றாண்டுக் காலப் பாடத் திட்டம் அளிக்கப்படுகிறது. இதில் பழைய மூன்றாவது படிவம் (III Form) தேறியவர் களோ அல்லது தற்போதைய எட்டாம் வகுப்புப் படித்த மாணவர்களோ சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். இவர் கள் சென்னை மாநிலத்தில் உள்ள எந்த ஒரு அங்கீகரிக்கப் பட்ட பள்ளியிலாவது படித்த வர்களாய் இருக்கவேண்டும். இப் பள்ளியில் சேரும்ஆண்டின் ஜூலை திங்கள் முதல் நாள் அம்மாணவன் 13 வயது நிரம் பியவனாகவும் 17 வயதுக்குட் பட்டவனாகவும் இருத்தல் அவசியம்.

தொழில்நுட்ப உயர்நிலைப் பள்ளிக் கல்வி முறை இரு விரி வான தலைப்பின் கீழ் அளிக்கப்



6. திருச்சி அரசினர் பல் துறைத் தொழிற்பயிற்சிக் கல்லூரியுடன் இணைக்கப்பட்ட தொழில்நுட்ப உயர்நிலைப் பள்ளி.

7. தூத்துக்குடி அரசினர் பல்துறைத் தொழிற்பயிற்சிக் கல்லூரியுடன் இணைக்கப்பட்ட தொழில்நுட்ப உயர்நிலைப் பள்ளி.

தனியார் பல்துறைத் தொழிற்பயிற்சிக் கல்லூரியு

12. பொள்ளாச்சி நாச்சி முத்து பல்துறைத் தொழிற் பயிற்சிக் கல்லூரியுடன் இணைக் கப்பட்ட தொழில்நுட்ப உயர் நிலைப் பள்ளி.

13. தாழையூத்து சங்கர் பல் துறைத் தொழிற்பயிற்சிக் கல் லூரியுடன் இணைக்கப்பட்ட தொழிற்நுட்ப உயர்நிலைப் பள்ளி.

14. திருச்சி சேஷஸாயி பல் துறைத் தொழிற்பயிற்சிக் கல்

படுகிறது. (1) பொதுக் கல்வி —தமிழ், ஆங்கிலம், சமூக வியல், பூகோளவியல், கணிதம், பௌதிகம், இரசாயனம் மற்றும் வேதியல் கொண்டது. (2) தொழில்நுட்பக் கல்வி — பொதுப் பொறியியல், வரைவுப் பொறியியல், மற்றும் பட் டறைப் பயிற்சி கொண்டது. அறிவியலும், பொறியியலும் முக்கிய நோக்கமாகக்கொண்டு பயிற்சி ஆங்கிலத்தில் அளிக்கப் படுகிறது.

இத்தொழில் நுட்ப உயர்

நிலைப் பள்ளிகள் பொதுக்கல்வியுடன் இணைந்த தச்சு வேலை, வார்ப்பட வேலை, கருமான் வேலை, அமைப்பு வேலை, இணைப்பு வேலை, வெல்டிங், இயந்திரக் கடைசல் வேலை போன்ற தொழில் நுட்பம் வாய்ந்த பயிற்சியும் அளிக்கின்றன. சென்ற கல்வியாண்டு முதல் தொழில் நுட்ப அறிவியல், வேளாண்மை ஆகிய துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சிகளைக் கருத்திற் கொண்டு, கீழ்க் காணும் பாடத் திட்டங்கள் தொழில்நுட்ப உயர்நிலைப் பள்ளிகளில் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

1. மோட்டார் சைக்கிள் பழுது பார்த்தல்.

2. ஸ்கூட்டர் பழுது பார்த்தல்.

3. குழாய், இயந்திரம் பழுது பார்த்தல்.

4. டிராக்டர் பழுது பார்த்தலும், பராமரித்தலும்.

5. வீட்டில் மின் வசதி செய்தல், தெரு விளக்குப் போடுதல்.

6. பூச்சிக் கொல்லி மருந்து, தெளிப்பான் போன்ற விவசாயக் கருவிகளைப் பழுதுபார்த்தலும், பராமரித்தலும்.

7. மற்றும் அச்சுத்தொழில்.

இப்பள்ளிப் பாடத் திட்டத்தை சென்னைப் பல்கலைக் கழகம் மெட்ரிகுலேஷனுக்கு இணையாக அங்கீகரித்துள்ளது. இதில் பயின்றோர் புகுமுக வகுப்பில் சேரத் தகுதியுடையவராவர். தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளியில் படித்து முடித்தவுடன் நேரடியாகத் தொழிற்சாலையில் சேர்ந்து பயிற்சி பெற்ற தொழிலாளர்களாக வேலை பார்க்கலாம். இதில் படித்து முடிந்தவுடன் தொடர்ந்து பல்துறைத் தொழிற்பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்து படிக்கலாம். இதில் படித்தவர்களுக்கு எனச் சில தனிச் சலுகைகளும் தரப்படுகின்றன. சாதாரண ஏட்டுக் கல்வி பெற்ற பிற மாணவர்களைக் காட்டிலும் தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் சிறப்பான தொழிற் கல்வியும் தரமான தொழிற் பயிற்சியும் பெறுகிறார்கள். தொழில்நுட்ப உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் ஒரு குறிப்பிட்ட தொழிற் பிரிவில் சிறப்புப் பயிற்சி பெறுவதால்



பெரும்பான்மையான தொழிற்சாலைகள் அவர்களையே விரும்பி வேலைக்கு அமர்த்துகின்றன. சிறந்த அனுபவ அறிவும், தரமான கைத்திறனும் பெறுவதால் அவர்கள் உடனடியாக மற்றவர்களைவிட உற்பத்தி முறைகளை எளிதாகப்பின்பற்றி அதிக இலாபம் பெறமுடியும். தொழில்நுட்ப உயர்நிலைப் பள்ளியில் பயிலும் போதே பல செயல்முறைத் திட்டங்களில் பங்கு கொள்வதால் திட்டம் அமைத்தல், தேவையான பொருட்களையும், கருவிகளையும் தேர்ந்தெடுத்தல், செயல் முறைகளை ஆராய்தல் முதலிய அனைத்திலும் மாணவர்கள் பெரும் பங்கு கொண்டு பிற்காலத்தில் சொந்தமாகவும் தொழில் செய்யப்போதிய திறமையும் தன்னம்பிக்கையும் பெறுகின்றனர். மேலும் இம் மாணவர்கள் நடைமுறைக்கு ஏற்பச் செயலறிவையும் பெறுகிறார்கள்.

## தொழில்நுட்ப உயர்நிலைப் பள்ளியின் சிறப்பு:

பொதுவாக, சாதாரண உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களை விடத் தொழில் நுட்பப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் கீழ்க்கண்ட முக்கிய காரணங்களுக்காக உயர்வாகக் கருதப் பெறுகிறார்கள் :

1. தொழில் நுட்பப் பள்ளியில் பயிலும் மாணவர்கள் உடனடியாகத் தொழிற்சாலைகளில் வேலை வாய்ப்புப் பெறுவதோடு அவர்களுடைய பணியில் குறுகிய காலத்திலேயே மேற்பார்வையிடும் பதவிகளுக்கு உயர்த்தப்படுகிறார்கள்.

2. தொழில் நுட்பப் பள்ளியில் பயிலும் மாணவர்கள் விரும்பினால் எந்த ஒரு கலைக் கல்லூரியிலும் சேர்ந்து மேற்படிப்பைத் தொடரலாம்.

3. தொழில் நுட்பப் பள்ளியில் பயின்ற மாணவர்கள் தொழில் நுட்பக் கல்வியில் மேற்படிப்பைத் தொடர விரும்பினால் அவர்களுக்குச் சிறப்புச் சலுகைகளின் அடிப்படையில் அனுமதி அளிக்கப்படும்.

4. தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு இலவசக் கல்வி வழங்கப்படுகிறது.

5. தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களில் 50 விழுக்காடு மாணவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்குப் பத்து மாதங்கள் வீதம் முதல் இரண்டு ஆண்டுகளுக்கு மாதந் தோறும் 20 ரூபாயும் மூன்றாவது ஆண்டு மாதந்தோறும் 30 ரூபாயும் ஒவ்வொரு மாணவனுக்கும் வழங்கப்படுவதால் பெரும்பான்மையான மாணவர்கள் தம் பெற்றோர்களுக்கு சுமையாக இருப்பதில்லை.

6. தொழில்நுட்பப் பள்ளியில் பயின்று சான்றிதழ் பெற்ற மாணவர்கள் மத்திய, மாநில அரசு வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் உபகாரச் சம்பளம் பெற்று நல்லதொரு வேலை கிடைக்கும் வரை தொழிலகங்களிலும் கல்விக் கூடங்களிலும் பயிற்சி பெறலாம்.

இவ்வாறு சிறந்த பயனுள்ள வகையில் கல்வி வழங்கும் தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகள் எண்ணிக்கையில் பெருகிட வேண்டும். இப் பள்ளிகள் சிறந்த நுட்பத் தொழிலாளர்களை உருவாக்குவதன் மூலம் நாட்டில் தொழில் வளர்ச்சி பெருகிடும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

# அரிசன, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அரசு அளித்துள்ள சலுகைகள்!

**''ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்!''**—என்ற இலட்சியத்துடன் செயலாற்றிவரும் தமிழ்நாடு அரசு, ஏற்றத் தாழ்வற்ற சமதர்மச் சமுதாயத்தை அமைத்திட வேண்டுமென்பதற்காக இந்தியாவிலேயே முதன் முதலாகப் பின்கண்ட திட்டங்களை நிறைவேற்றி சாதனை படைத்துள்ளது!

## 1 அரிசன நலங்காக்கும் அரசு!

ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அடக்கி ஒடுக்கப்பட்டு வந்த அரிசன மக்கள், அரசியல்—பொருளாதார—சமுதாய முன்னேற்றம் பெற வேண்டுமென்பதற்காக இன்றையத் தமிழ்நாடு அரசு இந்தியாவிலேயே வேறெந்த மாநிலங்களிலும் இல்லாத அளவுக்குப் பின்கண்ட சாதனைகளை நிறைவேற்றியுள்ளது!

* வேலைவாய்ப்பு, கல்லூரிகளிலே இடம் அளித்தல் போன்றவைகளில் அரிசன மக்களுக்கு எனவிருந்த 16 சத ஒதுக்கீட்டை 18 சதமாக உயர்த்தியது!

* கலப்புத் திருமணம் செய்து கொள்ளும் மணமக்களில் யாரேனும் ஒருவர் அரிசன வகுப்பினராக இருந்தால், அம் மணமக்களுக்கு 1.5 சவரன் மதிப்புள்ள தங்கப் பதக்கமும், சிறு தொழில் துவங்க வட்டியில்லாக் கடனும், 3 சென்ட் பரப்புள்ள வீட்டு மனையும், 200 ரூபாய் ரொக்கப் பரிசும் வழங்கி வருகிறது! 31—1—1975 வரை 317 தங்கப் பதக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன!





* 1975—76-ஆம் ஆண்டிற்குள் அரிசனங்களுக்கென ஒரு இலட்சம் வீடு கட்டி இலவசமாக வழங்கிட தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தை 1—3—1974-ல் துவக்கியது!

* அர்ச்சிக்கத் தகுதியுடைய தேர்வு பெற்ற அரிசன மக்களையும் ஆலயங்களிலே அர்ச்சகர்களாக நியமிக்க வழி செய்யும் அரசியல் சட்டத் திருத்தத் தீர்மானத்தைத் தமிழக சட்டமன்றப் பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றி இந்திய அரசுக்கு அனுப்பியுள்ளது!

* அரிசன நலங்காப்பதற்கென்றே 2—5—1969 முதல் தனித் துறையை அமைத்தது!

* காந்தி அடிகள் நினைவு சிறப்புக் கல்வி உதவித் தொகைத் திட்டத்தை 1970—71 முதல் துவக்கி, இதுவரை 351 அரிசன மாணவர்களுக்குப் படிப்பு உதவித் தொகை வழங்கியுள்ளது!



அரிசன மக்கள் பொருளாதார மேம்பாடு பெறுவதற்காக ஒவ்வொரு வருக்கும் உழவுமாடுகள் வாங்க 600 ரூபாயும், கிணறுகள் தோண்ட 2,000 ரூபாயும் கடன் வழங்கப்படுகிறது!

இத்திட்டத்திற்காக 1975—76-ஆம் ஆண்டில், அரிசனங்களுக்கென 6 இலட்சம் ரூபாயும், பழங்குடி மக்களுக்கென 3.5 இலட்சம் ரூபாயும் ஒதுக்கப் பட்டுள்ளது!

* அரிசன மக்கள் சிறு தொழில் செய்துபிழைப்பதற்காக 1968—69 முதல் 1974—75 வரை 8,672 பேர்களுக்கு 53.57 இலட்சம் ரூபாயைக் கடனுதவி வழங்கியுள்ளது!

* 1966—67-ஆம் ஆண்டில் அரிசன நலத்துறை பிற்பட்டோர் நலத்துறை ஆகிய 2 துறைகளுக்கும் சேர்த்து செலவிடப்பட்ட தொகை ... ... 6.17 கோடி ரூபாய்

* 1974—75-ஆம் ஆண்டில் அரிசன நல மேம்பாட்டிற்கு மட்டும் ஒதுக்கப்பட்டுள்ள தொகை ... ... 10.89 கோடி ரூபாய்

* 1966—67-ஆம் ஆண்டில் அரிசன மாணவர்களுக்காக இருந்த விடுதிகள் ... ... ... ... 388

* அரிசன மாணவர்களுக்காக 1974—75-ஆம் ஆண்டில் உள்ள விடுதிகள் ... ... ... ... 555




* 1966—67-ஆம் ஆண்டில் படிப்பு உதவித் தொகை பெற்ற அரிசன மாணவர்கள் ... ... 2.70 இலட்சம்

* 1974—75-ஆம் ஆண்டில் படிப்பு உதவித் தொகை பெற்ற அரிசன மாணவர்கள் ... ... ... 4.66 இலட்சம்

* இடுகாடுகளுக்குச் செல்ல பாதையில்லாத அரிசனக் காலனிகளுக்கு இடுகாட்டுப் பாதை அமைப்பதற்காக—முதன் முதலாக—1975—76-ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை ... ... 30 இலட்சம் ரூபாய்

* இத்திட்டத்தால் உடன் பயன் பெறவிருக்கும் அரிசனக் காலனிகள் ... 6,800

| | |
|---|---|
| இன்றைய தமிழ்நாடு அரசால் துவக்கப்பட்ட தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தால் இது வரை கட்டி முடிக்கப்பட்டு அரிசன மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ள வீடுகள் ... ... ... ... ... | 15,000 |
| தமிழ் நாட்டிலுள்ள அரிசனக் காலனிகள் ... ... | 24,583 |
| மின் வசதி பெற்றுள்ள அரிசனக் காலனிகள் ... ... | 23,920 |
| பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியைப் பெற்றுள்ள அரிசனக் காலனிகள் ... ... ... ... | 21,268 |

## 2 பிற்பட்டோர் நலங்காக்கும் அரசு!

தமிழ் நாட்டில் பெரும்பகுதியினராக உள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் அரசியல்—பொருளாதார—சமுதாய மேம்பாட்டிற்காக இன்றைய தமிழ்நாடு அரசு 2—5—1969-ல் பிற்பட்டோர் நலத் துறையை ஏற்படுத்தி, வரலாறு காணாத சாதனையை ஏற்படுத்தியதுடன், இந்தியாவிலேயே வேறெந்த மாநிலத்திலும் இல்லை என்று சொல்லத்தக்க அளவிலே, முதன் முதலாகப் பிற்பட்ட வகுப்பினருக்கென ஒரு தனி அமைச்சரை ஏற்படுத்தியுள்ளது!

வேலை வாய்ப்பு, கல்லூரிகளிலே இடம் அளித்தல் போன்றவைகளில் பிற்பட்ட வகுப்பினருக்கென இருந்த 25 சத ஒதுக்கீட்டை இன்றைய அரசு 31 சதம் என்று ஆக்கியது! இது சமுதாயத்திலே ஒரு மறுமலர்ச்சியைத் தோற்றுவித்துள்ளது என்பது சமுதாயத்தின் கடந்த கால வரலாற்றை எண்ணிப் பார்க்கின்றவர்களுக்கே புலனாகும்!




| | |
|---|---|
| 1966—67-ஆம் ஆண்டிலே பிற்பட்ட வகுப்பினர்களின் நலப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த தொகை ... | 1 கோடி ரூபாய் |
| 1975—76-ஆம் ஆண்டிலே ஒதுக்கப்பட்டுள்ள தொகை ... | 5.78 கோடி ரூபாய் |
| 1966—67-ஆம் ஆண்டிலே படிப்பு உதவித் தொகை பெற்ற பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் ... ... ... | 31,405 |
| 1974—75-ஆம் ஆண்டிலே படிப்பு உதவித் தொகை பெற்ற பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் ... ... ... | 1,75,949 |

*1966—67*-ஆம் ஆண்டிலே படிப்பு உதவித் தொகை பெற்ற குற்றப் பரம்பரைப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பு மாணவர்கள் ... *26,364*

*1974—75*-ஆம் ஆண்டிலே படிப்பு உதவித் தொகை பெற்ற குற்றப் பரம்பரைப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பு மாணவர்கள் ... *77,564*

*1966—67*-ஆம் ஆண்டிலே பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கென இருந்த விடுதிகள் ... ... ... *11*

*1974—75*-ஆம் ஆண்டிலே பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கென இருந்த விடுதிகள் ... ... ... *177*

*1966—67*-ஆம் ஆண்டிலே குற்றப் பரம்பரைப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கென இருந்த விடுதிகள் ... *34*

*1974—75*-ஆம் ஆண்டிலே குற்றப் பரம்பரைப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கென இருந்த விடுதிகள் ... *54*

*1966—67*-ஆம் ஆண்டிலே இலவசமாகக் கருவிகள் பெற்ற சவரத் தொழிலாளிகள் மற்றும் சலவைத் தொழிலாளிகளின் எண்ணிக்கை ... ... ... ... *1,440*

*1974—75*-ஆம் ஆண்டிலே இலவசமாகக் கருவிகள் பெற்றோர்களின் எண்ணிக்கை ... ... ... *3,961*



## 3 மீனவர்களுக்கு வீடு கட்டும் திட்டம்!

கடலை நம்பி வாழ்ந்து கடுங் காற்றுக்கும் கடல் கொந்தளிப்புக்கும் இடையே குடிசைகளில் பாதுகாப்பின்றி வாடும் மீனவப் பெருங்குடி மக்களுக்காக வீடு கட்டித் தரும் (அரிசன வீட்டு வசதி திட்டம் போல்) திட்டத்தை துவங்கிட 1975—76-ஆம் ஆண்டில் முதற் கட்டமாக ஒதுக்கப்பட்டுள்ள தொகை ... ... 2 கோடி ரூபாய்.

இத்திட்டத்தின் கீழ் கட்டப்படவிருக்கும் வீடுகளின் எண்ணிக்கை ... 5,000

எனவே சமுதாயத்தின் அடித்தளத்து மக்களின் வாழ்வை வளமாக்கி, ஏற்றத்தாழ்வற்ற சமதர்மச் சமுதாயம் அமைக்கும் தமிழ் நாடு அரசின் சமூக நலத் திட்டங்கள் வெற்றி பெற உங்கள் ஒத்துழைப்பை நல்கிடுவீர்!

—ஆர். எம்.